21 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059

E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com

416-282-4978

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HOMELIFE HIGHER STANDARDS
•Independently owned and operated
HomeLife/GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 29, Mississauga
416.321.6969 / 905.712.2666

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

நதி 21 | பாலம் 06 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 15, 2011

# ஜப்பானில் பாரிய பூகம்பம்!

**பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் இறந்திருக்கலாம்?**

இதுவரை காலமும் ஜப்பானில் நடந்திராத அளவு மிகப்பெரிய பூகம்பம் ஜப்பானில் கடந்த மார்ச் 11, 2011 மாலை 2.46 மணிக்கு ஏற்பட்டது. பூகம்பத்தை பற்றிய தரவுகள் 1800ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் இருந்தே ஆவணப்படுத்தப் பட்டு வருகின்றன. இத்தரவுகளின்படி இதுவரையும் 8.9 அளவு பெரிய பூகம்பம் ஜப்பானில் வரவில்லை.



இப்பூகம்பம் ஜப்பானில் வடகிழக்கு கரையில் இருந்து 125 கிலோமீற்றர் கிழக்கில் கடலினுள் 24 கிலோமீற்றர் ஆழத்தில் நடைபெற்றது. பூகம்பத்தை தொடர்ந்து வந்த ஆழிப்பேரலையால் (Tsunami) பலத்த சேதங்கள் ஏற்பட் டுள்ளன. இதுவரை இப்பெரிய பூகம்பத்தை தொடர்ந்து 50 இற்கு மேற்பட்ட சிறிய பூகம்பங்கள் ஜப்பானில் ஏற்பட்டுள்ளன.

இப்பூகம்பத்தாலும் அதைத் தொடர்ந்து வந்த ஆழிப்பேரலையாலும் பத்தாயிரத் துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்க லாம் என அஞ்சப்படுகின்றது. ஆழிப்பேரலையால் பல கட்டிடங்கள் அழிந்துள்ளன. புகைவண்டிகள், கப்பல்கள், வாகனங்கள் எனப் பல நீரால் அள்ளப்பட்டு கடலினுள் கொண்டு செல்லப்பட்டன.

இதற்கு முன்னர் 1923 இல் கன்ரோ (Kanto) நகரில் ஏற்பட்ட 8.3 அளவு பூகம்பமே ஜப்பானில் மிகப்பெரிய பூகம்பமாகும். இதன்போது 143,600 மக்கள் கொல்லப்பட்டனர்.

இம்முறை ஏற்பட்ட பூகம்பத்தால் ஜப்பானிலுள்ள இரண்டு அணுமின் உற்பத்தி நிலையத்தில் விபத்து ஏற்பட்டுள்ளது. இவ்விரண்டு அணுமின் உற்பத்தி நிலையத்தில் உள்ள ஐந்து அணு உலைகளுக்கு (Reactors) பாதிப்பு ஏற்பட்டுள்ளன. இவ் அணுமின் உற்பத்தி நிலையத்தின் மின் உலைகள் பூகம்பத்தை தொடர்ந்து திட்டமிட்டபடி மூடிக் கொண்டாலும் இவற்றை குளிரவைத்து கொண்டிருந்த சாதனங்கள் இயங்க மறுத்ததாலேயே விபத்து ஏற்பட்டது.

முதலில் Fukushima - Daiichi அணுமின் உற்பத்தி நிலையத்தின் முதலாவது அணு உலையின் குளிரவைக்கும் சாதனங்கள் இயங்க மறுத்தன. அதை தொடர்ந்து அவசர உதவிக்கு வைத்திருந்த குளிர வைக்கும் சாதனங்களும் இயங்க மறுத்தன. இதனால் அணு உலையின் வெப்பம் அதிகரித்து கொண்டு செல்வதாகவும் அவை உருகும் நிலைக்கு சென்றுவிடும் ஆபத்து வந்து விடலாம் என அஞ்சப்படுகின்றது. இதே நிலைமை Fukushima - Daini அணுமின் உற்பத்தி நிலையத்தின் முதலாவது அணு உலைக்கும் ஏற்பட்டுள்ளது. இவற்றை தொடர்ந்து ஜப்பானிய அரசு அவசரகால நிலையை அறிவித்து இந்த அணுமின் உற்பத்தி நிலையங்களைச் சுற்றி 10 கிலோமீற்றர் தூரத்திலுள்ள மக்களை பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றியுள்ளது.

இந்த இரண்டு அணுமின் உற்பத்தி நிலையத்திலுள்ள ஆறு அணு உலைகள் உருகும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன. இவற்றை விட மற்றைய மூன்று அணுமின் உற்பத்தி நிலையங்களில் உள்ள மின் உலைகள் பூகம்பத்தை தொடர்ந்து திட்டமிட்டபடி மூடிக்கொண்டதுடன் அவற்றின் குளிரவைக்கும் சாதனங்கள் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஜப்பானில் 54 மின் உலைகள் இருக்கின்றன. அவற்றில் 10 மட்டுமே பூகம்பத்தை தொடர்ந்து மூடப்பட்டுள்ளன.

ஜப்பானின் அணுபாதுகாப்பு கழகத்தை சேர்ந்த Ryohei Shiomi கூறுகையில் அணுஉலைகள் உருகினால் அவற்றால் வரும் பாதிப்பு 10 கிலோமீற்றர் சுற்று வட்டாரத்திற்கு மேல் செல்லமாட்டாது என்றார். இந்த பூகம்பம் நடைபெற்ற இடம் பூகம்பம் பற்றிய ஆராய்ச்சியாளர்களால் சரியாக இப்படி ஒரு பூகம்பம் வரும் என கணிக்கப்பட்ட இடமாகும். எனவே ஜப்பானில் கட்டிடங்கள் எல்லாம் இத்தகைய பூகம்பத்தை தாங்கக் கூடியதாகவே கட்டப்பட்டன. இதனால்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Great Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி<
8 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
• 53 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 20 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# ஒன்ராறியோ மாகாண அரசிற்கான தேர்தல்

கடந்த பல ஆண்டுகளாக கனேடிய தமிழ் சமுதாயம் கனடாவில் தனது வேர்களை ஆழப்பதித்து வருகிறது. கனேடிய தமிழர்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்தது டன் பல விடயங்களில் கனேடிய தேசிய நீரோட்டத்திலும் கலந்து வருகிறார்கள். இது விடயத்தில் எமது சமுதாயம் கடந்த இரண்டு வருடங்களிற்கு முன்னர் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்துள்ளது. அவ் அத்தியாயத்தை நாங்கள் இன்னும் பரந்த நோக்குடன் எமது சமுதாயத்தில் பல வழிகளில் வளர்ச்சியடைய வைக்க விரும்புகிறோம். இதன் மூலம் எம்மக்களின் குடிசார் உரிமைகளை விளக்கி கனேடிய ஜனநாயக நீரோட்டத்தில் எம்மக்களையும் ஒன்றுசேர வைக்க விரும்புகிறோம்.

ஒன்ராறியோ மாகாண அரசிற்கான தேர்தல் இவ்வருடம் ஒக்ரோபர் மாதம் ஆறாம் திகதி நடைபெறவுள்ளது. இத்தேர்தல் களத்தைப் பற்றி விளம்பரத்தில் ஒழுங்காக ஒரு பத்தி எழுதலாம் என தீர்மனித்துள்ளோம். மாகாண அரசு எமது நாளாந்த வாழ்வின் பல விடயங்களில் அதிகாரம் செலுத்தும் நிலையில் இருப்பது உங்களில் பலருக்கு தெரிந்த விடயம். பிள்ளைகளின் கல்வி, சுகாதார வசதி (Health Care), நகரங்களிற் கான நிதிக்கொடுப்பனவு எல்லாம் மாகாண அரசின் கட்டுப்பாட்டிற்குள் வரும் விடயங்களாகும்.

2003 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாகாண அரசிற்கான தேர்தலில் லிபரல்கட்சி பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றி டால்ரன் மக்கன்ரியின் (Dalton McGuinty) தலைமையில் ஆட்சி அமைத்தது. இதைத் தெடர்ந்து 2007 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாகாண அரசிற்கான தேர்தலில் லிபரல் கட்சி அப்போதைய யோன் ரோறி (John Tory) தலைமையிலான பழைமைவாத கட்சியை தேர்தலில் தோற்கடித்து மீண்டும் ஆட்சி அமைத்தது.





2007 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் பழைமைவாதக்கட்சியின் தேர்தல் பிரசார மான “எல்லா சமயசார்பு பாடசாலைகளுக் கும் மாகாண அரசின் நிதி உதவி வழங்கப் படும்” என்ற கோசமே முன்னணியில் விவாதிக்கப்பட்டது. இப்பிரசாரம் ஒன்ராறியோ மாகாண மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாததால் அவர்கள் லிபரல் கட்சிக்கு மீண்டும் வாக்களித்து அக்கட்சியை பெரும்பான்மை பலம் கொண்ட அரசாங்கமாக்கினார்கள்.

இதன் பின்னர் பழைமைவாத கட்சி 2008 இல் ரிம் கூடக் (Tim Hudak) ஐ தமது கட்சி தலைவராக தெரிவு செய்தார்கள். ரிம் கூடக் பலகாலமாக நயகரா பகுதியின் ஒன்ராறியோ நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். இவர் முன்பு மைக்கரிஸ் (Mike Harris) ஐ பிரதமராக கொண்டு பழைமைவாத கட்சி ஒன்ராறியோவை ஆட்சி செய்த காலத்தில் ஒரு அமைச்சராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒன்ராறியோவின் புதிய ஜனநாயக கட்சியின் தலைவராக அன்ரியா ஹோவர்த் (Andrea Horvath) பதவிவகிக்கின்றார். இவர் கமில்ரனை (Hamilton) சேர்ந்தவர். பல தொழிற்சங்கங்களின் ஆதரவாலேயே இவரிற்கு புதிய ஜனநாயக கட்சியின் தலைமை பொறுப்பு பெறமுடிந்தது.

2011 இல் நடைபெற இருக்கும் தேர்தலில் கலந்து கொள்ளும் கட்சிகளுக்கிடையே பல விடயங்கள் பேசப்படவுள்ளன. அண்மையில்



நடந்து முடிந்த ரொறொன்ரோ மாநாகர சபைக்கான தேர்தலை வைத்துப் பார்த்தால் அண்மைக்கால பொருளாதார இறுக்கம் (Recent Economic recession) மற்றும் அரச முன்னேற்றத்தை எவ்வாறு செய்தல் என்பவை பற்றிய விவாதங்கள் தேர்தல் களத்தில் சூடுபிடிக்கும் என எதிர்பார்க்கலாம்.

இவற்றை விட கல்வி, சுகாதார வசதி, முழுநாள் பாலர் வகுப்புக்கள், அரசதொழிற்சங்கங்களின் பங்கு மற்றும் நகரசபைகளுக்கான நிதிக்கொடுப்பனவு என்பனவும் தேர்தல் களங்களில் விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கலாம்.

கணினி மூலம் சுகாதாரவசதி (E - Health), சக்தி வளங்கள், மற்றும் மைக்கரிஸ் அரசில் ரிம் கூடக்கின் பங்கு போன்றவையும் விவாதிக்கப்படலாம்.

இவை பற்றிய விமர்சனங்கள் விவாதங்களை இனி வரும் விளம்பரம் இதழில் ஆராய்வோம்.

- பார்த்தி கந்தவேள் -



# ஜப்பானில்...



இப்பூகம்பத்தால் பெரிய உயிரிழப்போ சேதங்களோ ஏற்படவில்லை. பூகம்பத்தை தொடர்ந்து வந்த ஆழிப்பேரலையாலேயே மிகப்பெரிய உயிரிழப்புக்களும் கட்டிட சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

Fukushima - Daiichi அணுமின் உற்பத்தி நிலையத்திலுள்ள மூன்று அணு உலைகளிலும் கடந்த மூன்று நாட்களில் ஏற்பட்ட மூன்று வெடிவிபத்துக்களை தொடர்ந்து சுற்றுப்புற சூழலில் பரவியுள்ள கதிரியக்கத்தினளவு மனிதர்களை பாதிக்கும் அளவிற்கு வந்துள்ளது.

இதை தொடர்ந்து ஜப்பானிய பிரதமர் Naoto Kan விடுத்த அறிக்கையில் அணுமின் நிலையத்திலிருந்து 10 கிலோ மீற்றர் தூரம் வரையுள்ள மக்களை பாதுகாப்பாக அப்புறப்படுத்தி விட்டோம், ஆனால் 30 கிலோ மீற்றர் தூரம் வரை உள்ள மக்கள் கதிர்வீச்சில் இருந்து தப்பிக்க மூடிய வீட்டிற்குள் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என குறிப்பிடப்பட்டிருந்தது.

விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை ‘விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்’ ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.
**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜே பாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
*2. Tel.: 416.282.8059* *3. Fax: 416.282.4978*
*4. email: vlambaram@sympatico.ca* *5. web: vlambaram.com*

# மத்திய கிழக்கு ஒளிர்கின்றதா? ஒலிக்கின்றதா? ஒழிகின்றதா?

கடந்த சில வாரங்களாக மத்திய கிழக்கில் தொடர்சியாக நடைபெறும் சம்பவங்கள் மத்திய கிழக்கை சர்வதேச நாளாந்த செய்திக் களமாக மாற்றி விட்டது. சூடானில் சர்வசன வாக்கெடுப்பு, ரியுனிசியாவில் போராட்டம், எகிப்தில் போராட்டம், லிபியா வில் சண்டை, யேமன், பாரெய்ன் போராட்டம் எனத் தொடர்கின்றது. எகிப்தில் அதிபர் மாற்றம் நடைபெற்ற பின்னரும் போராட்டம் தொடர்கின்றது. எகிப்தில் கிறிஸ்தவ முஸ்லீம் போராட்டம் ரியுனிசியாவில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் என செய்திகள் வந்த வண்ணமேயுள்ளன. யப்பான் பூமியதிர்ச்சி தற்சமயம் முன்னிலையில் இருந்தாலும் மத்திய கிழக்கு நாடுகளில் தொடரும் வன்முறைகள் பின்தள்ளப்படவில்லை.



**- ரதன் -**

எகிப்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. மாறாக தலைமை மாற்றம் நடந்தேறியுள்ளது. அவசரகாலச் சட்டம் நீக்கப்படவில்லை. அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை. தற்காலிக அரசியல் மாற்றங்கள் எதுவும் நடைபெறவில்லை. எகிப்தில் முன்னாள் இராணுவ அதிகாரிகளால் நடத்தப்படும் நிறுவனங்கள் குறிப்பாக கட்டிட நில விற்பனை நிறுவனங்கள் பல கோடிகளை லாபமாக பெற்றுள்ளன. இவர்கள் தான் ஆட்சி மாற்றத்தின் புதிய முகங்கொண்ட பழைய முகவர்கள். இதே நிலை தான் ரியுனிசியாவிலும் உள்ளது. மக்கள் போராட்டம் என மேற்கால் கூறப்பட்ட இப்போராட்டங்களிலும் தலைமைக்கும் வீதியில் நின்று போராடிய மக்களுக்குமான முரண்பாடுகள் அதிகம் உள்ளன. தலைமை யேற்றவர்கள் நகர்ப்புறம் சார்ந்த படித்த மத்திய மேல் தட்டு இளைஞர்கள். இவர்கள் ஆட்சியல் அறம் சார்ந்த நேர்மையை எதிர்பார்த்தார்கள். இதுவே ஆட்சியின் நல்ல தன்மை என நினைத்தார்கள். இது உலக வங்கியின் தலையாட்டலுக்கும், மேற்குலக நாடுகளின் சித்தாந்தப் போக்கும் சாதகமாகவே அமையும். இதனைத் தான் மேற்குலக நாடுகள் வரவேற்றன. இதற்குப் பின்னணியில் மேற்குலக நாடுகளின் உள்நோக்கங்களும் உள்ளன. நல்ல ஆட்சி என்பது சமூகத்திற்கு பிரயோசனமான முறையில் மக்கள் நலன் பெற அமைக்கப்பட வேண்டும் எனச் சிந்திக்கவில்லை.

நாங்கள் அடிக்கடி ஊடகங்களில் கேட்கும் சொற்பதங்கள் இவை. “war on terrorism” “war of religion”, "civilized world", "clash of civilizations" போன்றன. இப்பதங்கள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தையே மையப்படுத்துகின்றன. அப்பிரதேசம் மத்திய கிழக்கு. இப் பிரதேசத்தில் ஊறும் எண்ணெய் வளமே மேற்குலக நாடுகளினதும் நிறுவனங்களி னதும் முக்கிய குறி. உலக எண்ணெய் வளத்தில் 56 வீதத்தை மத்திய கிழக்கு நாடுகள் கொண்டுள்ளன. அதேசமயம் சக்தி மையத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றின் பிரகாரம் ‘எண்ணெய் வளம் உறுதி செய்யப்பட்ட நாடுகள்’ இல் கனடா இரண்டாம் இடத்தில் உள்ளது என்பது அதிர்ச்சியான உண்மை.

## *Oil Reserves by Country*

(Proven reserves in billions of barrels)

| Rank | Country | Percent of World Reserves | World Oil, December 2004 | Percent of World Reserves | Oil & Gas Journal, January 2006 |
|---|---|---|---|---|---|
| 1 | Saudi Arabia | 24.2 | 262.1 | 20.6 | 266.8 |
| 2 | Canada* | 0.4 | 4.7 | 13.8 | 178.8 |
| 3 | Iran | 12.1 | 130.8 | 10.3 | 132.5 |
| 4 | Iraq | 10.6 | 115 | 8.9 | 115 |
| 5 | Kuwait | 9.2 | 99.7 | 7.9 | 101.5 |
| 6 | United Arab Emirates | 6.5 | 69.9 | 7.6 | 97.8 |
| 7 | Venezuela* | 4.8 | 52.4 | 6.1 | 79.7 |
| 8 | Russia | 6.2 | 67.1 | 4.6 | 60 |
| 9 | Libya | 3.2 | 33.6 | 3.0 | 39.1 |
| 10 | Nigeria | 3.4 | 36.6 | 2.7 | 35.9 |
| 11 | United States | 2 | 21.4 | 1.7 | 21.4 |
| 12 | China | 1.4 | 15.4 | 1.4 | 18.3 |
| 13 | Qatar | 1.8 | 20 | 1.2 | 15.2 |
| 14 | Mexico | 1.4 | 14.8 | 1.0 | 12.9 |
| 15 | Algeria | 1.4 | 15.3 | 0.9 | 11.4 |
| Total Muslim Countries** | 75.9 | 822.1 | 66.2 | 855.6 | |

| | | | | |
|---|---|---|---|---|
| Total Western World (EU, North America, Australia) | 4.1 | 44.8 | 16.5 | 213.3 |
| Other Countries | 20.6 | 214.9 | 17.3 | 223.6 |
| World Total | 100 | 1,081.80 | 100 | 1,292.50 |

Source: EIO: Energy Information Administration

ஆபிரிக்க நாடுகளில் லிபியாவில் அதிகளவு எண்ணெய் உள்ளது. இஸ்லாமிய பயங்கரவாதம், இஸ்லாமிய பாசிசம் போன்ற வார்த்தைகளின் உக்கிரம் இந்த எண்ணெய் வளத்தை நாடியதே. ஏற்கெனவே இப் பிரதேசத்தில் தற்சமயம் மூன்று போர்கள் நடைபெற்று வருகின்றன. பாலஸ்தீனியம், ஆப்கானிஸ்தான், ஈராக். லிபியாவுடன்

**தொடர்ச்சி 11ஆம் பக்கம்**

**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- *Detailing*
- *Motor Shampoo*
- *Interior Shampoo*
- *Exterior Wash*
- *Waxing*
- *Repairs*
- *Safety Certification*
- *Overall Maintenance*
- *Under Coating*
- *Rust Proofing*

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# அரசியலிலிருந்து மதத்தை எப்படித் துண்டிப்பது?

இப்படித்தான் எப்போதும் மக்கள் என்னிடம் கேட்டபடி இருக்கிறார்கள். ஆனால் மதம் இப்போது வழிநடத்தப்படுவதைப் பார்க்கும்போது, மதத்தை உண்மையில் அரசியலிலிருந்து பிரிக்க முடியாது என்றுதான் தெரிகிறது. ஏனெனில் மதமே ஒரு வழியில் அரசியலாக மாறிவிட்டது. எனவே இப்போதைய பிரச்சினை இந்த இரண்டையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிப்பதல்ல. அதற்குப் பதிலாக மக்களிடம் அதிக விழிப்புணர்வை உருவாக்குவதன் மூலம் இந்த பிரிவினை சக்திகள் அதிக ஆதிக்கம் பெறாமல் பார்த்துக் கொள்வதுதான்.

மக்களின் மனதில் சரியான விழிப்புணர்வைக் கொண்டு வந்தால்தான் இந்தப் பிரச்சினை தீரும். இந்த சமூகத்தில் உள்ள தெளிந்த அறிவுள்ளவர்கள் இந்த பிரச்சினையை தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளா விடில், இறுதியில் இந்த நாடு வன்முறையாளர்களின் கைகளில் போய் சேர்ந்துவிடும். இந்தியாவில் தற்போதைய நிலை இப்படித்தான் இருக்கிறது. இது உடனே முடியக்கூடிய வேலையல்ல. ஒவ்வொரு சந்ததியினரும் இதற்காக தொடர்ந்து பணிபுரிய வேண்டும்.

உலகின் கிழக்குப் பாகத்தில், ஆன்மீகமோ அல்லது மதங்களோ, எப்போதும் ஒரு ஒழுங்கான செயல் முறையாக இருந்தது கிடையாது. ஒவ்வொருவருக்கும் ஆன்மீகம் கிடைக்குமாறு பார்த்துக் கொண்டார்களே தவிர, அதை ஒரு ஒழுங்கான அமைப்பாக உருவாக்கவில்லை. ஒரு விவசாயி தன் கலப்பையை வணங்கினான். ஒரு மீனவர் தன் படகை வணங்கினார். மக்கள் தங்கள் வாழ்க்கைக்கு எதை மிக முக்கியமாக பார்த்தார்களோ அதை வணங்கினார்கள். குறிப்பாக, கிழக்குப் பகுதியில், மதம் என்பது உங்களைப் பற்றியது, கடவுளைப் பற்றியது அல்ல. மதம் என்பது உங்கள் விடுதலைக்காக உருவாக்கப்பட்டது. கடவுள் என்பது அதற்கான கருவிகளில் ஒன்று மட்டுமே.

வணங்கும் தன்மையை ஒருவருக்குள் கொண்டுவருவதுதான் இந்த கலாச்சாரத்தின் நோக்கமாக இருந்தது. எதை வழிபடுகிறீர்கள் என்பது முக்கியமாக இருக்கவில்லை. ஒன்றை நீங்கள் விரும்புகிறீர்களா அல்லது வெறுக்கிறீர்களா என்பது முக்கியமில்லை. வணங்கும் தன்மையை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுத்துவர வேண்டும். எதைப் பார்த்து வணங்குகிறீர்கள் என்பது முக்கியமில்லை. வணங்குதல் என்பதை உங்கள் வாழ்க்கையின் ஒரு தன்மையாக எடுத்து வந்து விட்டால், பிறகு உங்கள் உயிர்த்தன்மைக்கு மிக நெருக்கமாக நீங்கள் வந்துவிடுகிறீர்கள். அப்போது உங்களுக்குள் பெரிய அளவில் வாழ்க்கையின் பரிமாணம் நடக்கத் துவங்கும்.

எனவே இந்த கலாச்சாரங்களில் எப்போதும் மதம் என்பது நாட்டின் அரசியலில் ஒரு தலையீடாக இருந்ததில்லை. முற்காலங்களில், மக்களுக்கு மதம் என்பது மிக முக்கியமானதாக இருந்தாலும், மதம் அரசியலில் தலையிடவில்லை. அரசர் எந்த மதத்தில் இருந்தாலும், குடிமக்களுக்கு தங்கள் மதத்தை தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் இருந்தது. மதம் என்பது எப்போதும் பிரச்சினையாகவே இருந்ததில்லை, ஏனெனில் மக்கள் மதத்தை ஒரு ஒழுங்கான அமைப்பாகவே பார்க்கவில்லை. ஆனால் வெளியிலிருந்து அதிகார நோக்கத்துடன் இங்கு வந்த மதங்களைப் பார்த்து, இந்தக் கலாச்சாரங்களிலும் மதத்தை ஒழுங்குபடுத்த ஆரம்பித்துவிட்டார்கள். இது எந்த அளவிற்கு வளர்ந்து விட்டது என்றால், தேர்தலை கருத்தில் கொண்ட அரசியலும் நாட்டின் மேல் கொண்ட அக்கறையும் ஒன்றுக்கொன்று முரணானது என்பது போல் ஆகிவிட்டது. இதனால் நம் நாடு என்னும் அடிப்படை உணர்வே அற்றுப் போகிறது.

நாடு என்பது ஒரு சிந்தனை மட்டுமே என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதை நாம் வாழ்க்கை உண்மையாக மாற்ற விரும்பினால், ஒவ்வொருவரின் மனதிலும் தான் இந்த நாட்டின் குடிமகன் என்னும் உணர்வை ஆழப்பதிப்பதற்கு தேவையான பணிகளை அனைத்து மட்டங்களிலும் செய்ய வேண்டும். தான் முதலில் நாட்டின் குடிமகன், பின்னரே மதம் போன்றவை என்று ஒவ்வொருவரும் உணர வேண்டும். அப்போதுதான் எந்த ஒரு சவாலான நிலையையும் எதிர்கொள்ளக்கூடிய திறமையான நிலையில் ஒவ்வொருவரும் இருப்பார்கள். ஒவ்வொருவரும் அந்த திறமையில் இல்லாவிட்டால், ஒவ்வொரு முறையும் நம் நாட்டின் இறையாண்மைக்கே அச்சுறுத்தல் நிகழும். எந்தப் பக்கம் சாய்வது என்று மக்கள் குழப்பத்தில் ஆழ்ந்து விடுவார்கள்.

அரசியல்வாதிகள் வெளிப்படையாகவும் பெருமிதமாகவும் தங்களை ஹிந்து தலைவர்கள் என்றும் அல்லது முஸ்லீம் தலைவர்கள் என்றும் அல்லது கிறித்துவத் தலைவர்கள் என்றும் கூறிக் கொள்ளும் நிலை தற்போது நிலவுகிறது. நிலைமை இப்படி மாறியபிறகு, மதம் என்பது ஆள் சேர்க்கும் விளையாட்டாகவும் அரசியலுக்கு ஒரு சாபமாகவும் ஆகி விட்டது. இது தொடர்ந்து ஊக்குவிக்கப்பட்டாலோ அல்லது குறைந்தபட்சமாக அனுமதிக்கப் பட்டாலோ, நாட்டின் சமூக வாரியான ஜனத்தொகையை திருத்தியமைப்பதற்கான



## சத்குரு வாசுதேவ்

அனைத்து முயற்சிகளையும் கண்ணிய மற்ற வழிகளில் திட்டமிட்டு செயல்படுத்தத் தொடங்கி விடுவார்கள். எப்போதெல்லாம் நாட்டின் அடிப்படைத் தன்மையையும், சமூக ரீதியான மக்கள்தொகையையும் - அது மதம் ரீதியான மக்கள்தொகையாகவோ அல்லது வேறுவிதமாகவோ இருக்கலாம் - மாற்றுவதற்கான முயற்சிகள் நடக்கிறதோ, அப்போதெல்லாம் மிகவும் கடுமையான அடக்குமுறைகளைக் கையாண்டால் ஒழிய, பெரிய அளவிலான கலகங்கள் நாட்டில் நிகழ்வது தவிர்க்க முடியாது.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.ort / www.ishayoga.org
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

அதிக அளவிலான மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையும், அபிலாஷைகளையும் உண்மையான உணர்வுடன் தீர்க்க முயல வேண்டும். அப்படியில்லையென்றால், பெரும்பான்மையான மதக் குழுக்கள், தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ள அதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான் ஒரே தீர்வு என்று முடிவெடுத்து தீவிர அரசியலில் இறங்கக்கூடிய நாள் வெகு தொலைவில் இருக்காது. இதனால் நாட்டின் நிலையான அரசியல் அல்லாது தனிப்பட்டவர்களின் ஆன்மீக வாய்ப்புகளும் கூட அச்சுறுத்தலுக்கு உள்ளாக நேரிடலாம்.

வரும் ஆண்டுகளில் இது போன்ற சூழ்நிலைகளை நம் நாடு எதிர்கொள்ள நேரிடலாம். எனவே அரசாங்கமும், பெரிய அளவில் சமுதாயமும், குறிப்பாக மதம் மற்றும் ஆன்மீக அமைப்புகளும் இந்தப் பிரச்சினையை மிகவும் உணர்வுபூர்வமாகவும், அறிவுபூர்வமாகவும், தொலைநோக்குடனும் அணுக வேண்டும். இந்த சூழ்நிலையை ஒரு சமநிலையின்றி நாம் அணுகினால், நம்நாடு மதரீதியில் பிளவுபடுவது என்பது துரதிர்ஷ்டவசமாக உண்மையாகி விடலாம்.

எனவே, மதங்களின் சகிப்புத்தன்மையற்ற நிலையால் ஏற்படும் வன்முறைகளிலிருந்து, நமது அழகான, துடிப்புமிக்க, அனைவரையும் ஏற்றுக் கொள்ளும் இந்தக் கலாச்சாரத்தை மீட்பதற்குத் தேவையான அறிவையும் விவேகத்தையும் நாம் அனைவரும் செயல்படுத்த வேண்டும

**Sitham Sam Shanmugam** (Sales Rep)
**HomeLife/GTA Realty Inc.**
HOMELIFE HIGHER STANDARDS
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

your 2nd house is Investment property
1st house put down payment

Tenant (Rent) Pay the Mortgage
Scarborough , Mississauga

Senior Home in Richmondhill 12 Beds

Metal scrap yard for recycling and car sales with house office

Bungalow House with basement Apartment Markham /Sheppard

For students 2 + 1 **Condo.** in Toronto Near Univerisal of York $130,000

# வாழத்துடிக்கும் வன்னி

## - ஒரு நேரடி ரிப்போர்ட் - பாகம் 16

- செல்வரட்ணம் சிறிதரன் -



'அரசாங்கம் சொல்வது போல, பயங்கர வாதத்திற்கு எதிராக நடத்தப்பட்ட ஒரு யுத்தத்தின் விளைவாக அல்லாமல், ஒரு இனத்தின் மீது நடத்தப்பட்ட ஒரு மோசமான அழிவு நடவடிக்கையாகவே அந்தக் காட்சிகள் இருக்கின்றன. சென்ற இடங்களில் எல்லாம் இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதும், வன்னிப்பிரதேசம் எங்கும் இராணுவ முகாம்களை அமைத்திருப்பதும், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் தொடர்ச்சி யாக மக்களை வைத்திருக்க வேண்டும் என்று அரசாங்கம் விரும்புவதையே எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றது. ஏ9 வீதியில் போரழிவில் இருந்து ஓரளவு தப்பியிருக்கின்ற கட்டிடங்களுக்கு வெள்ளையடித்து அவற்றைப் புதிய கட்டிடம் என போட்டோக் களில் காட்டுகின்ற ஒரு தன்மையே மீள் குடியேற்ற நடவடிக்கைகளில் தெரிகின்றது. பாதிக்கப்பட்ட மக்களின் உண்மையான தேவைகளை உணர்ந்து அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். போரினால் பாதிக்கப்பட்டு எல்லாவற்றையும் இழந்து, வெறும் கையோடு இடம்பெயர்ந்துள்ள விவசாயிகள், வர்த்தகர்கள், மற்றும் தொழில்துறை சார்ந்தவர்கள், தமது சொந்த இடங்களில் சுயகௌரவத்தோடு தொழில்களை மீண்டும் ஆரம்பித்து புதிய வாழ்க்கை வாழ்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்டுள்ள மக்களின் இடங்களை அபகரிக்கும் வகையில் புதியவர்களையும், வெளியிடங்களைச் சேர்ந்தவர்களையும் அந்த மக்களின் இடங்களில் கொண்டு சென்று தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கும் நடவடிக்கைகள், பாதிக்கப் பட்ட மக்களுக்கு எந்த வகையிலும் உதவப் போவதில்லை' என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன்.

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு உடனடியாக உதவத்தக்க வகையில் ஓர் ஒழுங்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட வில்லை என்பதையே தாங்கள் கண்டதாக தமது வன்னி விஜயம் குறித்து கருத்து வெளியிட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

'எமது வன்னி விஜயத்தின்போது நாங்கள் கண்டும் கேட்டும் அறிந்த விடயங்கள் தொடர்பான அறிக்கையை ஜனாதிபதிக்கும் அதேபோன்று சர்வதேசத்திற்கும் நாங்கள் வெளிப்படுத்தியதையடுத்து, முல்லைத்தீவு மாவட்டத்தில் பல வருடங்களுக்குப் பின்னர் நடைபெற்ற அபிவிருத்திக்கான கூட்டத்தில் பல சாதகமான முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. முள்ளிவாய்க்கால் மற்றும் இடங்களில் கைவிடப்பட்ட பொதுமக்களின் தொழில்சார்ந்த உடைமை களை மீட்டுக்கொடுப்பதற்கும் கடலில் மீன்பிடிப்பதில் உள்ள தடையை நீக்குவதற்கும் இந்தக் கூட்டத்தில் உடன்பாடு எட்டப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. முக்கியமான இந்த அபிவிருத்திக் கூட்டத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு சார்பில் கலந்து கொண்டு மீள்குடியேற்றப் பட்டுள்ள மக்கள் எதிர்நோக்கியுள்ள பல முக்கிய பிரச்சினைகளை திட்டங்களைச் செயற்படுத்துகின்ற அதிகாரிகள் மட்டத்தில் எடுத்துக்கூறி, நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதற்குத் தூண்டி யிருக்கின்றோம். அத்துடன் ஜனாதிபதியைத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு சந்தித்து மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பற்றி பேசியபோது வீடில்லாதவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கத்திடம் நிதி இல்லை என தெரிவிக்கப்பட்டது. அதேவேளை, இப்போது இந்தியா பல வீடுகளை அந்த மக்களுக்கு கட்டித்தருவதற்கு முன்வந்து அந்த உதவிகளை அவர்களுக்கு நேரடியாகத் தரப்போவதாகத் தெரிவித்திருக் கின்றது. இத்தகைய மாற்றங்கள் எமது வன்னிக்கான விஜயத்தின் பின்பே ஏற்பட்டிருக்கின்றது எனினும் இன்னும் கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கிய பிரச்சினைகள் எத்தனையோ இருக்கின்றன. தடுப்பில் உள்ள கணவனைப் பிரிந்து பிள்ளைகளுடன் வாடுகின்ற இளம்பெண்கள், விதவைகளாகியுள்ள இளம் குடும்பப் பெண்களின் வாழ்க்கையிலும் முன்னேற்றம் ஏற்படத்தக்க வகையில் தடுப்பில் உள்ளவர் களைப் பொதுமன்னிப்பின்கீழ் விடுதலை செய்யவும், தொழில் வாய்ப்புக்களை எற்படுத்திக்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



நீங்கள் கனடாவுக்குப் புதியவரா? நீங்கள் வெற்றிபெற எங்களால் உதவ முடியும்

உங்கள் தேர்ச்சிகளையும் அறிவையும் மிக விரைவாகப் பயன்படுத்தும் விதத்தைக் கற்றறிய நாடவும்: cic.gc.ca/new

cic.gc.ca/new

1 800 O-Canada (1-800-622-6232)
TTY/ATS: 1-800-926-9105

பிரிட்டிஷ் கொலம்பியா, மனிற்றோபா, குயுபெக் மாகாணங்களில் சம்பந்தப்பட்ட மாகாண அரசாங்கங்களே மேற்படி சேவைகளை மேற்கொள்கின்றன.

Citizenship and Immigration Canada | Citoyenneté et Immigration Canada

Canada

# அயர்லாந்தின் அதிரடி ஆட்டத்தில் அதிர்ச்சி தோல்வி கண்டது இங்கிலாந்து

## விளையாட்டுத் தகவல்கள் 301

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளில் 15 வது போட்டியாக இன்று பெங்களூருவில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் அயர்லாந்து அணி அபார வெற்றி பெற்றது. முன்னதாக பூவா தலையா வென்ற இங்கிலாந்து அணி முதலில் பேட்டிங் செய்ய களம் இறங்கியது. அந்த அணியின் துவக்க ஆட்டக்காரர்களாகக் களம் இறங்கிய ஸ்ட்ராஸ், பீட்டர்சன் இருவரும் நல்ல துவக்கத்தைத் தந்தனர். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 91 ரன்களைச் சேர்த்தது. ஸ்ட்ராஸ் 34 ரன்களும் பீட்டர்சன் 59 ரன்களும் எடுத்தனர். ட்ராட் அதிரடியாக ஆடி 92 பந்துகளில் 92 ரன்களைச் சேர்த்தார்.

நடுவரிசையில் களம் இறங்கிய பெல் தன் பங்குக்கு 81 ரன்களை எடுத்தார். பின்னால் வந்தவர்கள் சொற்ப ரன்களில் ஆட்டம் இழக்க அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 327 ரன்கள் எடுத்தது.

328 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை எதிர்நோக்கி களம் இறங்கிய அயர்லாந்து அணிக்கு துவக்கமே அதிர்ச்சியாக அமைந்தது. முதல் பந்திலேயே போர்டர் பீல்ட் ஆட்டம் இழக்க அந்த அணி தடுமாறியது. ஸ்டிர்லிங் மற்றும் ஜோய்ஸ் இருவரும் நிதானமாக ஆடி ரன் சேர்த்தனர். இருவரும் தலா 32 ரன்கள் எடுத்தனர். அடுத்து என் ஓ பிரையன் 29 ரன்கள் எடுத்தார். வில்ஸன் 3 ரன்களில் ஆட்டம் இழக்க அந்த அணி ஒரு கட்டத்தில் 111 ரன்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தத்தளித்தது. போட்டி ஒரு வகையில் இங்கிலாந்து பக்கமே சென்று விட்ட நிலையில், நடுவரிசை ஆட்டக்காரராகக் களம் இறங்கிய கெவின் ஓ பிரைன் மற்றும் குசாக் இருவரும் இணைந்து ரன்ரேட்டை உயர்த்தினர். கெவின் ஓ பிரைன் அதிரடியில் அசத்தினார். பெங்களூரு ரசிகர்களை சிக்ஸர் மழையில் நனைய வைத்தார்.

இந்த உலகக் கோப்பை போட்டிகளில் மிகச் சிறந்த சிக்ஸர் அடித்து பட்டியலில் முதல் இடம் பிடித்தார். மேலும் 50 பந்துகளில் 100 ரன்கள் கடந்து, உலகக் கோப்பை போட்டிகளில் அதிவேக சதம் கண்டவர் பட்டியலில் முதல் இடம் பிடித்தார். இவர் மொத்தம் 6 சிக்ஸர்கள், 13 பவுண்டரிகளுடன் 113 ரன்கள் எடுத்து அணி வெற்றி பெறக் காரணமாக இருந்தார். குஸாக் 47 ரன்களும் மூனே 33 ரன்களும் எடுத்தனர்.

இறுதியில் அந்த அணி ஐந்து பந்துகள் மீதம் இருக்கையில் 7 விக்கெட்கள் இழந்து வெற்றிக்குத் தேவையான 329 ரன்களை எளிதில் எடுத்து, இங்கிலாந்து அணிக்கு அதிர்ச்சி அளித்தது. வெற்றி நாயகனாக ஜொலித்த கெவின் ஓ பிரைன் ஆட்டநாயகனாக அறிவிக்கப்பட்டார்.

கெவினோ பிரையன் சாதனையும், அயர்லாந்தின் சாதனையும் இங்கிலாந்துக்கு எதிராக 328 ரன்கள் இலக்கை வெற்றிகரமாகத் துரத்தி அதிர்ச்சியளித்ததன் மூலம் அதிரடி வீரர் கெவினோ பிரைன் 50 பந்துகளில் அதிவேக சதம்....எடுத்து உலகக் கோப்பை கிரிக்கெட்டின் அதிவேக சத நாயகன் என்ற உலகச் சாதனையை நிகழ்த்தினார். அயர்லாந்து அணி 328 ரன்களை துரத்தி வெற்றி பெற்றதன் மூலம் உலகக் கோப்பை கிரிக்கெட்டில் அதிகபட்ச ரன் துரத்தலிலும் உலக சாதனை படைத்தது.




1992ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற உலகக் கோப்பை கிரிக்கெட்டில் ஜிம்பாப்வே அணிக்கு எதிராக இலங்கை 313 ரன்களை துரத்தி வெற்றி பெற்றதே இதுவரை சாதனையாக இருந்தது.

தனிநபர் சாதனையில் 2007ஆம் ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட்டில் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக அவுஸ்திரேலிய அதிரடி மன்னன் மேத்யூ ஹெய்டன் 66 பந்துகளில் அடித்த சதத்தை கெவினோ பிரைன் முறியடித்து உலகச் சாதனை புரிந்தார். ஆண்டர்சனின் பந்தை பிரைன் அடித்த சிக்சர் 102மீ வரை சென்றது உலகக் கோப்பை கிரிக்கெட்டில் நீண்ட தூர சிக்சராகும். 111/5 என்ற நிலையிலிருந்து பிரைனும், கியூசாக்கும் இணைந்து 17 ஓவர்களில் 162 ரன்களைக் குவித்ததும் புதிய உலக கிண்ண சாதனையாகும்.

பேட்டிங் பவர் பிளேயில் 5 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 62 ரன்கள் குவித்தது இரண்டாவது மிகப் பெரிய சாதனையாகும். முன்னர் பாகிஸ்தான் கென்யாவுக்கு எதிராக பவர் பிளேயில் 70 ரன்கள் குவித்துள்ளது உலகக் கோப்பை பவர் பிளே சாதனையாகும். ஒட்டுமொத்த ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் 5 பேட்ஸ்மென்கள் மட்டுமே அதிவேக சதம் எடுத்துள்ளனர். இந்தப் பட்டியலில் அப்ரிடி, பவுச்சர், லாரா, சனத் ஜெயசூரியா, தற்போது கெவினோ பிரைன் இணைந்துள்ளார். டெஸ்ட் விளையாடும் அணிக்கு எதிராக டெஸ்ட் விளையாடாத அணி எடுத்துள்ள ரன் எண்ணிக்கையிலும் அயர்லாந்து சாதனை புரிந்துள்ளது. ஆட்டத்தில் மொத்தமாக 656 ரன்கள் குவிக்கப்பட்டது, 3-வது பெரிய ரன் எண்ணிக்கையாகும்.

இந்தியா - இங்கிலாந்து போட்டியில் சூதாட்டமா?

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்தியா, இங்கிலாந்து இடையிலான போட்டி யாருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இந்தப் போட்டி டை ஆகும் என்று முன்னாள் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வார்னே சரியாகக் கணித்திருந்தார். அவர் துல்லியமாக எப்படி கணித்தார் என்று கேள்வி எழுந்துள்ளது. மேலும் அவுஸ்திரேலியா, ஜிம்பாப்வேக்கு இடையிலான போட்டியில் சூதாட்டம் நடந்திருக்கலாம் என்றும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதுதொடர்பாக ஐ.சி.சி., விசாரணையில் ஈடுபட்டுள்ளது.

கிரிக்கெட் உலகை சூதாட்டத்தின் நிழல் மீண்டும் படர்ந்துள்ளது போலத் தோன்றுகிறது. ஆட்டமா? சூதாட்டமா? என்பது போல் கிரிக்கெட் தன் முகம் மாறி வருவதையடுத்து உலக கிண்ண கிரிக்கெட் தொடரை ஐ.சி.சி., தீவிரமாக கண்காணித்து வருகிறது. இருப்பினும் கடந்த பெப்ரவரி 25 ல் அவுஸ்திரேலியா, ஜிம்பாப்வேக்கு இடையிலான முதல் சுற்று போட்டி அஹமதாபாத்தில் நடந்தது. முதலில் விளையாடிய அவுஸ்திரேலிய அணிக்கு வாட்சன், ஹாடின் இணைந்து முதலில் மந்தமான துவக்கம் கொடுத்தனர். முதல் 11 சுற்று பந்துவீச்சில் 28 ஓட்டங்கள் தான் எடுத்தனர். 15 சுற்றின் முடிவில் 53 ஓட்டங்கள் எடுத்தனர். இதெல்லாம் ஐ.சி.சி எனப்படும் சர்வதேச கிரிக்கெட் குழு மத்துக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுதொடர்பாக ஐ.சி.சி., ஊழல் தடுப்பு கண்காணிப்பு குழுவினர் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இதனை அவுஸ்திரேலிய பயிற்சியாளர் டிம் நீல்சன் மறுத்துள்ளார். இதுபற்றி அவர் கூறுகையில், “எல்லோரும் வாட்சன், ஹாடின் மெதுவாக விளையாடியது குறித்து தான் பேசுகின்றனர். என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் நன்றாகத்தான் விளையாடினர். ஜிம்பாப்வே அணியினர் துவக்கத்தில் சுழற்பந்து வீச்சாளர்களைப் பயன்படுத்தியதால், இழப்பின்றி எங்களைப் பாதுகாக்க வேண்டியது இருந்தது. எங்களைப் பொறுத்தவரையில் சரியாகத்தான் விளையாடினோம்” என்றார்.

அதே நேரம் இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதிய போட்டி டை ஆகும் என போட்டி துவங்குவதற்கும் ஏழு மணி நேரம் முன்னதாக ஓய்வு பெற்ற அவுஸ்திரேலிய வீரர் வார்ன் கணித்ததும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இதை இங்கிலாந்து கேப்டன் ஸ்டிராஸ் பாராட்டினாலும் பல்வேறு தரப்பில் இருந்து சந்தேகம் எழுந்துள்ளது. ஏனெனில் ஒருவர் கணிக்கும் போது யாராவது ஒருவர் வெற்றி பெறுவார்கள் என்று தான் கூற முடியும். மாறாக வர்ன் மட்டும் டை ஆகும் என்று எப்படி சொன்னார் என்பது பலத்த சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

சூதாட்ட சந்தேகம் குறித்து பாகிஸ்தான் அணியின் முன்னாள் கெப்டன் அமீர் சொகைல் கூறுகையில், “போட்டி டை ஆகும் என இந்தியா அல்லது பாகிஸ்தான் வீரர்கள் யாராவது தெரிவித்து இருந்தால் இந்நேரம் மேற்கு நாடுகளின் ஊடகங்கள் பெரிய அளவில் விவாதித்து குதித்திருக்கும். ஆனால் சொன்னது அவுஸ்திரேலியா வீரர் என்றவுடன் ஜீனியஸ் என்கிறார்கள்” என்று தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் 24 ஆட்டங்கள் நடந்து முடிந்துள்ளன. தொடக்கத்தில் சில ஆட்டங்களில் பேட்ஸ் மேன்கள் ஆதிக்கம் செலுத்தினாலும், மெல்ல மெல்ல பந்துவீச்சாளர்களும் தங்களது திறமையை நிரூபித்து வருகின்றனர்.

இந்திய ஆடுகளங்கள் சுழற் பந்துவீச்சுக்கு சாதகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 315 ஆட்டங்களில் விளையாடி 306 விக்கெட்டுகள் கைப்பற்றியுள்ள பாகிஸ்தான் வீரர் ஷாகித் அப்ரிதி (4 ஆட்டங்களில் 15 விக்கெட்),



எஸ். கணேஷ்

தொடர்ச்சி 28ஆம் பக்கம்

YARL WINDOW BLINDS & DRAPERY
Since 1991
Tel: 416.806.5397
905.201.7733
CALL: N.SELVAM
WE ARE SPECIALIZED IN CUSTOM MADE Drapery & Blinds
VENETIAN/VERTICAL/ROLLER
WOOD/FORMWOOD
BLINDS
WOOD & VINYL SHUTTERS
We have experience to make your home more beautiful

# ஆதனம் பொறுப்பேற்றல்

## Closing a Deal

மழையோ, பனியோ, வெய்யிலோ அந்த நாள் மிகவும் முக்கியமானது. எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார்கள். மூன்று மாதத்திற்கு முன்பாக கணவன், மனைவி இருவரும் ஒப்பமிட்டு, $15,000 டொலர் ஆரம்ப பணம் கொடுத்து (Deposit) ஏற்கெனவே இருந்த இரு நிபந்தனைகளும் (Conditions: (1) Financing, (2) Inspection) நீக்கப்பட்டு, குதூகலமாகவும் காணப்பட்டது. எனவே இந்த நாளை எதிர்பார்த்து அந்த நாளிற்குரிய ஆரம்ப வேலைகளை ஆரம்பத்திலிருந்து முறையாக திட்டமிட்டு வந்தால் Closing Date / Completion Day இலகுவானதாக இருக்கும். மகிழ்ச்சியாகவும் இருக்கும்.

நிச்சயமாக பல விடயங்களை உங்களுடைய அனுபவமிக்க ஆதனப் பிரதிநிதியுடன் சேர்ந்து திட்டமிடுதல் வேண்டும். இவற்றில் மிக



புதிய இல்லத்திற்கு குடிபுகும் நாள் எண்ணப்பட்டுக் கொண்டு இருந்தது. இந்த நாள் புதிதாக வீடு வாங்கும் குடும்பத்திற்கு Busy ஆக இருந்தாலும் மிகவும் முக்கியமானவற்றில் ஒரு சிலவற்றைறைப் பற்றி பார்ப்போம்.

நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர் - 337

1. **அடமானக்கடனை திட்டமிடல் / நிறைவேற்றல்** (Finalize Mortgage)

அடமானக்கடன் பெற்ற நிதி நிறுவனம் கேட்டுக்கொண்ட தேவையான பத்திரங்களை காலதாமதமின்றி நேரத்துடன் வழங்குதல் வேண்டும். ஆரம்ப முதலீட்டிற்குரிய (Down Payment) பணத்தை நிதிநிறுவனங்களில் முதலிட்டு வைத்திருத்தல் வேண்டும்.

(B) **ஆரம்ப முதலீட்டு பணத்தை ஆயத்தமாக வைத்திருத்தல்.**

- நிதிநிறுவனத்தில் பணமாக வைத்திருத்தல் அல்லது வேறுவிதமான முதலீடாக (Down Payment) இருந்தால், முக்கிய பத்திரங்களை தகுந்த முறையில் வைத்திருப்பது நல்லது.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்


HomeLife / GTA Realty Inc., Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

*Independently Owned & Operated

1711 Mccowan Rd. #206, Toronto - Tel: 416.321.6969
145 Trades Blvd #29, Mississauga - Tel: 905.712.2666



Raja M. Mahendran, P. Eng
(Broker/Owner)

SPACE AVAILABLE FOR LEASE

1000 sqft - 3000 sqft. in Finch & Middlefield. 2nd Floor. Available for Insurance Office, School, Mortgage, Tution center, Yoga class, etc. Rent $3000 Vacant property.



CENTRO FOR SALE
(Close to Scarborough Town Centre)
1 + Den Completion (2011). Price starts $239,000. (Special conditions)

BRAND NEW CONDO. FOR SALE



BLOOR & SHEBOURNE
2 Bedroom + den in downtown. Avail. March 2011. 1 Parking. Further details please Call

DOWNTOWN

2 Level Town house for lease in downtown. Close to Rogers Center & CN tower. 2 Washrooms, 1 parking & locker. Avail. immediately Only $1900

STORE FOR SALE OR LEASE



FINCH & MIDDLEFIELD
Main floor unit in GTA Square Shopping Mall. Unit is close to main entrance, high traffic area & plenty of surface and underground parking available 1 Parking and locker included in the price. Leased unit. Asking only $209,900.

BRAND NEW CONDO. AVAILABLE

HWY 401 & YONGE
2 Bedroom, 2 washroom. Over 1200 Sqft. Asking price $474,000. Avail. May 01, 2011 Call: 416.315.9397

CONDO FOR SALE VERVE

SHERBOURNE & WELLESLEY
1 + Den. 3Years old. Exceptionally Fantastic. West view. Avail. immediately. Asking Only $ 309,900



METROGATE
(KENNEDY & HWY 401)
Completion (2011, 2012)
Price starts from $249,900



Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# ஆதனம்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

(C) சட்டத்தரணியுடன் தொடர்பு கொள்ளல் (Lawyer Contact)

ஏற்கெனவே ஆதனம் வாங்குவதற்கு ஒப்பமிட்ட பின் தகுதியான, சட்டத்தரணியினால் வீடு வாங்குவதற்குரிய



ஒப்பமிட்ட பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். உங்களது வீட்டு பிரதிநிதியின் உதவியுடன் இதனை செய்திருக்க முடியும். Closing Date இற்கு முன்பாக, உங்கள் சட்டத்தரணியைச் சந்தித்து தேவையான பத்திரங்களை ஒப்பமிடல் வேண்டும். அத்துடன் அடமானக்கடன் பெற்ற நிதி நிறுவனத்தில் இருந்து வந்திருக்கும் பத்திரங்களில் உள்ள அடக்கங்கள் சரியென உறுதி செய்தல் வேண்டும்.

(D) உறுதியை உறுதி செய்தல்

A Deed (உறுதி) is a legal document.

உறுதி என்பது வாங்குபவரும் விற்பவரும் ஒப்பிடும் மிகவும் முக்கியமான சட்டப்படியான பத்திரமாகும்.

இந்தப் பத்திரத்தில் இரண்டு பகுதியினரும் ஒப்பிடும்போது குறிப்பிட்ட ஆதனம் ஒருவரிடம் இருந்து மற்றவரிற்கு சட்டப்படி மாற்றப்படுகின்றது. இந்தப்பத்திரத்தின் பிரதி, சட்டத்தரணியின் வாங்குபவரிற்கு கொடுக்கப்படும்.

(E) SET UP UTILITIES

குறிப்பிட்ட சில தினங்களிற்கு முன்பாக வீட்டிற்கு தேவையான பாவனைகளை (Utilities) தமது பெயரில் மாற்றிக் கொள்ளல் வேண்டும். Closing Day இலிருந்து சகல பாவனைகளிற்குரிய செலவுகள் உங்களின் பெயரில் மாறும். எனவே வீடு/இல்லம் கைமாறும் நாள் (Closing Day) வாங்குபவரின் நாளாகும்.) இதற்குரிய செலவு வாங்குபவரினதே.

(F) காப்புறுதி (Insurance)

வீட்டிற்கு குடி புகமுன்பாக, காப்புறுதியை பெற்றுவிடல் வேண்டும். அத்துடன் அதில் உள்ள முக்கிய விடயங்களை அனுபவமும், ஆற்றலுமிக்க காப்புறுதி முகவரைக் கொண்டு விளங்கிகொள்ளுதல் எதிர்காலத்து சிக்கல்களை இன்றே நிவர்த்தி செய்ததாக இருக்கும்.

(G) இடம்மாறல்

இடம் மாறுதல் இலகுவான விடயம் அல்ல. இருவிதமாக இந்த விடயத்தை செய்யலாம். முற்றாக நீங்களும் உங்கள் குடும்பமும் சேர்ந்து பொருட்களை இடம் மாற்றம் செய்யலாம். அல்லது இதனை தொழிலாகப் புரியும், அனுபவமிக்க நிறுவனங்களின் (Moving Companies) உதவியுடன் செய்ய முடியும். எந்த முடிவு சிறந்தது என்பதை உங்களின் வசதிக்கேற்ப தீர்மானிக்கலாம்.

## எதனையும் முதலில் திட்டமிடுவதே சிறந்தது.

**மார்ச் 18, 2011 இலிருந்து நடைமுறைக்கு வரும் அடமானக் கடன் மாற்றங்கள்.**

1. அடமானக்கடன் பெறும்போது, அந்தக்கடனைக் திருப்பி செலுத்தும் காலம் 35 வருடங்களிலிருந்து 30 வருடமாகக் (amortization period) குறைக்கப்படுகின்றது.

2. கடன்பெறும்தொகை இல்லத்தின் பெறுமதியின் 90% இலிருந்து 85% ஆகக் குறைக்கப்படுகின்றது. (Maximum loan to value (LTV) will be reduced from 90% to 85% )

**ஏப்ரல் 18, 2011 இலிருந்து நடைமுறைக்கு வரும் கடனில் ஏற்படும் மாற்றம்.**

இதுவரை நடைமுறையிலிருந்து வந்த வீட்டைப் பாவித்து பெற்ற கடனிற்கு அரசினால் வழங்கப்பட்ட காப்புறுதி (Insurance for **H**ome **E**quity **L**ine of **C**redit) நீக்கப்படுகின்றது. HELOC என அழைக்கப்படும் கடனிற்குரிய காப்புறுதி இரத்து செய்யப்படுகின்றது.


**SEARCHING FOR FAMILY PHYSICIAN**

To staff a brand new clinic within a new medical building. Amazing opportunity to build your own practice. Competitive split.

**EMR Ready**
In-house ECG, PFT, Allergy test, event monitor.
Easy access to pharmacy, lab, specialists within the medical building.

**குடும்ப வைத்தியர் தேவை**

புதிதான **Medical** கட்டிடத்தில் தொடங்க இருக்கும் புதிய சிகிச்சையகத்துக்கு வைத்தியர்கள் தேவை.

தங்களது சொந்தமான சேவைகளை கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பம். நியாயமான சலுகைகள்.




Contact: Dr. Vukiet Tran
Mobile : 647.688.2907
Email : unimedicofamilypractice@hotmail.com

# மஞ்சள் சால்வையும் கருஞ்சிவப்பு சேலையும்

## தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2011



தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலுக்கான தேதி, வேட்பு மனு தாக்கல் செய்ய இறுதி நாள், வாக்குகள் எண்ணப்படும் தேதி ஆகியவை குறித்த அறிவிப்புகள் வந்துவிட்டது. இந்த அறிவிப்புகள் குறித்து தன்னுடைய அதிருப்தியையும் தெரிவி த்துவிட்டார் முதல்வர். இனி அரசியல் வல்லுனர்கள் தேர்தல் நிகழ்வுகள், கூட்டணிகள், அதன் பலம், தமிழகத்தில் கட்சிகளுக்குள்ள எதிர்ப்பு, ஆதரவு அலைகள், வேட்பாளர் தேர்வு... என்று எழுத ஆரம்பித்துவிடுவார்கள். இதில் ஜோதிடர்களுக்குத்தான் கொண்டாட்டம், ஆளாளுக்கு ஒரு கணிப்பை சொல்வார்கள்.

எத்தனை கட்சிகள் களத்தில் இருந்தாலும், பிரதான தலைவர்கள் கலைஞரும் ஜெயலலிதாவும்தான். சமீப காலமாக ஜெயலலிதாவின் தோற்றத்தில் ஒரு மாற்றம். அவர் அணிந்து வந்த பச்சை சேலை இப்போது காணவில்லை. கருஞ்சிவப்பு சேலையில்தான் பவனி வருகிறார். கலைஞர் மஞ்சள், ஜெ கருஞ்சிவப்பு என்றாகிவிட்டது.

இந்த வண்ணங்களுக்கு ஏதாவது முக்கியத்துவம் உண்டா? உளவியலாளர்கள் என்ன சொல்கிறார்கள்?

மஞ்சள் மகிமை என்ன?

மஞ்சள்: நம்பிக்கை, உற்சாகம், மகிழ்ச்சிக்கான நிறம். ஆக்கபூர்வமான எதிர்காலத்தை உறுதி செய்யும் நிறம், மூளையை உற்சாகப்படுத்தும், நரம்புகளை ஊக்கப்படுத்தும், நினைவையும் பேச்சாற்றலையும் தூண்டும். ஜப்பானில் போர் வீரர்கள் தங்களுக்கு தைரியத்தைக் கொடுக்க மஞ்சள் பூக்களை பயன்படுத்துவார்கள். இந்தியாவில் மஞ்சள் என்பது புனிதம், ஆன்மிகம்.

கருஞ்சிவப்பு மகிமை என்ன?

அதிக சக்தியை தனக்குள் வாங்கிக் கொள்ளக்கூடியது கருஞ்சிவப்பு. உற்சாகத்தை ஊக்கப்படுத்தும், பலத்தைப் பெருக்கும். செயலையும் நம்பிக்கையையும் உற்சாகப்படுத்தும். பயம், பதட்டம் இவற்றின் பாதுகாவலன்.




சரித்திர பூர்வமாக பார்த்தால், பல மொழிகளில் அழகின் அடையாளம் கருஞ்சிவப்பு. இந்தியாவில் வெற்றித் திலகத்தின் இன்னொரு நிறம் கருஞ்சிவப்பு. உதாரணமாக குங்கும சிவப்பையும் கருப்பு கூந்தலையும் இணைத்தால் கருஞ்சிவப்பு.

சரி, ஜோதிட ரீதியாக இந்த நிறங்களுக்கு என்ன முக்கியத்துவம்?

கலைஞர், ஜெயலலிதா இருவருமே ஜோதிடம் நன்கு அறிந்தவர்கள் என்று சவால் விட்டு சொல்கிறார்கள் அவர்களுக்கு நெருக்கமானவர்கள். 'இவ்விடம் ஜோதிடம் பார்க்கப்படும்' என்பவர்களை தவிர்த்து, ஜோதிடத்தை தொழிலாக செய்யாமல் அதில் விஞ்ஞான பூர்வமாக ஆராய்ச்சி செய்பவரை தேடி கடைசியாக டெல்லியில் கண்டுபிடித்தேன். அவரின் ஆராய்ச்சியின் படி முதலில் மஞ்சளுக்கு வருவோம்.

கலைஞரின் ஜாதகப்படி அவர் கடக லக்கினம், ரிஷப ராசி யில் பிறந்தவர். கடக லக்னத்திற்கு 6, 9ஆம் வீடுகளின் அதிபதியான வியாழனும், 5, 10 வீடுகளின் அதிபதியான செவ்வாயும், முழு யோகத்தை கொடுப்பவர்கள். 9க்குரிய வியாழன் கலைஞர் ஜாதகத்தில் 5ஆம் வீட்டில் உள்ளார். 5ஆம் வீடான விருச்சிகத்தின் அதிபதி செவ்வாய், 7ஆம் வீட்டில் உச்சம் பெற்றுள்ளார். கடக லக்னத்தின் லக்னாதிபதியான சந்திரன் 11ஆம் இடத்தில் உச்சம் பெற்றுள்ளார். உச்சம் பெற்ற சந்திரனுக்கு, விய-ாழன் 7ஆம் இடத்தில் அமைந்து கஜகேசரி யோகம் பெற்றுள்ளார். கஜம் என்றால் யானை, கேசரி என்றால் சிங்கம்.

அதனால் வியாழனின் நிறமான மஞ்சளை எடுத்துள்ளார் கலைஞர். மஞ்சள் நிறத்தை கையில் எடுத்த பிறகு அரசி யலில் ஏறுமுகமாகம்தான். ஆனால், மஞ்சள் என்பது ஆன்மீகத்தின் நிறம். அந்த நிறத்தை வைத்து தவறுகள் செய்தால் அது விபரீதத்தில்தான் முடியும். பிரேமானந்தா, நித்யானந்தா,

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# மஞ்சள் சால்வையும்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

சந்திராசாமி, ஜெயேந்திரர் உட்பட... இதற்கு உதாரணங்கள் ஏராளமுண்டு.

ஜெயலலிதா மிதுன லகனத்தில், சிம்ம ராசியில் பிறந்தவர். மிதுன லக்னத்திற்கு புதன் கிரகம் லகனாதிபதியாவார். 4ஆம் வீட்டுக்குரியவரும் கூட. சிம்ம ராசிக்கு 2, 11ஆம் வீட்டுக்கு உரியவராவார். ஜெயலலிதா ஜாதகத்தில் புதன் லகனத்திற்கு 9ஆம் இடத்தில் உள்ளார். 9க்கு இரண்டாம் வீடான மீனத்தில் சுக்ரன் உச்சம் பெற்றுள்ளார். (லகனத்திற்கு 10ஆம் இடம்).

பச்சை நிறம் என்பது புதனுக்குரியது. ஆக அந்த பச்சை நிறம் கலையுலகத்தில் அவரை கொடி கட்டி பறக்கச் செய்தது. ஆனால், அரசியல் களத்தில் வரும்போது, மஞ்சள் நிறத்துடன் பச்சையால் ஈடு கொடுக்க முடியவில்லை. (முன்பு அவருக்கு தவறுதலாக ஜோதிட அறிவுரை சொல்லியிருக்கிறார்கள்.)

நாத்திகவாதியான கலைஞர் இந்தியாவின் ஆன்மீக அடையாளமான மஞ்சளை தேர்தெடுத்திருக்கிறார். ஆன்மிகத்தில் முழு நம்பிக்கை வைத்துள்ள ஜெய்லலிதா தவறுதலான வண்ணத்தை தேர்ந்தெடுத்தார். இது காலத்தின் கோலம்

சமீபகாலமாக கருஞ்சிவப்பை ஜெயலலிதா எடுத்தவுடன் ஏறுமுகம் துவங்கிவிட்டது.

அதற்குரிய காரணத்தை பார்ப்போம். லகனத்திற்கு 11ஆம் இடத்தில் ராகு உள்ளார். சிம்ம ராசிக்கு ஒன்பதாம் இடத்தில் உள்ளார். லக்னாதிபதி புதனுக்கு வீரவீர்ய ஜெயஸ்தானமான 3ஆம் வீட்டில் அமர்ந்துள்ளார். அவருக்கு இடம் கொடுத்த செவ்வாய், ராகுவிற்கு 5ஆம் வீட்டில் அமர்ந்துள்ளார். ராகு, செவ்வாய் இருவரையுமே மிதுன லக்னத்திற்கு 7ஆம் இடத்தில் ஆட்சி பெற்ற வியாழன் ராகுவை 5ஆம் பார்வையாகவும், செவ்வாயை 9ஆம் பார்வையாகவும் பார்த்துள்ளார். ராகுவின் நிறமான கறுப்பையும், செவ்வாயின் நிறமான சிகப்பையும் கையெலெடுத்த பின் அதுவே ஜெயலலிதாவுக்கு ஏறுமுகமாக அமைந்து சாதனைகள் படைக்க வழி வகுக்குமாம்.

பொறுத்திருந்து பார்ப்போம்.

---------------------

மார்ச் 8ஆம் தேதி டெல்லியில் காங்கிரஸ் - திமுக கூட்டணி உடன்பாடு ஏற்பட்டபின் திமுக மீதான '2ஜி புகழ்' பிரசாரம் சற்று மந்தமாகவே இருந்தது. கனிமொழி, தயாளு அம்மாள் இரண்டு பெண்மணிகளையும் சிபிஐ விசாரிக்க வந்தவுடன் மீண்டும் அகில இந்தியாவின் கவனத்திற்கு அறிவாலயத்தை கொண்டு சென்றன ஊடகங்கள். அன்று இரண்டு செய்திகள்தான் ஊடகங்களில் முக்கியத்துவம் பெற்றன. ஜப்பானில் சுனாமி, தமிழகத்தில் பினாமி.

இந்த விசாரணை, அதைத் தொடர்ந்து சிபிஐ வழக்குப் பதிவு என வரப்போகும் நாட்களில் என்ன நடக்கப் போகிறது என்று நினைத்தாலே கலக்கமாயிருக்கிறது. திமுக - காங். உறவு இம்முறை கட்டாயக் கல்யாணம் வேறு. இங்கே திமுக காங்கிரஸிலிருந்து விலகல் நாடகத்தை மார்ச் 6ஆம் தேதி அரங்கேற்றியதுமே, தில்லியில் தங்கள் நாடகத்திற்கு கதை வசனத்தை காங்கிரஸ் ஒரே நாளில், அதாவது மார்ச் 7ஆம் தேதி எழுதி முடித்துவிட்டது. மார்ச் 8ஆம் தேதி மகளிர் தினம் உண்மையில் சோனியாவின் தினம்தான். வீராவேசமாக கிளம்பிய கழக கண்மணிகளை, கலைஞர் குடும்பத்து பொன்மணிகளை தில்லி வீதியில் பீதியோடு அலையவிட்டது காங்கிரஸ்.



தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்கிற கதையோடு, கேட்ட இடத்திற்கு ஒப்புக்கொண்டு அறுபத்தி மூன்று நாயன்மார்களை சென்னையில் வரவேற்க சேக்கிழார் பிரான் கருணாநிதி உத்தரவிட்டார்.

இந்த இரண்டு நாட்களும் டெல்லி ஊடகங்கள், திமுக - காங்கிரஸ் மோதல்கள் எத்தனை இடங்களுக்காக என்பதில் இல்லை, கருணாநிதி குடும்பத்தினர் மீது சிபிஐ பாயக்கூடாது என்பதற்காகத்தான் என்பதை வெளிச்சம் போட்டுக்காட்டியது. காங்கிரஸ் தங்களுடன் இருப்பதினால் திமுக தலைமை இப்போது நிம்மதி பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கும்.

ஆனால், ஆ.ராசா. அந்த தலித் இளைஞன் தன்னந்தனியாக தவிப்பதைப் பற்றி இப்போது திமுக தலைவருக்கே மறந்துவிட்டது. ராசா என்ன கட்சிக்காக கல்லக்குடி போராட்டத்தில் கலந்துகொண்டு தியாக மறவராக சிறையில் இருக்கிறாரா? அல்லது இலங்கையில் தமிழ் இனத்தை பூண்டோடு அழித்துவிட்ட காட்சிகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த திமுக - காங்கிரஸின் முற்போக்கு ஜனநாயக கூட்டணியை எதிர்த்து சிறைக்கு போயிருக்கிறாரா?

அலைக் கற்றைகள் மூலமாக கற்றையாக வாங்கி தலைவர் குடும்பத்திற்கு அர்பணித்த தொண்டன் அங்கே சிறையில் வாடுகிறார். கலைஞர் குடும்பத்தினர் மீது 2ஜீ கறை படியக்கூடாது என்று கவலைப்பட்ட திமுக தலைமை, ராசா மீது தேசிய பாதுகாப்பு சட்டம் பாயக்கூடாது என்கிற குரலை எழுப்பியதாகக் கூட பேச்சில்லை. திமுகவைப் பொறுத்தவரையில் இனி 2 ஜிக்கு அடுத்தபடியான அலர்ஜி 'ராசா' என்கிற பெயர்தான். இனி ராசாவுக்கு என்ன ஆகும்? என்று கவலைப்பட வேண்டியது அவரது குடும்பத்தினர்தான்.

நரசிம்மராவ் இந்தியப் பிரதமராக இருந்த நேரமது. பிரிட்டானிய பிஸ்கெட் கம்பெனி அதிபர் ராஜன் பிள்ளை திகார் சிறையிலிருந்தார். அவரை பொருளாதார குற்றத்திற்காக சிங்கப்பூர் அரசு அவரை கைது செய்ய உத்தரவிட்டிருந்தது. அவர் இங்கே சிறையிலிருக்கிறார் என்றதும் அவரை தங்களிடம் ஒப்படைக்கும்படி சிங்கப்பூர் அரசு, இந்திய அரசை கேட்டது. இந்த கோரிக்கை வந்த அடுத்த நாளே ராஜன் பிள்ளை இறந்துவிட்டதாக, அவரது மரணச் சான்றிதழ் தான் அனுப்பி வைக்கப்பட்டது. அவர் எப்படி இறந்தார் என்பது அந்த 'ஆண்டவனுக்கே' வெளிச்சம். நான் அன்று நாட்டை ஆண்டவரை சொல்லவில்லை, எல்லாம் வல்ல இறைவனைத்தான் சொல்கிறேன்!

ராஜன் பிள்ளை, ராசா இந்த பெயர் ஒற்றுமை ஏதோ என் மனதில் அல்லாடிக் கொண்டிருக்கிறது.

---------------------

'நான் குடும்பம் என்று கருதுவதும் என்னையும் ஒரு அங்கமாகப் பிணைத்துக் கொண்டிருப்பதும் இந்த இயக்கம் ஒன்றைத்தானே தவிர வேறில்லை' - இது கலைஞரின் சுயசரிதையான 'நெஞ்சுக்கு நீதி' இரண்டாம் பாகம், பக்கம் 1இல் கலைஞரே எழுதியது. இந்த சுயசரிதை வெளியானது 1987ஆம் வருடம். 24 ஆண்டுகள் ஓடிவிட்டது. காலமும் கட்டாயமும் பல மாய ஜாலங்களை செய்துவிட்டது. இப்போது இயக்கத்தையே தன் குடும்பமாக்கி, அதை டெல்லியில் அடமானம் வைத்துவிட்டார் கலைஞர். திமுகழகத்தின் 'சரணாகதி படலம்' மார்ச் 8ஆம் தேதி மகளிர் தினத்தன்று டெல்லியில் அரங்கேறிவிட்டது.

இது கலைஞரின் ராஜதந்திரம் என்கிறார்கள் அப்பாவி கழக கண்மணிகள். எதற்காக இந்த ராஜதந்திரம்? கட்சியின் நலனுக்காகவா? உச்ச நீதிமன்ற உத்திரவினால் துரத்தும் சிபிஐ விசாரணைக்காகவா? சீறும் சிபிஐதான் இந்த சரணாகதிக்கு காரணம் என்பது இந்தியத் திருநாட்டிற்கே தெரியும். மேலும், காங்கிரஸ் தயவில்லாமல் தேர்தலில் திமுக 'திருமங்கல' வேலைகளை களத்தில் செய்ய முடியாது.

சென்னையில் 'பொறுத்தது போதும் பொங்கியெழு' என்று வீர வசனம் பேசினார்கள். அமைச்சர்கள் டெல்லி போனதும் 'மாதா உன் கோவிலில் மணி தீபம் ஏந்தினேன்' என்று சோனியாவிடம் மண்டியிட்டார்கள். இதன் பின்னணிதான் என்ன?

ராஜினாமா கடிதம் கொடுக்க பிரதமர் நேரம் ஒதுக்கவில்லை என்று ஒரு காரணம். அன்று, அதாவது மார்ச் 7ஆம் தேதி பிரதமர் நாடாளுமன்றம் வந்தாகவேண்டும். ஊழல் மற்றும் கண்காணிப்புத் துறை தலைவர் தாமஸின் நியமனத்தை ரத்து செய்தது உச்ச நீதிமன்றம். அதற்கு தானே பொறுப்பேற்றுக்கொண்டு, நாடாளு மன்றத்தில் விளக்கமளித்தார் பிரதமர். அங்கே போய் அவரிடம் ராஜினாமா கடிதங்களை கொடுத்து விட்டுவர வேண்டியதுதானே இந்த தன்மானத் தமிழர்களின் வேலை. அதை விடுத்து ஏன் பிரணாப் முகர்ஜியின் தூதுக்கு மண்டியிட்டார்கள்?

'மக்கள் நலன், மக்கள் நலன் என்றே சொல்லுவார், தம் மக்கள் நலன் ஒன்றேதான் மனதில் கொள்வார்' என்று வாலி எம்ஜிஆருக்காக எழுதிய பாடல் வரிகள்தான் டெல்லியில் வேலை செய்தது.

கூட்டணி முடிந்தது. வெற்றி நமக்குத்தான் என்று திமுக - காங். இரண்டு கட்சிகளும் வெளியே மார்தட்டிக்கொண்டு பவனி வருகிறது. ஆனால், நடந்திருப்பது ஒரு கட்டாயக் கல்யாணம். எனவே, கடந்த காலங்களைப் போல இரண்டு கட்சிகளும் மனமொத்த தம்பதிகளாக வீதியில் பவனி வரப்போவதில்லை. இன்னொரு பக்கம், தொகுதிகள் முடிவாகி இரண்டு கட்சிகளின் வேட்பாளர்களும் வேட்பு மனுத் தாக்கல் செய்கிற நேரத்தில் சிபிஐயின் கிடுக்கிப்பிடி கள் தொடரும். அது கலைஞர் குடும்பத்தின் மீது பாய்ந்தால் திமுக தொண்டர்களின் கோபமெல்லாம் காங்கிரஸ் மீது பாயும். களம் ரண களமாகிற வாய்ப்பும் உண்டு.

தேர்தல் சூடு பிடிக்கும்போது 2ஜீ விவகாரமும் சூடு பிடிக்கும். அது திமுகவை தமிழகத்தில் பாதிக்கும். காங்கிரஸை அகில இந்தியாவிலும் தாக்கும். அது கேரள, மேற்கு வங்க, அசாம் தேர்தல்களிலும் எதிரொலிக்கும். அந்த பயமும் காங்கிரஸிற்கு இல்லாமலில்லை.

காங்கிரஸ் அதிக இடங்களை கேட்டுப் பெற்றதில் இன்னொரு தந்திரமும் உண்டு. இப்போது திமுக வசமுள்ள தொகுதிகள் 121 மட்டுமே. பெரும்பான்மை பலம் பெற 117 இடங்கள் நிச்சயம் தேவை. 2006 தேர்தலின் போது திமுக ஆட்சியிலில்லை. அதனால் அந்த கட்சிக்கு அப்போது எதிர்ப்பு அலை கிடையாது. அப்படி இருந்துமே 90 இடங்களில்தான் திமுக வெற்றி பெற்றது. இப்போது திமுக எதிர்ப்பு அலை என்பது அகில இந்திய புகழ் பெற்றுவிட்டது. அதை மீறி எத்தனை இடங்களை பெறப்போகிறது என்பது பெரும்



\- சுதாங்கன் -

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# மத்திய கிழக்கு...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

நேட்டோவும், அமெரிக்காவும், ஐ.நாடுகளும் போரிட்டால் நான்காவது போர். மேற்கத்திய படை வீரர்கள் இப்பிரதேசத்தில் மேலும் காலூன்ற உதவும். இப்போர் வீரர்களுக்கான ஊதியமும் இப்பிரதேச வளத்தில் இருந்தே பறிக்கப்படும். உலகமயமாதலின் விளைவால் மேற்கில் ஏற்பட்டுள்ள வேலையற்றோர் தொகை அதிகரிப்பின் 1-2 வீதத்தை தொடர்ச்சியான போர்கள் குறைக்கும். இவற்றுடன் இப்பிரதேசத்தில் மேற்கத்திய நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்தும். லிபியா உட்பட்ட மத்திய கிழக்கு பிரதேசங்களில் சீனாவின் ஆதிக்கம் அதிகம். லிபியாவில் எண்ணெய் ஏற்றுமதியில் 11 வீதம் சீனாவிற்கு செல்கின்றது. Chevron and Occidental Petroleum (Oxy) லிபியாவில் இருந்து விலகிவிட்டது. லிபியாவில முதல் கால் பதித்த மேற்கத்திய நிறுவனங்களான இவை மீண்டும் லிபிய அரசுடனான ஒப்பந்தத்தை மீள ஏற்படுத்திக் கொள்ளவில்லை. இதற்கு முக்கிய காரணம் லிபியாவில் அரசுக்கும் முகவர்களுக்கும் மீள் ஒப்பந்தத்தை உறுதி செய்து கொள்ள பல கோடிகளை வாரியிறக்க வேண்டும் என இந் நிறுவனங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. EnergyandCapital.com இன் கருத்துப்படி ஒரு பரல் 110 க்கு உலக சந்தையில் விற்கப்படும் எண்ணெயின் உண்மை விலை ஒரு டொலர் ஆகும். மொத்தம் 109 டொலர் லாபம். (At $110 on the world market, the simple math gives Libya a $109 profit margin." (Libya Oil, Libya Oil One Country's $109 Profit on $110 Oil, EnergyandCapital.com March 12, 2008) இந்த லாபத்தை விட்டு விட்டு வரமுடியுமா? கனடா போன்ற மேற்கத்திய நாடுகளில் எடுக்கப்படும் எண்ணெய்க்கான உற்பத்தி விலை மிக மிக அதிகம். மத்திய கிழக்கு நாடுகளில் எடுக்கப்படும் எண்ணெயால் நிகர லாபம் அதிகம்.

அமெரிக்க உளவு நிறுவனங்கள் இந்தப் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க பகீரத பிரயத்தனம் செய்தன. நியுஸ் வீக் இதழ் ஜோர்டான் அரசர் ஹுசெயின் அமெரிக்க உளவாளியாக செயல்பட்டார் என குற்றஞ்சாட்டியுள்ளது. இது குற்றஞ்சாட்டலா அல்லது மத்திய கிழக்கு நாடுகளுக்கான எச்சரிக்கையா? சவூதி அரசும் அமெரிக்க சார்பு அரசே. மத்திய கிழக்கை தம் கைகளுக்குள் அடக்க அமெரிக்க பல தந்திரியங்களைச் செய்கின்றது.

லிபியா மீது அமெரிக்கா போரை தொடர தயங்குவதற்கு பல காரணங்கள் உள்ளன. ஏற்கெனவே நடைபெறும் மூன்று போர்களினாலும் கெட்ட பெயரை அமெரிக்கா பெற்றுள்ளது. நான்காவது போரினால் அமெரிக்கா மத்திய கிழக்கு நாடுகளின் எதிரியாக மாறிவிடும். கடாபி அல்-கைடா விற்கு எதிராக பல உதவிகளை அமெரிக்காவிற்கு செய்துள்ளார். அமெரிக்காவிற்கு நன்றிக் கடன் செலுத்தும் நோக்கம் ஒரு பொழுதும் இருப்பதில்லை. ஆனால் நீண்ட கால பயனை உள் நோக்கமாக கொண்டுள்ளதால் சற்று தாமதிக்கின்றது. மற்றைய மத்திய கிழக்கு நாடுகளில் தொடரும் போராட்டங்கள் அமெரிக்காவிற்கு எதிராக திரும்பாமல் இருக்கவும் இந்த கால தாமதம். ஜிம்மி கார்ட்டருக்கு பின் வந்த அனைத்து அமெரிக்க ஜனாதிபதிகளும் மத்திய கிழக்கில் குழப்பத்தை ஏற்படுத்துவதிலேயே குறியாக இருந்தார்கள். இஸ்ரேலில் பாலஸ்தீனியத்தை பிரிக்கும் உயர்ந்த மதில் கட்டப்படும் பொழுது மேற்கு நாடுகள் மௌனமாகவே இருந்தன.



"No-fly zone" அமல்படுத்துவதில் ஐரோப்பிய நாடுகள் தயக்கம் காட்டுகின்றன. பிரான்சும் இங்கிலாந்தும் இதில் தீவிரமாக இருந்தாலும் ஜேர்மனின் chancellor Angela Merkel "fundamentally skeptical" எனக் கூறியுள்ளார். David Cameron, the British prime minister, and Nicolas Sarkozy, the French president லிபியாவின் தீவிரவாதிகளை அங்கீகரித்துள்ளனர். போர்த்துக்கல்லும் லிபியாவுடனான இராஜதந்திர உறவுகளை துண்டித்துள்ளது. நேட்டோவால் முன்பு முன்னெடுக்கப்பட்ட மூன்று "No-fly zone" Iraq in 1991 to1993, Bosnia in 1993 and Kosovo in 1999 பெரும் நட்டத்தை ஏற்படுத்தியுள்ளன. அதாவது இதனை அமல்படுத்தியதற்காக இவர்கள் கொடுத்த விலை அதிகம்.

மத்திய கிழக்கில் தோன்றவுள்ள புதிய அரசுகள் அமெரிக்காவிற்கும் மேற்குலக நாடுகளுக்கும் எதிராக அமையும் என்ற அச்சமும் அமெரிக்காவிற்கும் மேற்குலக நாடுகளுக்குமுண்டு. "If independent, democratic, governments are formed in the Middle East, they won't follow Washington's orders. 'மத்திய கிழக்கு ஆய்வாளர் ஒருவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். புதிய மக்கள் கிளர்ச்சியின் தலைமையை தங்களது கைகளுக்குள் வைத்திருந்தால் தான் இந்த நிலையில் வெற்றி பெறலாம். லிபியாவில் கிளர்ச்சியாளர்களின் அங்கீகாரமும், எகிப்தில் முபாரக்கை இறக்கியதும் இவ்வாறான செயற்பாடுகளே.

கால் நடைகளை பராமரிக்கும் ஒரு வறிய குடும்பத்தில் பிறந்த கடாபி, ஆட்சியைக் கைப்பற்றிய பின் தன்னை முழுமையாக மாற்றிக் கொண்டார். கடாபி ஆட்சியைக் கைப்பற்றிய போது மக்கள் எதிர்க்கவில்லை. அன்றைய ஆட்சி மீதான அதிருப்தியே காரணம். ஆனால் கடாபி இன்று அந்த நிலையில் தான் உள்ளார். தனதும் குடும்பத்தினதும் வங்கிக் கணக்கை நிரப்புவதிலேயே கவனம் செலுத்தினார். ஆரம்ப காலங்களில் அவர் காட்டிய மக்கள் நலன்கள் பின்னர் சுய நலனாக மாறிவிட்டது. இடது சாரித் தலைவர்களுடனும், புரட்சியாளர்களுடனுமான நட்பு ஆட்சியை தக்கவைக்கவே மேற்கொள்ளப்பட்டது. மத்திய கிழக்கு நாடுகள் அனைத்தும் இதே நிலையில் தான் உள்ளார்கள். ஜனநாயகமின்மை, அராஜகம், குடும்ப ஆட்சி போன்றன அன்றைய அரசர்களையே நினைவுபடுத்துகின்றது. அதிபர் என்ற பெயர்தான் இங்கு மாற்றம் மற்ற வகையில் இவர்கள் அரசர்கள் தான்.

தங்களது நாடுகளில் உள்ள வளங்களை தக்கவைத்து தங்களது நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின் அரச குணங்களில் இருந்து மாறி மக்கள் சமூகம் சார்ந்து செயற்படவேண்டும். இல்லையேல் அதிருப்தியாளர்களை திருப்திப்படுத்த மேற்கு நாடுகள் முனையும். பின்னர் அவை மேற்கு நாடுகளின் கைகளுக்குச் சென்றுவிடும். உங்களது எண்ணெயில் அவர்கள் விளக்கெரிப்பார்கள். வெளிச்சம் அவர்களுக்கு, இருட்டு உங்களுக்கு.

TORONTO BUSINESS COLLEGE



Second Career

PERSONAL SUPPORT WORKER

EARN YOUR DIPLOMA AND BECOME JOB READY IN JUST SIX MONTHS

- EXCELLENT INSTRUCTORS
- WELL EQUIPED PSW LAB
- NACC CERTIFICATE
- HANDS ON CLINICAL TRAINING
- 100% CO-OP PLACEMENT
- GOOD SALARY

Classes Starting Soon

GRADUATES WILL BE ABLE TO GET EMPLOYED IN HOSPITALS, NURSING HOMES, ETC.

Computerized Accounting Diploma
New batch Starting in April

தமிழில் உரையாட
416-291-5155

4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY ) SCARBOROUGH
www.t-businesscollege.com

(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)

# வாழ்வில் உதைக்கும் தங்கள் கிரிமினல் குற்றப்பதிவுகளை அழிப்பது எப்படி?

என்றோ ஒரு நாள் தெரிந்தோ? தெரியாமலோ கனடா வாழ்வில் பொலீஸ் விசாரணையில் சிக்கியிருந்த துர்அதிர்ஷ்டம் பலருக்கும் ஏற்பட்டிருக்கலாம். அங்கு!

- தங்கள் கைவிரல் அடையாளங்கள் (Fingerprints) எடுக்கப்பட்டிருக்கும்.
- அத்துடன் சேர்த்து கிரிமினல் சட்டம் ஒன்றில் குற்றம் சாட்டப்பட்டவராக படங்களும் எடுக்கப்பட்டிருக்கும்.
- இவை யாவற்றுடனும் சேர்ந்து தங்கள் பெயர், விபரங்கள் யாவும் குற்றம் சாட்டப்பட்டவராக பொலீசாரின் மின்கணினி தகவல் மையத்தின் பதிவுகளில் இருக்கும்.

இது என்றோ ஒரு நாள் தங்களின் கனடா வாழ்வில் நடந்த ஒரு மறக்கப்பட்ட துர்அதிர்ஷ்டமான சம்பவமாகவும் தற்போது இருக்கலாம். நீதிமன்றத்தின் விசாரணையில் குற்றசாட்டிலிருந்து சில நேரம் தப்பியும் இருக்கலாம். ஆனால் குற்றம் சாட்டப்பட்டவ ராக பொலீஸ் நிலைய பதிவுகளில் உள்ள 'கைவிரல் அடையாளங்கள்', 'குற்றம் சாட்டப்பட்ட நிலையில் தங்கள் திருமுகங்கள்', 'பெயர் விபரங்கள்' அகற்றப்படாது பொலிஸ் பதிவுகளில் தொடர்ந்திருக்கும். அந்த பதிவுகள் அகற்றப்படாதிருப்பது ஒரு பிரச்சினை யில்லாத மாதிரியே தங்களுக்கு தென்படும். சில நேரங்களில் தொடர்ந்து அமைதியாக வாழும் ஒரு மனிதனின் வாழ்வில் பல இடங்களில் வந்து வந்து அந்த பதிவுகள் யாவும் நின்று நின்று உதைக்கும் போது இதற்கு ஒரு தீர்வு இல்லையா என ஏங்கப்பண்ணும்! ஆனால் அதற்கும் ஒரு தீர்வு உண்டு. அது தெரியுமா?

தொடர்ந்து பிரச்சினையேதுமில்லாது சமூகத்தில் அமைதியாக வாழ்கின்றவர்கள், மற்றும் வாழவிரும்புபவர்கள் தங்களுக்கு மனுச்செய்து இங்குகுற்றப்பதிவுகளை அழித்து விடுங்கள் என கனடாவின் பொலிஸ் பிரிவினர் அழைக்கின்றனர் என்பதனை அறிந்து கொண்டீர்களா? அந்த சந்தர்ப்பத்தினை தங்களுக்கு வழங்கி சமூகத்தில் தங்களை ஒரு பிரச்சினையில்லாத பிரஜையாக வாழ வைக்க அவர்களும் விரும்புகின்றனர் என்பதனை தெரிந்து கொண்டீர்களா? இதனை ஆங்கிலத்தில். "Request for destruction of adult fingerprints, photograph and records of disposition' என குறிப்பிடப்படுவதுண்டு.

ரொறொன்ரோ நகர பொலீஸ் பிரிவுகளில் பதியப்பட்டிருக்கும் பதிவுகளை அகற்றும் இந்த கோரிக்கைக்கு எதுவிதமான பண செலவுமில்லை, வக்கீலும் தேவையில்லை எல்லாம் இலவசம் தான்! தாங்களாகவே முன் எடுக்கலாம் வழிமுறை இதுவேயாகும்.

**பொலீஸ் நிலைய குற்றப்பதிவுகளை அழிக்க கோரும் விண்ணப்ப பத்திரத்தினை எப்படி பெறுவது? அதனை எங்கே அனுப்புதல் வேண்டும்?**

## கனடிய தகவல் தொடர் 144

பின்வரும் இணையத்தளத்தினுள் சென்று தகவல்களை அறியலாம். விண்ணப்பத்திரத்தினையும் பதிவு இறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
www.torontopolice.on.ca/publications/files/forms/fingerprint_destruction.pdf

விண்ணப்பபடிவத்தில் பின்வரும் விடயங்களுக்கு பதில் வழங்குதல் வேண்டும்.
- பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் கைது செய்யப்பட்ட போது வேறு பெயரில் வசித்திருந்தால் அந்த விபரங்கள்.
- பிறந்த திகதி, மாதம், ஆண்டு.
- வக்கீல் அல்லது முகவர் நியமித்தால் அது பற்றிய விபரங்கள்.
- குற்றசாட்டு தொடர்பான விபரங்கள். (அதாவது இறுதியாக நீதிமன்றத்திற்கு சமுகமளித்த திகதி, நீதிமன்ற இடம், குற்றசாட்டு, தீர்ப்பு போன்றவை) விண்ணப்பத்தில் கைச்சாத்திட்டபின்பு பின்வரும் விலாசத்திற்கு தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

*Toronto Police Service*
*40, College Street*
*Toronto, ON M5G 2J3*

தொலைநகல் மூலம் அனுப்ப வேண்டுமானால் Attention: 'Criminal Records' எனக் குறிப்பிட்டு 416.808.8202 என்ற தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பம் கிடைத்ததும் பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சிக் கடிதம் அனுப்பி வைப்பார்கள். சில மாதங்களின் பின்பு கீழேகுறிப்பிட்ட நிபந்தனையின் அடிப்படையில் தொடர்ந்தும் நல்ல பிரஜையாக வாழ்வீர்கள் என்ற நம்பிக்கையில் கோரிக்கை நியாயமாக இருந்தால் பதிவுகள் யாவற்றினையும் பூரணமாக அழித்துவிட்டு, அதனை தபாலில் அறிவிப்பார்கள். ரொறொன்ரோ பொலீஸ் பிரிவுகளில் ஏற்கெனவே பதிவாகியுள்ள தங்களின்
- கைவிரல் அடையாளங்கள் (Fingerprints)
- ஆள் அடையாள படங்கள் (Photographs)
- பெயர் பதிவுகள் (Records of disposition)

ஆகிய மூன்று அம்சங்களையும் முற்றாக அழித்து விடுமாறு கோரும்போது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

1. குற்றம் சாட்டப்பட்டவர் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. இறுதியாக நீதிமன்றத்திற்கு சமுகம் அளித்து குறைந்தது ஐந்து மாதங்கள் கடந்திருத்தல் வேண்டும்.
3. வேறு எந்த கிரிமினல் குற்றங்களும் இருத்தல் கூடாது.
4. நீதிமன்றத்தில் எதுவிதமான வழக்குகளும் நிலுவையில் இருத்தல் கூடாது. (No Outstanding Charges Before the Court)
5. குற்றம் சாட்டப்பட்டவரின் தீர்ப்பு என்பது நீதிமன்றத்தினால் பின்வருமாறு வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

அ. ஒழுங்காக, நன்னடத்தையுடன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வாழ்வேன் என நீதிமன்றத்தில் கைச்சாத்திடும் உடன்படிக்கை. (Peace Bond) ஆனால் இந்த நிலையில் தீர்ப்பு வழங்கப்பட்டவர்களுக்கு ஒரு நிபந்தனை. அதாவது குறிப்பிடப்பட்ட காலம் என்பது முடிவடைந்திருக்க வேண்டும்.

ஆ. குறிப்பிட்ட குற்றசாட்டில் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்ற காரணத்தினால் நீதிமன்றத்தில் குற்றவாளியாக தீர்க்கபடாதவர். (Acquitted Sentence)

இ. உறுதியான குற்றச்சாட்டாகவில்லை யானால் வழக்கு தள்ளுபடி செய்த நிலையினை எதிர்கொண்டவர் தள்ளுபடி செய்தல். (Quashed)

ஈ. எச்சரிக்கையுடன் மேல்முறையீட்டுக்கு குற்றத்தினை நிராகரித்தல் இதிலும் 'பூரணமாக நிராகரித்தல்', 'நிபந்தனையுடன் நிராகரித்தல்' என இருவகை உண்டு. (Absolute Discharge or Conditional Discharge)

சில நேரங்களில் தங்கள் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது என ஒரு பதிலும் கடிதத்தில் வந்து சேரலாம். அப்படி வந்திருந்தால் அது கிடைத்து அறுபது நாட்களுக்கிடையில் விரும்பினால் இதே பொலீஸ் பிரிவின் மேலிடத்திற்கு எழுத்தில் மேல்முறையீடு செய்யலாம். குற்றம் நிராகரிக்கப்பட்டது என்ற தீர்ப்பினை எதிர்கொண்டவர் மனு அனுப்பவேண்டிய முகவரி பின்வருமாறு.

THE MANAGER
RECORDS MANAGEMENT SERVICES
40, COLLEGE ST.
TORONTO, ON M5G 2J3

உதாரணத்திற்காக ரொறொன்ரோ நகர பொலீஸ் பிரிவு குற்றப்பதிவுகளை இங்கு குறிப்பிட்டிருந்தேன். இதேபோல ஏனைய நகர பொலீஸ் பிரிவினர் இதே ஒழுங்கு விதிகளுடன் சில இடங்களில் சற்று மாறுதலான சட்டங்களுடன் இந்த கோரிக்கையினை நிறைவேற்றி வைப்பார்கள்.

உதாரணமாக 'அஜெக்ஸ் (Ajex)' பிக்கரிங் (Puckering)', விற்பி (Whitby) போன்ற நகர பொலீஸ் பிரிவுகளில் (Durham Regional Police Division) பின்வரும் உத்தியோகத்தருடன் தற்போது தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

Kathy Massey
தொலைபேசி: 905.579.1520 Ext. 4113
மின்அஞ்சல்: Kmassey@drps.ca இப்பிரிவில் இத்தகைய கோரிக்கையினை நிறைவேற்ற விண்ணப்படுடன் $50 டொலர் பணம் செலுத்துதல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டது பொலீஸ் நிலைய பதிவில் உள்ள குற்றம் சாட்டப்பட்டவர்களின் பதிவுகளை அழிப்பதற்குரிய வழிமுறை மட்டுமேயாகும். ஆனால் நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்படாது தப்பியவர்கள் மட்டும் எப்படி பொலிஸ் நிலைய பதிவுகளிலிருந்து தங்கள் விபரங்களை அகற்றுவது என்பது மட்டுமேயாகும்.

ஆனால் நீதிமன்றத்தில் என்றோ ஒரு நாள் குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பட்டவர்களின் பதிவுகளை (Court Conviction Record) சில வருடங்களின் பின்பு அகற்ற வேண்டுமாயின் அதற்கு மனு செய்ய வேண்டியது இன்னொரு இடம், அது
National Parole Board
Clemency & Pardons Division
410, Laurie Ave, West, 5Th Floor
Ottawa Ontario K1A 0R1
தொலைபேசி: 1.800.874.2652

இங்கு நீதிமன்றத்தில் குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பட்டு, சிலநேரங்கள் தண்டனையினையும் ஒரு காலம் அனுபவித்தவர் குற்றப்பதிவுகளை அகற்றும் கோரிக்கையினை முன் எடுப்பது எப்படி? அதற்கு பின்வரும் வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

1. சகல கிரிமினல் பதிவுகளும் முறைப்படி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

பொலீஸ் நிலையம் சென்று 'கையடையாளம் பதியும் விண்ணப்பம்' (Fingerprint form) எடுத்து பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
RCMP
CIVIL FINGERPRINT SCREENING SERVICE
P.O BOX 8885
OTTAWA, ON K1G 3M8
என்ற முகவரிக்கு $25 டொலர் மணி ஓடரும் சேர்த்து அனுப்ப கனடாவிலுள்ள தங்களின் சகல கிரிமினல் குற்றப்பதிவுகளையும் தபாலில் அனுப்பி வைப்பார்கள்.

2. விசாரணை நடந்த நீதிமன்றத்தின் அலுவலகத்திற்கு சென்று வழக்கு தொடர்பான விபரங்களை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# இயற்கையான பலவீனம்

## ஓடும் நீர் உறைவதில்லை 20
## இரண்டாம் பாகம்

நாம் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள் என்பது நம்மைப்போல் இன்னொருவர் இதுவரை பிறந்ததும் இல்லை இனிமேல் பிறக்கப்போவதும் இல்லை என்பதை உறுதிப்படுத்துவது ஆகும். இந்தத் தனித்துவமானது உடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் நம்மை மற்றவர்களில் இருந்து வேறுபடுத்துகின்றது. உடலியல் ரீதியில் சிலசமயங்களில் இருவர் ஒரேமாதிரியான தோற்றப்பாட்டைப் பெற்றிருப்பதாகத் தோன்றும். இந்தத் தோற்றப்பாடானது குறிப்பாக இரட்டைக் குழந்தைகளில் காணலாம். எனினும் இந்தத் தோற்றப்பாட்டில் காணப்படும் மிகச்சிறிய வேறுபாடானது அந்த இரட்டைக்குழந்தைகளின் தாய்க்கு மிக விளக்கமாகத் தெரியும். அதாவது மற்றவர்களுக்கு இந்த இரட்டைக்குழந்தைகளில் காணப்படும் அந்த வேறுபாட்டை இலகுவில் புரிந்து கொள்ள முடியததாக இருப்பினும் ஒரு தாய்க்கு இது மிக இலகுவானதாகக் காணப்படும். அடிப்படையில் ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களில் இருந்து தனித்துவமானவன் என்பது உடலியல் ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதே.

ஒருவரது மனோபாவங்கள் மற்றவர்களில் இருந்து வேறுபடுவதும் இந்தத் தனித்துவத்தின் இயல்பாகும். ஒருவரது மனோபாவங்களின் வளர்ச்சியானது எவற்றால் தீர்மானிக்கப்படுகின்றன என்பதை நாம் சிறிது ஆழமாக நோக்குவோமாயின் பலகாரணிகள் அடிப்படைகளாகின்றன. இந்தக் காரணிகள் எவையென நாம் வகைப்படுத்த முயல்வது எல்லையற்ற ஒருவிடயத்தை நாம் ஒரு எல்லைக்குள் திணிப்பதற்கு முயற்சிப்பதாகும். ஏனெனில் ஒரு எல்லையை நாம் வகுக்கும் போது அந்த எல்லைக்குட்படும் விடயங்கள் அனைத்தும் எல்லோருக்கும் பொருந்துவனவாகவும் அதேநேரத்தில் ஒரேமாதிரியான பெறுபேறுகளைத் தருவனவாகவும் அமைதல் வேண்டும். ஆனால் இவ்வாறான வரையறைகள் அவ்வாறான பெறுபேறுகளை வெளிப்படுத்துவதில்லை. ஒருவரது மனோபாவங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்பதை மிக இலகுவாகக் குறிப்பிடுவதாயின் அவை அவரது சூழலின் தாக்கத்தால் உருவாக்கப்படுகின்றன என்பது பொருத்தமானதாகும்.

இப்போது இந்த 'சூழல்' என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். ஒருவர் அவரது பிறப்பில் இருந்து அவரது சிந்தனை, சொல், செயல் என்பவற்றிற்குப் பங்களிப்புச் செய்யும் அனைத்தும் சூழல் என வரையறுக்கப்படல் வேண்டும். ஒரு தாயின் உணர்வில் இருந்து ஆரம்பித்து படிப்படியாக ஒவ்வொரு கணப்பொழுதும் ஐம்புலன்களால் உள்வாங்கப்படும் அனைத்தும் ஒருவரது மனோபாவ வளர்ச்சிக்கான அடிப்படைகளாகின்றன. இவ்வாறு உள்வாங்கப்படும் விடயங்கள் நேர்த்தியானவையாக இருப்பின் ஒருவரது சிந்தனை, சொல், செயல் என்பன சிறந்த நெறிமுறைகளைக் கொண்டனவாகவும் நேர்த்தியற்றவையாக இருப்பின் எதிர்மறையான விளைவுகளைக் கொண்டனவாகவும் அமைகின்றன. இதனால்தான் குழந்தைகளின் ஆரம்பகாலத்தில் இருந்தே அவர்கள் வாழும் சூழலானது மிகவும் நேர்த்தியான முறையில் அமைக்கப்படவேண்டியது தவிர்க்க முடியாததாகின்றது. இந்த நேர்த்தியான சூழல் என்பது ஒரு குழந்தையின் பெற்றோர்களில் இருந்து உடனடியாக ஆரம்பிக்கப்பட்ட வேண்டும். இங்கு உடனடியாக என்பது குழந்தை பிறந்ததும் அந்தக் கணப்பொழுதில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். ஏனெனில் குழந்தைகளின் ஆரம்பக் கற்றலானது உணர்வு ரீதியானதாக ஆரம்பிக்கின்றது. அதன் பின்னர் படிப்படியாக அவதானிப்பு மூலம் நகர்த்தப்பட்டுப் பின்னர் பங்குகொள்ளல் மூலம் விருத்தி செய்யப்படுகின்றது.

**KG Master-kgmaster@rogers.com**

இந்த மனோபாவ வளர்ச்சிகள் அனைத்தும் சூழலுக்குகேற்ப மாற்றமடையக் கூடியவையாக இருப்பினும் இந்த சூழலின் தாக்கத்துக்குத் தாக்குப்பிடித்து தனது எதிர்ப்பார்ப்புக்கு ஏற்றவாறு அல்லது தனது சொந்தத் தெரிவுகளுக்கு ஏற்றவாறு அதை விரிவுபடுத்தும் தகைமையை நாம் ஒவ்வொருவரும் பெற்றுள்ளோம் என்பது மிகச் சிறந்த ஒரு செய்தியாகும். ஒருவர் எந்தவொரு எதிர்மறையான சூழலில் இருந்தும் தன்னைப் பாதுகாத்து சிறந்த, நேர்த்தியான மனோநிலையை உருவாக்கக் கூடிய தகுதி உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. நடைமுறையில் அதிகமானவர்கள் இந்த எதிர்மறையான சூழலில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கும் பதிலாக அதற்குள்ளேயே அகப்பட்டு அதற்கு அடிமைகளாகி விடுகிறார்கள். இதனால் தான் அதிபெரும் பான்மையானவர்கள் தமக்குத் தாமே அடிமைகளாகி அவதிப்படுகிறார்கள். ஒரு சிலர் நேர்மை, நெஞ்சுத் துணிவு, தன்னம்பிக்கை என்பவற்றைக் கருவிகளாக் கொண்டு எந்த இடர்வரினும் தமது உயர்ந்த நோக்கத்திற்கமைய முடிவு செய்யப்பட்டுள்ள குறிக்கோள்களில் இருந்து பின்வாங்காமல் வெற்றியை நிலைநிறுத்திவிடுகிறார்கள்.

இதுவரையில் நமது மனோபாவங்கள் நமது சூழலின் பங்களிப்பு என்றும் சூழலின் தாக்கங்கள் எவையாயிருப்பினும் அதை நமக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கக் கூடிய வல்லமை நம் ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதையும் அறிந்தோம். இப்போது இன்னுமொரு முக்கியமான விடயத்தை அறிந்து கொள்வோம். அதாவது நமது இயல்புகளில் சில சூழல்களின் தாக்கத்தால் பாதிப்படைவ தில்லை. இங்கு பாதிப்படைவதில்லை என்பது அந்த இயல்புகள், மனோபாவங்கள் இயல்பாகவே அமைந்திருப்பதாகும். இவ்வாறு இயல்பாக அமைந்திருக்கும் விடயங்கள், குறிப்பாகப் பெண்களுக்குரித்தானவையாகவே அமைந்துள்ளன. இவற்றில் இந்தக் கட்டுரைக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள விடயம் 'இரக்கம்' என்பதாகும்.

பெண்களிடம் இயல்பாகவே காணப்படும் இந்த இரக்கசுபாவம் பற்றிச் சிறிது விரிவாக ஆய்வு செய்வதே எனது நோக்கமாகும். இயற்கையின் கொடையான இந்த இரக்க மனோபாவமே நாம் ஒவ்வொருவரும் தற்போதைய நிலைவரை உயிர்வாழ்வதற்கு வழிசமைத்துள்ளது என்பது உணரப்பட வேண்டிய விடயமாகும். நாம் பிறந்த கணப்பொழுதில் இருந்து நாமாகவே எமது விருப்பு வெறுப்புக்களை வெளிப்படுத்தக்கூடிய உளவியல் வளர்ச்சி ஏற்படும்வரை நமது தேவைகள் அனைத்தையும் உணர்வால் உணர்ந்து நிறைவு செய்கின்ற உயர்வான தன்மையை ஒரு தாய்க்கு கொடுக்கும் இந்த இரக்க மனோபாவமானது இயற்கையின் ஒரு மாபெரும் கொடையாகும். இந்த இரக்கத் தன்மையானது பெண்களுக்குரிய சிறப்பம் சமானது மட்டுமல்ல இயல்பானதாகவும் அமைந்துள்ளது.

இப்போது பெண்களிடம் இயல்பாகவே அமைந்துள்ள இந்த இரக்கமானது அவர்களுக்கு எந்தவிதமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை நோக்குவோம். இரக்கம் என்பது கொடுப்பதற்காக மட்டுமே பயன்படுத்தப்படுவதாகும். ஒருவர் இரக்கத்தைக் கொடுக்கலாமேயன்றி மற்றவரிடம் இருந்து எடுக்கமுடியாது. அதுமட்டுமன்றி கொடுப்பவர் அதற்குப் பிரதிபலனாக எதையும் எதிர்பார்ப்பதுமில்லை. எதிர்பார்க்கவும் முடியாது. இரக்கத்தைக் கொடுப்பவர் தன்னலமற்ற நிலையில் மட்டுமே மற்றவர்மீது அதைப் பயன்படுத்தமுடியும். அவ்வாறு பயன்படுத்தும் போது இரக்கத்தைப் பெறுபவர் அடையும் மகிழ்ச்சியானது கொடுப்பவருக்கு ஆனந்தத்தை தரும். இதனால் இரக்கமானது கொடுக்கக் கொடுக்கப் பெருகுவதும் அந்தப் பெருக்கம் ஆனந்தத்தைப் பெருக்குவதுமாக அமைந்துவிடுகின்றது.

பெண்களுக்கு இயல்பாகவே அமைந்துள்ள இந்த இரக்கமானது அவர்களுக்குரிய ஒரு பலவீனம் என்பதை அறிந்து கொள்வது முக்கியமானதே. ஏனெனில் இரக்கத்தை ஒரு கருவியாகக் கொண்டு தனது சுயநலத்திற்கான விடயங்களை மேற்கொள்ளமுடியாது. ஏனெனில் இரக்கம் ஒருவழிப்பாதை மட்டுமே. கொடுக்கப்படுவதேயன்றி அதற்குப் பிரதியீடாக எதையும் பெறமுடியாது. இன்னொருவகையில் குறிப்பிடுவதாயின் இரக்கம் என்பது எந்தவிதமான பிரதிபலனையும் எதிர்பாராத அல்லது பெறமுடியாத தன்னலமற்ற கொடுப்பனவு மட்டுமே. இதனாலேயே இந்த இரக்கத்தன்மையானது பெண்களைப் பலவீனப்படுத்தும் ஒன்றாகவே அமைந்துள்ளது. அதுமட்டுமன்றி மற்றவர்களால் கூட இவர்கள் பலவீனப்பட்டவர்களாக மிக இலகுவாக மதிப்பிடுவதற்கும் வழிவகுத்துவிடுகின்றது.

இந்த இரக்கத்தை ஒரு தாய் தனது குழந்தைக்குக் கொடுக்கும் போது ஊன் உறக்கம் இன்றித் தன்னைப் பலவீனமாக்கிக் கொடுக்கின்றாள். ஆனால் குழந்தையின் சிரிப்பும் சிறப்பும் இந்தப் பலவீனத்தைத் தாய் உணர்ந்து கொள்ளவதற்குத் தடைபோட்டு மகிழ்ச்சி என்ற உணர்வைக் கொடுத்து விடுகின்றது. ஒரு பெண் தனது இரக்கத்தை மற்றவர்கள் மீது செலுத்தும்போது அந்த இரக்கத்தைப் பெறுபவர்கள் அதன்மூலம் நன்மையைப் பெற்றுக் கொண்டும் கூடப் பெண்களைப் பலவீனமானவர்கள் என்று நடந்து கொள்வதும் நடைமுறையில் காணக்கூடியதாகவுள்ளது. அதாவது ஒரு பெண் இரக்கத்தன்மையை செயற்படுத்தும் போது அதைப் பெறுபவருக்கு உண்மையில் உள்ளம் சார்ந்த நேர்மையான உணர்வுபூர்வமான உதவி அல்லது ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது என்ற உள்ளுணர்வின் உந்துதலாலேயே செயற்படுத்துகின்றாள். அதாவது உள்ளுணர்வின் உந்துதலேயன்றி வெளிப்புறக்காரணிகளல்ல. சில சந்தர்ப்பங்களில் சிலர் இந்த உள்ளுணர்வின் உண்மையான அர்த்தம் புரியாமல் தவறான கணிப்பீடுகள் மூலம் தமது சுயநலனுக்காக இரக்கத்தைக் கொடுப்பவர்களது வாழ்க்கையை இரையாக்க முயற்சிக்கின்றனர். இதை பெண் உணரமுடியாத அளவுக்கு இரக்கத்தால் பலவீனப்பட்டுள்ளார்கள்.

ஆம் வாசகர்களே!
பெண்களுக்கு இயல்பாக அமைந்துள்ள இந்த இரக்கமானது இயற்கையின் சிறப்பான கொடையாக இருப்பினும் அவர்களைப் பொறுத்தவரையில் அதுமுற்று முழுதான பலவீனமே இந்த உண்மையைப் பெண்கள் அறிந்து கொள்வதன் மூலம் விழிப்புணர்வுடன் செயற்படமுடியும். ஏனெனில் பாத்திரம் அறிந்து பிச்சைபோடுவது அவசியம். இரக்கத்தைக் கொடுக்கும் போது ஆரம்பத்தில் அல்லது விரைவாக அதைப் பெறுபவர் பற்றிய இயல்புகளைக் கண்டுபிடிப்பது அவசியமாகும். பெறுபவரது நடத்தைகள், பேச்சுக்கள் என்பன எந்தத் திசையில் நகர்கின்றன என்பதை அவதானிப்பது முக்கியம். அப்போதுதான் இரக்கம் கொடுப்பதற்குரியதாயினும் அதைக் கொடுப்பவர் அதைப்பெறுபவரின் சுயநலனுக்கு உடலியல் ரீதியாகவோ அல்லது உளவியல் ரீதியாகவோ இரையாக்கப்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- நன்றியுடன் KG Master


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**



**மஹாராஜியின் உரைகள்**

| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3221 | Saturdays at 11:00 am Rogers Cable Channel - 20 Bell Express vu Channel - 219 |

# கலித்தொகை - நாடகக் காட்சிகள்

நான்காவதாகக் கலித்தொகையில் இடம்பெறுவது முல்லைக்கலி. காடும் காடுசார்ந்த பகுதிகளும் முல்லை எனப்படும். முல்லையில் தலைவனைப் பிரிந்து தலைவி பொறுத்திருத்தல் பிரதான ஒழுக்கமாகும். முல்லைக்கலி 10ஆவது பாடல் தரும் காட்சி இது:

கடிகொள் இருங்காப்பில் பல்லினத் தாயர்
குடிதொறு நல்லாரை வேண்டுதி யெல்லா
இடுதேள் மருந்தோநின் வேட்கை தொடுதரத்
துன்னித்தந்து ஆங்கே நகைகுறித்து எம்மைத்
திளைத்தற்கு எளியமாக் கண்டை அளைக்கெளியாள்
வெண்ணெய்க்கும் அன்னள் எனக்கொண்டாய் ஒண்ணுதால்
ஆங்குநீ கூறின் அனைத்தாக நீங்குக;

அச்சத்தால் மாறி அசைவினால் போத்தந்து
நிச்சந் தடுமாறும் மெல்லியல் ஆய்மகள்
மத்தம் பிணித்த கயிறுபோல் நின்னலஞ்
சுற்றிச் சுழலுமென் நெஞ்சு;

விடிந்த பொழுதினும் இல்வயிற் போகாது
கொடுந்தொழுவின் உட்பட்ட கன்றிற்குச் சூழுங்
கடுஞ்சூலா நாகுபோல் நிற்கண்டு நாளும்
நடுங்கஞர் உற்றதென் நெஞ்சு;

எவ்வம் மிகுதர எந்திறத்து எஞ்ஞான்றும்
நெய்கடை பாலின் பயன்யாதும் இன்றாகிக்
கைதோயன் மாத்திரை அல்லது செய்தி
அறியா தளித்தென் உயிர்;

அன்னையோ,

மன்றத்துக் கண்டாங்கே சான்றார் மகளிரை
இன்றி அமையேனென்று இன்னவுஞ் சொல்லுவாய்
நின்றாய்நீ சென்றீ எமர்காண்பர் நாளையும்
கன்றோடு சேறும் புலத்து.

இது வெண்ணெய் விற்கச் சென்ற தலைவியைக் கண்டு தலைவன் மெய்தீண்டித் தனது விருப்பத்தைத் தெரிவித்தபோது, அவள் இவ்விடத்தில் சுற்றத்தார் காண்பர்; நாளை சந்திக்கலாம் என்று இடம் கூறியது. இதனை இக்காலத் தமிழில் இப்படி எழுதலாம்:

தலைவி: என்ன! ஆயர் மகள்மீது உனக்கு ஆசை வந்ததோ? தேள் கடுப்புக்கு மருந்து



தேடுவதுபோல உனது காதல் நோய்க்கு என்னையா நாடுகிறாய்? உன்னைக் கண்டு புன்முறுவல் செய்தது தப்பாய்ப் போச்சு! கையைத்தொட விட்டதும் பிழைதான். இதுகளை எல்லாம் வைத்துக்கொண்டு உனது ஆசைக்கு உடன்படுவேன் என்று நீ நினைத்துக் கொண்டாய் போலும்! மோர் கேட்டார்க்கு மோரைக் கொடுப்பவள் வெண்ணெய் கேட்டாலும் கொடுப்பளோ?

தலைவன்: அழகான நெற்றியை உடையவளே! என் காதலை ஏற்றுக்கொள்ள மறுக்கிறாய். வேண்டாம். நான் செல்கிறேன். செல்லமுன் ஒன்று சொல்வேன்: மத்தைச் சுற்றிய கயிறுபோல உன் அழகிலே மயங்கிச் சுழல்கிறது என் நெஞ்சம். உன் மறுப்பால் அது இன்னும் தவிக்கிறது. உன்னிடத்தில் இருக்கும் என் நெஞ்சு இப்பொழுது மீண்டாலும் மீண்டும் உன்னைத் தேடிப் புறப்பட்டுவிடும். தாய்ப்பசு மேயச் சென்றாலும் தொழுவத்திற் கட்டிய தன் கன்றினையே நினைந்து நினைந்து அழும். அதுபோலவே நானும். பாலில் மருந்து போட்டு வெண்ணெயைக் கடைந்தபின்னர் அப்பால் குடிப்பவர்க்குப் பயன்படாததுபோல என்னுயிரும் பயனற்றதாகிவிட்டது. என்ன செய்வதென்று தெரியவில்லை. நான் இனி உயிர் வாழ மாட்டேன்!

தலைவி: ஓகோ! நீ அந்த அளவுக்குப் போய்விட்டாயா? கண்ட உடனேயே என்மீது அவ்வளவு காதலா? நான் சம்மதிக்கவில்லை யென்றால் தற்கொலை செய்யத் துணிவாயா? அப்படியென்றால் ஒன்று செய். இது பலரும் திரிகின்ற இடம். சுற்றத்தார் கண்டாலும் காண்பர். நீ இங்கு நிற்றல் ஆபத்து. நாளைக்கும் கன்று மேய்க்கப் புல்வெளிக்குச் செல்வேன். அங்கு வந்தால் சந்திக்கலாம்.
இப்பொழுது இங்கு நில்லாதே! போ!

இதனால் இருவருக்கும் புணர்ச்சி வேட்கை பிறந்தாலும் ஆற்றியிருத்தலை தலைவி மேற்கொண்டாள் என்பது தெரிகின்றது.



கவிஞர் வி. கந்தவனம்

# வாழ்வில்...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

3. உள்ளூர் பொலிஸ் நிலையத்தில் ஏதாவது புதிய குற்றசாட்டு பதிவுகள் இருக்கின்றதா? அல்லது இல்லையா? என்ற விபரங்கள் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
4. ஆள் அடையாளத்தினை உறுதி செய்யும் அடையாள அட்டைகளின் பிரதிகள் எடுத்தல் வேண்டும்.
5. இவற்றுடன் சேர்ந்து ஏற்கனவே செய்து பதிவுகளில் உள்ள குற்றங்களை மன்னித்து அந்த பதிவுகளை அகற்றுமாறு கோரும் விண்ணப்ப படிவங்களை (Pardon Application) நிரப்பி சகலதையும் சேர்த்து மேற்குறிப்பிட்ட கனடாவின் தலைநகரில் மத்திய அரசின் ஒரு நிறுவனமாக இயங்கும் விலாசத்திற்கு அதற்குரிய கட்டணங்களுடன் அனுப்புதல் வேண்டும்.

மன்னிப்புக்கு தகுதி என்றால் சகல குற்றப்பதிவுகளும் (பொலிஸ் நிலைய பதிவு உட்பட) அகற்றப்பட்டது என குறிப்பிட்டு 18 மாதங்களுக்கு இடையில் உறுதிப்படுத்தி கடிதத்தில் பதில் வரும். அதாவது குற்றப்பத்திரங்கள் யாவும் அகற்றப்பட்டு விட்டது என்பது உறுதிப்படுத்தப்பட்ட தபாலில் வந்து சேரும். இவற்றினை வெற்றிகரமாக முடித்தவர் தொடர்ந்து ஒழுங்கான மனிதனாக வாழ்ந்தால் சரி!

இந்த பதிவுகளை அழிக்காவிட்டால் மனிதனாக வாழ காலம் கடந்து ஞானம் வந்து விரும்பினாலும் குற்றபதிவுகள் வாழ்வில் நின்று நின்று உதைத்து விழுத்தும். அந்த நிலையில் விரக்தியே தோன்றும்.

# மஞ்சள்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

கேள்விக் குறி. அப்படி ஒரு நிலை வந்தால் திமுக ஆட்சிக்கு வால் பிடிக்காது காங்கிரஸ். காங்கிரஸ் எத்தனை இடங்களில் வெற்றி பெறுகிறது என்பதை விட, எத்தனை இடங்களில் காங்கிரஸை நாம் தோற்கடிக்க முடியும் என்றுதான் திமுக கணக்குப் போட்டு வேலை பார்க்கும். திமுக தொண்டர்கள் பலமில்லாமல் காங்கிரஸ் வெற்றி பெற அந்த கட்சிக்கு களப் பணி செய்ய ஆட்கள் கிடையாது. இதனால், திமுக - காங்கிரஸ் கூட்டணியை



அதிக இடங்களை காங்கிரஸ் பெற்றால் ஆட்சியைப் பிடிக்கிற ஆசை காங்கிரஸிற்கு உண்டு. அதற்கு திமுக நேசக்கரம் நீட்டாவிட்டால், மற்ற கட்சிகளை வளைக்கும் யுக்தி காங்கிரஸிற்கு தெரியும். எனவே, தங்கள் கூட்டணியிலிருக்கும் தோற்கடிக்க அதிமுக இம்முறை அதிகம் கஷ்டப்பட வேண்டியதில்லை. அந்த இரு கட்சிகளுமே அதைப் பார்த்துக் கொள்ளும். மேலே நடக்கும் சதி வேலைகள் தெர-ியாமல் திரியப் போவது இரு கட்சிகளின் அப்பாவித் தொண்டர்கள்தான்.

YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# நினைவாற்றல் - MEMORY - 6

கட்டுரையாசிரியர் இந்த இதழில் மனித மூளையில் உள்ள முன் மடல் (frontal lobe) பற்றிய விபரத்தையும் ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ள மூளைக்கான சில பயிற்சி வழிமுறைகளையும் எடுத்து வருகின்றார். இந்தக் கட்டுரை பற்றிய உங்கள் கருத்துக்களையும் அறிய விரும்புகின்றோம்.

## அன்பான வாசகர்களே!

கடந்த இதழில் குறிப்பிட்டிருந்ததைப் போல, நாம் மனித மூளையில் உள்ள முன் மடல் (frontal lobe) பற்றிச் சற்று விரிவாகக் கவனிப்போம். இந்த உறுப்புத்தான் மனிதர்களிடம் ஏனைய விலங்கினங்களின் மூளையை விட அதிகம் விருத்தியடைந்துள்ளது என்று அறியும்போது முன் மடல் பற்றி அதிகம் அறிய வேண்டும் என்ற ஆவல் உங்கள் மனதில் எழுந்திருக்கும் என்பது எனது எதிர்பார்ப்பு. உங்களின் அந்த ஆவலை நிறைவு செய்ய முயற்சிக்கின்றேன். இந்தக் கட்டுரையில் வரும் மூளை பற்றிய தகவல்கள் எம்மிடம் பொது அறிவை ஏற்படுத்தும் நோக்கில் எழுதப்படுவதனால் மேலெழுந்த வாரியான தகவலாக இருக்கலாம். எனவே 'உங்கள் உடல் நலம் சார்ந்த வினாக்களுக்குப் பொருத்தமான மருத்துவ ஆலோசனையே சரியான அணுகுமுறை' என்ற எச்சரிக்கையையும் மீண்டும் உங்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு எனது கட்டுரையைத் தொடங்குகின்றேன். இந்த நேரத்தில் திருவள்ளுவர் தந்த திருக்குறள் 'பயனிலை சொல்லாமை' என்ற இருபதாவது அதிகாரத்தில் வரும் இருநூறாவது குறள் 'சொல்லுக சொல்லின் பயனுடைய: சொல்லற்க சொல்லின் பயனிலாச் சொல்' என்ற குறள் என் மனதில் தோன்ற அந்தக் குறளுக்கான உரையை ஒருமுறை பார்த்துக் கொள்கின்றேன். 'பயனளிக்காத சொற்களை விடுத்து மனத்தில் பதிந்து பயன் அளிக்கக்கூடிய சொற்களையே கூறவேண்டும்' என்ற அந்தக் குறளுக்கான உரை என் மனதில் கொந்தளிக்கும் கடல் அலைபோல் எழுகின்ற சிந்தனைகளைக் கட்டுப்படுத்தி தேவையானவற்றை மட்டும் எழுத வைக்கின்றது. எப்போதும் எங்களை வாழ்வாங்கு வாழவைப்பது வள்ளுவர் தந்த குறள் அல்லவா.

மனிதப் பரிணாம வளர்ச்சியில் இறுதியாக விருத்தியடைந்த முன் மடல் (frontal lobe) இன்னும் விருத்தியடைந்து செல்கின்றது எனக் கூறப்படுகின்றது. முன் மடலின் (frontal lobe) முன் பகுதியில் உள்ள பிறிபுறன்ரல் கோட்டக்ஸ் (prefrontal cortex or PFC) என்ற உறுப்பினால் எமது உணர்ச்சிகளும், பழக்க வழக்கங்களும் கையாளப்படுகின்றன. இந்த பிறிபுறன்ரல் கோட்டக்ஸ் பாதிப்பிற்குள்ளாகும் போது மனிதரை சமூக முரணான அல்லது உணர்ச்சி வசப்படும் பழக்க வழக்கங்களையும் செய்யத் தூண்டுவதோடு எந்தப் பயனுள்ள பழக்க வழக்கமும் இல்லாதவர்களாக மாற்றி விடுகின்றது. இந்த பிறிபுறன்ரல் கோட்டக்ஸ் (PFC) கொண்டுள்ள ஒரு முக்கிய பகுதி டொசோலற்றரல் பிறிபுறன்ரல் கோட்டக்ஸ் (Dorsolateral Prefrontal Cortex DLPFC) ஆகும். இது மனிதனின் அதி உச்ச சிந்தனைகள், விடயங்களில் கவனம் செலுத்துதல் போன்ற செயற்பாடுகளைக் கொண்டிருப்பதோடு, குறுகிய கால நினைவாற்றலிலும் (short term memory) ஈடுபாடு கொள்ளும். குறுகிய கால நினைவாற்றல் (short term) அல்லது வேலைக்கான நினைவாற்றல் (Working memory) என்பது ஒரு குறிக்கப்பட்ட வேலையைச் செய்து முடிப்பதற்காக விடயங்களை 20 தொடக்கம் 30 செக்கன்களுக்கு நினைவில் வைத்திருத்தல் ஆகும். உதாரணமாக நீங்கள் ஒரு தொலைபேசி அழைப்பை மேற்கொள்வதற்காக ஒருவரின் தொலைபேசி எண்ணை நினைவில் கொள்வதை எடுத்துக் கொள்ளலாம். இந்த டொசோலற்றரல் பிறிபுறன்ரல் கோட்டக்ஸ் (DLPFC) என்ற பகுதி மனிதரில் அதிகம் பிந்தி விருத்தியடைந்து வயது கூடிச் செல்லும்போது செயலிழந்து விடும் தன்மை உடையது. இந்தப் பகுதி செயலிழப்பதனால் தான் ஒரு வேலையைச் செய்ய ஆரம்பித்தபின்பு எதைச்செய்ய வந்தோம் என மறக்கும் நிலை உருவாவதற்கு காரணம் எனக் கருதப்படுகின்றது. இது சிக்கலான பிரச்சினைகளைத் தீர்க்கும் விடயத்தில் ஈடுபடுவதோடு மூளையில் உள்ள கிப்போகம்பஸ் (hippocampus) என்ற உறுப்புடனும் இறுக்கமான தொடர்பைக் கொண்டிருக்கும் இந்தத் தொடர்பும் நினைவாற்றலுக்கு முக்கியமாகின்றது.

பிறிபுறன்ரல் கோட்டக்ஸ் (PFC) இலுள்ள இன்னுமொரு குறிப்பிடப்பட வேண்டிய பகுதி ஓபிற்றல் புறன்ரல் கோட்டக்ஸ் (Orbital frontal Cortex OFC) ஆகும். இந்தப்பகுதி மூளையில் உள்ள உணர்ச்சிகளைக் கையாளும் பல உறுப்புக்களுடனும் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கும். இந்தப் பகுதி மனிதரில் முன்னதாக விருத்தியடைந்து வயது கூடுவதானால் பாதிப்படையாது இருக்கும். இந்தப் பகுதி நாம் சமூக விடயங்களில் ஈடுபடுவதற்கும் உதவியாக உள்ளது. நாம் பழகுபவர்களின் முகங்களை நினைவாற்றல் செய்வதிலும் இந்தப் பகுதி முக்கிய பங்கை வகிக்கின்றது.

பிறிபுறன்ரல் கோட்டக்ஸ் (PFC) இன் வலது புறத்திற்கும் இடது புறத்திற்கும் வேறுபாடு உண்டென்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வலது புறம் திட்டமிடலிலும், இடது புறம் விடயங்களை உன்னிப்பாகக் கவனிப்பதிலும் ஈடுபாடு கொண்டிருப்பவையாக உள்ளன. வயது கூடிச்செல்வதனால் அல்லது ஏதோ ஒரு விபத்தினால் மூளை பாதிப்புறும்போது ஏற்படும் நினைவாற்றல் பாதிப்புக்களைச் சீர் செய்வதற்காகவும், நினைவாற்றல் வலுவைக் கூட்டுவதற்காகவும் சில பயிற்சி வழிமுறைகள் பற்றி ஜப்பானில் உள்ள ரொகோக்குப் பல்கலைக்கழகத்தைச் (Tohoku University) சேர்ந்த பேராசிரியர் ரியூட்டா கவாசிமா 2005 ஆம் ஆண்டில் வெளியிட்ட சில கருத்துக்கள் பற்றி ஆராய்வோம். உடலின் எந்த உறுப்பிற்கும் பயிற்சி தேவைப்படுவது போல் மூளைக்கும் பயிற்சி தேவை என்பது அவரின் கருத்தாக இருந்தது. அப்படியாக பயிற்சி செய்பவர்களிடம் அதிக முன்னேற்றத்தைத் தன்னால் ஆய்வுகளில் காணமுடிந்ததாகக் கூறுகின்றார். மூளைப்பயிற்சியின் ஆரம்ப விடயமாக எமது பிறிபுறன்ரல் கோட்டக்ஸ் (PFC) இனை ஆரம்ப மதிப்பீடு செய்ய வேண்டும். அதனை எவ்வாறு செய்யலாம் என்பது பற்றி ஆராய்வோம். முதலில் இலக்கம் ஒன்றிலிருந்து நூற்றிருபது வரை சத்தமாகவும், இயன்றளவு விரைவாகவும் எண்ணுவதற்கு எவ்வளவு செக்கன்கள் எடுக்கின்றது என்பதைக் குறித்துக் கொள்ள வேண்டும். அடுத்ததாக இரண்டு நிமிடத்திற்குள் இயன்றளவு விரைவாக நினைவில் உள்ள சொற்களை ஒரு தாளில் எழுதி எவ்வளவு சொற்களை இரண்டு நிமிடத்தில் எழுத முடிகின்றது என்பதைக் குறித்துக் கொள்ள வேண்டும். அடுத்ததாகச் செய்ய வேண்டியது ஸ்ரூப் ரெஸ்ற் (stroop test) இற்காக நாம் ஒரு பயிற்சி அட்டவணையைத் தயார் செய்ய வேண்டும். இந்த அட்டவணையைத் தயாரிப்பதற்கு Red,Green,Blue,Yellow என ஏதாவது 4 நிறப்பேனாக்களும் (colour markers), ஒரு தாளும் தேவை. பல வரிசைகளில் (பத்து வரிசைகள் அளவில்) இந்த நிறங்களுக்கான சொற்களை உரிய நிறம் தவிர்ந்த பேனாவைக் கொண்டு எழுதி அட்டவணையைத் தயாரித்துக் கொள்ளலாம். உதாரணமாக Green என்ற சொல்லை எழுதுவதற்கு Green தவிர்ந்த நிறப் பேனாவை பாவிக்க வேண்டும். இவ்வாறு உருவாக்கிய அட்டவணையில் உள்ள நிறங்களுக்கான சொற்களை சத்தமாக வாசிக்க எடுக்கும் நேரத்தைக் குறித்துக் கொள்ள வேண்டும். அதாவது பொருத்தமற்ற நிறத்தால் எழுதப்பட்ட நிறத்திற்குரிய சொல்லை வாசிப்பதன் மூலம் சிறு தடுமாற்றத்தைக்கொடுத்து மூளைக்குப் பயிற்சியைக் கொடுக்கின்றோம்.

மேற்குறிப்பிட்ட ஆரம்ப மதிப்பீட்டிற்காகச் செய்யப்பட்ட மூன்று விதமான பயிற்சிகளை வாரத்திற்கு ஒருமுறையாக தொடர்ந்து செய்து வரும்போது நல்ல முன்னேற்றம் இருக்கும் என பேராசிரியர் ரியூட்டா கவாசிமா கூறியுள்ளார். மேலும் நாளாந்தம் இலகுவான சில கணிதப்பயிற்சிகளை (கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் போன்றவை) நாளாந்தம் செய்து வரவேண்டும் என்றும் கருத்து தெரிவித்துள்ளார். இலகுவான கணக்குகள் அதிகம் மூளையைச் சுறுசுறுப்பாக்குகின்றது. கணக்குகளை விரைவாகச் செய்யும்போது மூளையின் பல உறுப்புக்களும் சுறுசுறுப்படைகின்றன. சத்தமாக வாசித்தல், இலகுவான கணக்குகளை திரும்பத் திரும்ப செய்தல், எழுதுதல் போன்ற செயற்பாடுகள் பிறிபுறன்ரல் கோட்டக்ஸ் (PFC) க்குகந்த பயிற்சிகளாக உள்ளது என்பது ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. சிக்கலான கணக்குகளைச் செய்வது இடது அரைக்கோளம் மட்டும் ஈடுபடுவதால் அதிக பலனைத் தரவில்லை என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தொலைக்காட்சியினைப் பார்க்கும்போது பிடரி மடல் (occipital lobe), பக்க மடல் (temporal lobe) மட்டும் ஈடுபாடு கொள்கின்றன. அமைதியாக வாசிக்கும்போதும் இரண்டு அரைக் கோளத்திலும் உள்ள பல பாகங்கள் ஈடுபாடு கொண்டாலும், சத்தமாக வாசித்தல் மூளைக்கு அதிக பயிற்சியைக் கொடுக்கின்றது என்பதும் ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது. மேலும் சத்தமாகவும், விரைவாகவும் வாசித்தல் விரும்பத்தக்கது. உலகத்தில் இரண்டு கோடிக்கு மேலான மக்கள் இவ்வாறான பயிற்சிகளைச் செய்து பலனடைந்து வருகிறார்கள் என்பது உறுதிப்படுத்த முடியாத ஒரு தகவல் ஆகும்.

இத்தகைய பயிற்சிகள் மூளையைத் தூண்டுதல் (stimulate) செய்கின்றன. வயது முதிர்ச்சி அல்லது ஏதாவது பாதிப்பு காரணமாக நினைவாற்றலில் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து விடுபடவும் இந்தப் பயிற்சிகள் உதவும். நினைவாற்றலில் எமக்கு எந்தக் குறைபாடு இல்லாவிடினும் இந்தப் பயிற்சிகளினால் எமது நினைவாற்றல் வலுவூட்டப்படும் என்பதை எம்மால் ஊகிக்க முடிகின்றது.

மனித மூளையில் உள்ள முன் மடல் (frontal lobe) பற்றிய பல விபரங்களைப்பற்றி நாம் ஆராய்ந்திருக்கின்றோம். மனித மூளையின் மேம்பாட்டிற்கு காரணமான இந்த உறுப்பு எவ்வளவு முக்கியமான தொழிற்பாடுகளைக் கொண்டிருக்கின்றது என்பது மிகவும் ஆச்சரியத்திற்குரியதே. இங்கே குறிப்பிட்ட மூளைக்குரிய பயிற்சிகள் ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ள நல்ல வழிமுறைகளாக உள்ளன. இவை எமது நினைவாற்றலை அதிகரிக்கச் செய்யும் மிகவும் இலகுவான வழிமுறைகள். இவற்றை நாளாந்தம் செய்து பலன் பெறுவீர்கள் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

இந்தக் கட்டுரையில் இதுவரை குறிப்பிட்டிருந்த மடல்கள், அரைக் கோளங்கள், ஏனைய பாகங்கள் எல்லாவற்றிலும் உள்ள எண்ணற்ற நரப்பணுக்களும் (நியூரன்ஸ் Neurons) நினைவாற்றலில் முக்கிய பங்கை ஆற்றுகின்றன. இவைபற்றி மேலும் அறிந்து கொள்வது இந்தக் கட்டுரையின் இலக்கை அடைவதற்கு மிகவும் அவசியமாகின்றது. அதற்காகக் காத்திருங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன். தொடரும்...



- அகணி -

authorakani@yahoo.com

# வாழத்துடிக்கும்...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

கொடுக்கவும் அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை முன்னெடுக்க முன்வர வேண்டும்' என்றும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டார்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டு எட்டு மாதங்கள் ஆகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளி வாய்க்கால் பிரதேசம் வன்னியின் பல பகுதிகளில் இருந்தும் இடம்பெயர்ந்து வந்த மூன்று லட்சம் மக்களையும் மனிக்பாம் முகாமில் அரசாங்கம் தங்க வைத்திருந்தது.

இறுதி யுத்தம் கடந்த வருடம் மே மாதம் முடிவடைந்த கையோடு இலங்கைக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனானிடம் ஆறு, ஏழு மாதங்களுக்கிடையில் இடம் பெயர்ந்துள்ள அனைத்து மக்களும் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டு விடுவார் கள் என அரசாங்கம் உறுதியளித்திருந்தது.

ஆயினும் அந்த உறுதிமொழியை நிறைவேற்றும் வகையில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. வருட இறுதிக்குள், அதாவது கடந்த வருடம் டிசம்பர் மாதத்துடன் மீள்குடியேற்றச் செயற்பாடுகள் முடிந்துவிடும் என பரவலாக எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கடந்த செப்ரெம்பர் மாதமளவிலேயே மீள் குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தாமதமாக ஆரம்பிக்கப்பட்டதற்கும், அரசாங்கத்தினால் உறுதியளித்தபடி குறிப்பிட்ட காலத்தினுள் அது முடிவடையாததற்கும், கண்ணிவெடி அகற்றும் பணியில் ஏற்பட்டுள்ள தாமதமே காரணம் என அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மோதல்கள் இடம்பெற்ற பிரதேசங்கள், யுத்தத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் நிலைகொண்டிருந்த பிரதேசங்கள் என பல பிரதேசங்களிலும் கண்ணிவெடிகள் இருக்கின்றனவா என்பதை அங்குலம் அங்குலமாக முதலில் பரிசீலனை செய்ய வேண்டும். இந்தப் பரிசீலனையின் பின்னர் அடையாளம் காணப்பட்ட இடங்களை அடையாளமிட்டு, பிரித்து ஒதுக்க வேண்டும். அதன் பின்னர் அங்குலம் அங்குலமாக கண்ணிவெடிகளையும் மிதிவெடிகளையும் தேடி எடுத்து அழிக்க வேண்டும்.

கண்ணிவெடிகள், மிதிவெடிகளைத் தவிர, அடையாளம் காணப்படாத வெடிப்பொருட்கள், கைவிடப்பட்ட, அல்லது போரில் ஈடுபட்டவர்களினால் தெரிந்தோ, தெரியாமலோ விட்டுச் செல்லப்பட்ட வெடிப்பொருட்கள், தாக்குதல்களின் போது வெடிக்காமல் நிலத்திலும் கட்டிடங்களிலும் காட்டுப் பகுதிகளிலும், காவலரண்களிலும் சிதறிக்கிடக்கும் வெடிப்பொருட்கள் என பலதரப்பட்ட வெடிப் பொருட்களையும் கண்ணி வெடி அகற்றுபவர்கள் தேடிக் கண்டுபிடித்து அகற்ற வேண்டியுள்ளது. இந்த வகையில் கண்ணிவெடி அகற்றும் பணி மிகவும் முக்கியமானது. அது கால தாமதம் மிக்கது. ஆபத்துக்கள் நிறைந்ததும்கூட.

இராணுவத்தின் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவுடன், டிடிஜி, மெக், எவ்.எஸ்.டி, சர்வாத்ரா, ஹொரிஸோன், ஹலோ ட்ரஸ்ட் உட்பட ஆறு சர்வதேச கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றார்கள்.



எந்தெந்தப் பிரதேசங்களில் இந்த நிறுவனங்கள் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுவது என சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் தீர்மானிக்கப்பட்டு இடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்கள் யுஎன்டிபி அதிகாரிகளினால் பார்வையிட்டு அந்தப் பிரதேசத்தில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன, அது பாதுகாப்பான பிரதேசம் என எழுத்து மூலம் உறுதிப்படுத்திய பின்பே மீள் குடியேற்றத்திற்காக அந்தப் பகுதிக்குள் பொதுமக்கள் செல்ல அனுமதிக்கப்படுகின்றார்கள்.

மீளக்குடியமரச் செல்கின்ற இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு, மீள்குடியேற்றம் செய்யப்படுவதற்கு முன்னர் கண்ணிவெடி பற்றிய அபாய விழிப்புணர்வும் அதிகாரிகளினால் ஊட்டப்படுகின்றது. இந்தப் பணியில் உள்ளூர் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்களும் ஈடுபட்டிருக்கின்றன.

கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்களில் பொதுமக்களுக்கு கண்ணிவெடியினால் ஆபத்துக்கள் ஏற்பட்டதாகப் பெரிய அளவில் தகவல்கள் வெளியாகவில்லை. யாழ். குடாநாட்டில் தனங்கிளப்பு பகுதியில் இரண்டுபேர் உயிரிழந்தார்கள். வீதியோரங்களைத் துப்பரவு செய்து குப்பைகளைக் கூட்டி எரித்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. வெடிக்காத ஷெல் ஒன்று மரம் ஒன்றில் தைத்திருந்ததாகவும், அதையும் சேர்த்து எரித்தபோதே அது வெடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. சம்பவம் நடைபெற்ற பகுதி கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பகுதி என கூறப்பட்ட போதிலும், அது கண்ணிவெடி அகற்றப்படாத பகுதி என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்திருந்தார்.

இதைவிட கண்ணிவெடிகளினால் பொதுமக்கள் பாதிக்கப்பட்ட சம்பவங்கள் குறித்து செய்திகளோ அல்லது தகவல்களோ வெளியானதாகத் தெரியவில்லை. ஆயினும் எவ்.எஸ்.டி கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில் பணியாற்றிய பிரான்ஸ் நாட்டுப் பிரஜையாகிய டொமினிக் மொரீன் என்பவர் கடந்த மே மாதம் வவுனியா இரணை இலுப்பைக்குளம் பகுதியில் கண்ணிவெடி அகற்றம் பணியில் ஈடுபட்டிருந்தபோது வெடிப்பொருள் ஒன்று வெடித்ததில் மரணமானார். இந்தச் சம்பவத்தில் வேறு இருவரும் காயமடைந்தார்கள். இதைவிட கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள இராணுவச் சிப்பாய்கள் சிலர் அவ்வப்போது கண்ணிவெடிகள் மற்றும் வெடிப்பொருட்கள் வெடித்து காயமடைந்ததாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஐக்கிய நாடுகள் சபையின் யூஎன்டிபி நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அமெரிக்கா, ஜப்பான், இந்தியா போன்ற வெளிநாடுகளும், யுஎன்எச்சிஆர் நிறுவனமும் இந்தப் பணிக்கு நிதியுதவி வழங்கியுள்ளன. நடைபெற்று வருகின்ற கண்ணிவெடி அகற்றும் பணிகள் சீரான முறையில் சிறப்பான ஓர் ஒழுங்கமைப்பின் கீழ் நடைபெறுவதாகத் தெரியவில்லை.

கண்ணிவெடி அகற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்ற பல பகுதிகளில் கண்ணிவெடி அகற்றப்படாத இடங்களும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு அகற்றப்படாத பிரதேசங்கள் மஞ்சள் பட்டியினால் அடையாளம் இடப்பட்டிருக்கின்றன. மக்கள் மீளக்குடியமரச் சென்ற பின்பும், இதுபோன்ற இடங்களில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் அதிகாரிகளும் அதிக நாட்டம் செலுத்தாத ஒரு போக்கையே அவதானிக்க முடிகின்றது.

இந்தக் குறைபாடு பற்றி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பொதுமக்கள் முறையிட்டிருக்கின்றார்கள். அத்துடன் இறுதி யுத்தத்தின் பின்னரான நிலைமைகள், அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகள் போன்றவைகள் தொடர்பாகவும் அவர்கள் நாடாளுமன்ற குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். அத்துடன் அவர்கள் நின்றுவிடவில்லை. யுத்தத்தின் பின்னர் அழிக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் நினைவுச் சின்னங்கள், வரலாற்றுச் சின்னங்கள், பொதுமக்கள் கைவிட்டு வந்துள்ள அவர்களின் உடைமைகள் கொள்ளையிடப்படுவது உட்பட பல்வேறு பிரச்சினைகளையும் அவர்கள் நாடாளு மன்றக் குழுவினரிடம் தெரிவித்திருக்கின்றார்கள்.

அத்துடன் அவர்கள் நின்றுவிடவில்லை. விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிந்த பின்னர் அடுத்தகட்ட பொதுவான அரசியல் நிலைப்பாடு என்ன? இலங்கை அரசாங்கம் என்ன செய்யப்போகின்றது? மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள மக்களின் பிரச்சினைகளை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எவ்வாறு அணுகப் போகின்றது? அவற்றுக்கு எத்தகைய தீர்வினை தமிழ்த் தேசிய கூட்டமைப்பினால் காணமுடியும்? யுத்தம் முடிந்துவிட்டது. விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள். இந்த நிலையில் இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வு

இது போன்ற பல்வேறு கேள்விகளையும் அவர்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற குழுவினரிடம் எழுப்பியிருக்கின்றார்கள். இந்தக் கேள்விகளுக்கு அந்தந்த இடங்களில் நாடாளுமன்றக் குழுவினர் பதிலளித்துள்ள போதிலும், விடையளிக்கப்படாத பல விடயங்களும், வினாக்களும் இருக்கத்தான் செய்கின்றன. இவற்றுக்கு எத்தகைய பதில்கள், எப்போது கிடைக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். வன்னிப்பிரதேசத்து மக்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று அவர்களது கிராமங்களுக்கும் சென்று சந்தித்து குறைகள், நிறைகளைக் கேட்டறிந்திருப்பது இதுவே முதற் தடவை.

இந்த விஜயத்தின் மூலம் மீள்குடியேற்றத்தின் அடிமட்ட நிலைமைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாகப் பார்த்தும் கேட்டும் அறிந்திருக்கின்றார்கள். இது அவர்களுக்கு ஒரு புதிய அனுபவம் என்றே சொல்ல வேண்டும். தொடர்ச்சியான ஒரு யுத்தச் சூழலில் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு குழுவாகப் பொதுமக்களைத் தேடிச்சென்று சந்திக்கக் கூடிய சந்தர்ப்பம் வாய்ப்பும் பல வருடங்களாகவே இல்லாமல் இருந்தது என்பதையும் மறுக்க முடியாது. அடிமட்டத்தில் உண்மையில் என்ன நடக்கின்றது என்பதை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, உலகமும் அறிந்து கொள்வதற்கு இதன் மூலம் ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது என்பதையும் குறிப்பிடத்தான் வேண்டும்.

முற்றும்

# உடல் உள்ளம் - ஆரோக்கியம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

மனித வாழ்க்கை என்பது பிரபஞ்சத்தின் செயல்பாடுகளைப் பொறுத்தே அமைகிறது. அதாவது கோள்களின் ஆதிக்கம் எவ்வாறு அமைகின்றதோ அதுவே மனிதனது வாழ்க்கையிலும் அமையும் கோள்களின் அமைப்பின்படி மனித உடலின் இயல்புகளும் மாற்றமடைகின்றன. இதனால்தான் உடலின் ஆரோக்கியத்திலும் மாற்றம் ஏற்படுகின்றது. முன்னோர்கள் அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு என்றார்கள். எனவே இத்தகைய சிறப்பு வாய்ந்த மனித உடலை பேணிப் பாதுகாப்பது நமது தலையாய கடமையாகும்.



சுகாசனம்



சப்த வஜ்ராசனம்

மனதையும் உடலையும் ஒருநிலைப்படுத்தி னால் தான் பிரபஞ்சத்தின் முழுசக்தியையும் பெறமுடியும் என்கிறார்கள் சித்தர்கள். இதற்குரிய வழிமுறைகளையும் அவர்களே கூறியுள்ளனர். மனித உடலையும் மனதையும் இயக்குவது பிராண சக்தியே. இதனை மூச்சுப் பயிற்சி என்னும் பிராணாயாம முறைகளால் சீர்படுத்துவதன் மூலம் மனமும் உடலும் ஒருங்கிணைந்து செயல்படும். இதனால் ஆதார சக்கரங்கள் தூண்டப்பட்டு மூலாதார சக்தியானது மேலெழும்பி அனைத்து சக்திகளையும் பெறச்செய்கிறது.

முற்காலத்தில் பலரும் இத்தகைய சக்தியினை அடைந்து அரும்பெரும் சாதனைகளைப் புரிந்துள்ளனர். ஆனால் இன்று அவசர வாழ்க்கை, பொருளாதாரப் போராட்டம், மனக்குழப்பங்கள் ஏற்பட்டு நாளடைவில் மனித உறுப்புக்கள் பாதிப்படைகின்றது. உதரணமாக மன அழுத்தம், மன எரிச்சல் போன்ற காரணங்களால் உண்ட உணவு ஜீரணமாவதில்லை. இதனால் மலச்சிக்கல், வாயுக்கோளாறு, குடல்புண் (அல்சர்) என்பன உண்டாகின்றன. பின் இவைகள் படிப்படியாக ஈரல், சுவாசப்பைகள், இதயம், சிறுநீரகம், நரம்புகள் போன்ற அனைத்து உறுப்புக்ளையும் பாதிப்படைய செய்கின்றன. இதனால் பசியின்மை ஏற்பட்டு உடலுக்கு தேவையான பிராணவாயுவின் அளவு குறைந்து இரத்தம் சீர்கெடுக்கின்றது. இரத்தத்தில் கழிவுப்பொருட்கள் அதிகம் சேர்கின்றது. இதனால் இரத்தக்குழாய்கள் பாதிப்படைந்து இரத்த அழுத்த நோயை (Blood Pressure) ஏற்படுகின்றது. அத்துடன் இன்று உலக மக்களை ஆட்டிப்படைக்கும் நீரிழிவு நோயை உண்டு பண்ணுகின்றது.

இவ்வாறு மனதில் ஏற்படும் பாதிப்பானது உடலை பலவழிகளிலும் பாதிப்படையச் செய்கின்றது. இதனால்தான் இன்று நோய்களின் தாக்கத்தோடு மருத்துவ மனைகளைநோக்கி நாள்தோறும் படை-யெடுத்துச்சென்று மருந்து மாத்திரைகளின் துணையுடன்தான் வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

### உடல் மன ஆரோக்கியத்தை நோக்கி

ஒரு மனிதன் அன்றாட புறச்சூழ்நிலைகளால் தாக்கப்பட்டு அவன் மனம் அழுத்தம் அடைவது இயற்கையே. ஆனால் இதனை அன்றோடு வெளியேற்றி விடுவது சிறந்தது. ஆனால் இதற்காக நேரத்தையோ பணத்தையோ செலவழித்து மருந்து வகைகளையோ வேறு பயிற்சிகளை எடுப்பதால் நிரந்தர தீர்வு எதுவும் கிடைக்காது. மாறாக பக்க விளைவுகளுக்கு ஆளாக நேரிடும்.

ஒரு அமைதியான காற்றோட்டமுள்ள பகுதியில் சுகாசனம், வஜ்ராசனம், பத்மாசனம் ஏதாவது ஒரு நிலையில் அமர்ந்து காற்றை நன்கு உள்வாங்கி வெளிவிடவேண்டும். இவ்வாறு தொடர்ந்து மெதுவாக உள்வாங்கி வெளிவிடும்போது மனமானது அந்த சுவாசத்தின் மீது நிலை நிறுத்தப் பழகவேண்டும். அப்போதுதான் உள்வாங்கும் காற்றிலுள்ள பிராணவாயு இரத்தத்தில் கலந்து உடலின் அனைத்துப் பகுதிகளுக்கும் பரவும்.

மூலாதார சக்தியையும் தூண்டும். இது உடனே நிகழ்ந்துவிடாது, படிப்படியாகவே நிகழும். இதனைத் தொடர்ந்து செய்து வந்தால் மனமும் உடலும் ஒருங்கிணைந்து அபார சக்தியை உருவாக்கும். அடுத்தபடியாக நாள்தோறும் ஒரு சில நிமிடங்களாவது ஒரு சில யோகாசனம் பயிற்சிகளையாவது செய்துவந்தால் உடலிலுள்ள 72 ஆயிரம் நாடி நரம்புகள், எலும்புகள், தசைகள் போன்றவை இயக்கப்பட்டு உடல் புதுப்பொலிவு பெறுகிறது. சுத்த இரத்தமானது அனைத்துப் பகுதிகளுக்கும் பாய்ச்சப்பட்டு இராஜ உறுப்புகளான

(1) சிறுநீரகம் - Kidney
(2) கல்லீரல் - Liver
(3) நுரையீரல் - Lungs
(4) இருதயம் - Heart
(5) மூளை - Brain

என்பன நன்கு தொழில்படுவதால் எந்த நோயும் அணுகாது நீடித்த ஆயுளுடன் வாழமுடிகிறது. மனமானது சமநிலை அடைந்து குழப்பங்கள், பரபரப்புக்கள், மாறுபாடான எண்ணங்கள் தோன்றாது அமைதியான ஆரோக்கிய வாழ்வுக்கு வழிகாட்டும்.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

Ontario Vegetarian Food Bank
Employment Training & Skills Resource Centre
Certified Food Handlers
Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.

Food Handler Training available for:
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify
CALL TO REGISTER:
(416) 744 (HELP) 4357
Winter Food and Fund Drive
"No One Should Go Hungry"
Started from Nov.15, 2010 Mar.15, 2011
HELP US TO HELP THE HELPLESS!
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

## நூல் வெளியீடு

### "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற மருத்துவ கைநூல்

**இடம்:** 1537 - 1539 Warden Avenue (Warden & ellesmere) அமைந்துள்ள கனேடிய நாகம்மாள் கோவில் கலாச்சார நிலையத்தில்

**காலம்:** சனிக்கிழமை, மே 07, 2011 ஆம் திகதி

**நேரம்:** மாலை 5.00 மணிக்கு

வாசகர்களின் விருப்பத்துக்கு அமைய வெயிடப்படுகின்றது என்பதனை அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு - 647.718.3909

# குழந்தைகளின் பற்களும் அவற்றைப் பாதுகாக்கும் முறையும்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

**கடந்த இதழ் தொடர்ச்சி**

குழந்தைகளுக்கு ஆறாவது மாதத்தில் பால்பற்கள் பொதுவாக அரும்பத் தொடங்கி விடும். இப்பற்கள் முழுவதும் பெரும்பாலும் 2½ வருடத்தில் வளர்ந்து விடும். இதனால் குழந்தைகள் உணவை மென்று உண்பதற்கு ஏதுவாக இருக்கும். பற்கள் ஒழுங்காக அமைந்தால் சிரிக்கும் போது குழந்தையின் முகம் அழகாக இருக்கும். கதைக்கும் போது சொற்கள் நன்கு புலனாகும்.

பற்களைச் சீராகத் துப்பரவு செய்தால் பற்சொத்தை ஏற்படாது. பாதுகாக்க முடியும். குழந்தை அன்ன ஆகாரங்களை சாப்பிட்ட பின் வாயை நன்கு நீர் கொண்டு கழுவித் தூய்மைப்படுத்த வேண்டும். காலை இரவு படுக்கைக்குச் செல்லும் முன் தவறாது பற்களைச் சுத்திகரிப்பது மிக நன்று. இவ்விடயத்தில் முக்கியமாக குழந்தைகளை பெற்றோர் கவனித்துக் கொள்ள வேண்டும்.

அவர்கள் பல் துலக்கப் பாவிக்கும் தூரிகையை (Brush) ஐ கவனித்துக் கொள்ள வேண்டும். அதன் கூர்முனைகள் மழுங்காதபடி இருக்க வேண்டும். பல்லீறுகளில் தங்கியுள்ள பொருட்களை எடுப்பதற்கு வழியமைக்கும். குழந்தைகளுக்குப் பெரும்பாலும் இனிப்புப் பண்டங்களைக் கொடுத்துப் பழக்கி வருவது நன்றன்று. பக்ரீயா கிருமி வாயில் இருந்து சுரக்கும் உமிழ் நீரை அமிலத் தன்மையாக்கும். இதனால் பற்களில் அரிப்பு ஏற்பட்டு பற்சொத்தை வருவதற்கு வழியமைக்கும். விரும்பி இனிப்புப் பண்டங்களைப் பாவித்தால் வாயை நன்கு கொப்பளித்துக் கொள்வது நன்று.

நாம் ஒன்றைச் சிந்திக்க வேண்டும். அதாவது பால்பற்களில் பழுது ஏற்பட்டால் அவசரப்பட்டு அகற்ற முற்படக் கூடாது. ஏனாகில் மற்ற பற்கள் முளைக்கும்போது ஒழுங்காக அழகாக படிவது கடினம். ஒன்றை ஒன்று விலகி, நீண்டு, சரிந்து வளர்வதற்கு இடமளித்து விடும். எனவே



குழந்தைகளின் பற்களைச் சிதைவு, அழிவு ஏற்படாது பாதுகாப்பது பெற்றோரின் கடமையாகும். பற்களில் பழுது ஏற்படின் உரிய வைத்தியர்களிடம் சென்றால் தகுந்த ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் குழந்தைகளுக்கு தலையில் பேன், ஈர் போன்றவை இந்நாட்டில் இருப்பது குறைவு. அப்படி இருப்பின் தங்கள் வைத்தியர்களை சந்தித்து சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும். 'சுத்தம் சுகம் தரும்'

சில குழந்தைகள் நகம் கடிப்பது இயல்பு. தடுப்பது கடினமாகில் வளரும் நகத்தை அகற்றிவிட வேண்டும். தவறின் அவர்கள் விளையாடும் போது அல்லது வேலை செய்யும் போது நக இடுக்குகளில் அழுக்குப்படிந்து அவை வாய்ப்பகுதிக்குச் செல்லும் போது உள் உமிழ் நீருடன் சென்று குடல் புழு போன்றவை ஏற்பட வாய்ப்புண்டு. அத்துடன் வயிற்றோட்ட வியாதியும் வரலாம். நகத்தை குழந்தை கடித்தால் பக்கத்தில் தோல் பழுதாகி 'நகச்சுற்று' என்ற வியாதியும் வரலாம்.

சில குழந்தைகள், குழந்தையாக இருந்து வளர்ந்து வரும் வேளை சில சமயங்களில் கடும் சிந்தனையில் வாயில் விரலை வைத்து யோசித்தபடி இருப்பார்கள். நகங்களையும் கடித்துக் கொள்வர். இதனை நன்கு நாம் கவனித்து கையால் செய்யக்கூடிய வேலைகளைக் கொடுத்து தவிர்ப்பது நன்று. அடுத்து மனத்தாக்கத்தினால் சிந்தனை ஏற்படின் காரணம் கண்டு சிகிச்சை பெற்றுக் கொள்வது நன்றாகும். (தொடரும்)


**வைத்திய கலாநிதி**

**கே.ரி. கோபால்**

D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
**Tel.: 647.718.3909**



**MOHAN**
**HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC**

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

**WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:**

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

**HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING**

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
**HOMEOPATHIC PRACTITIONER**

**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்-இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாட்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு: **647.718.3909**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**
D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)

# திருமூர்த்தி மலை தமிழ்நாடு சுற்றுலா இடங்கள் - 93

பிரமிப்பூட்டும் அருவி, கண்ணுக்கெட்டிய தூரம் வரை நீளும் பசுமையான காடு, மலைத் தொடர்கள் சூழ ஆர்ப்பரிக்காமல் அமைதியாக கண்களுக்கு விருந்தளிக்கும் அணை, ஆச்சரியமூட்டும் வன விலங்குகள் என அழகான சுற்றுலாவுக்கு ஏற்ற இடம் திருமூர்த்தி மலை.



அருவி என்றால் தமிழ்நாட்டில் குற்றாலம்தான். ஆனால், குற்றாலம் அளவுக்கு இல்லையென்றாலும், கிட்டத்தட்ட அந்த அனுபவத்தைத் தரும் இன்னொரு அருவி திருமூர்த்தி மலை. குற்றாலம் தமிழகத்தின் தென்கோடியில் உள்ளது என்றால், திருமூர்த்தி மலை வடமேற்கு எல்லையில் உள்ளது. எனவே, இப்பகுதியினருக்கு இது ஒரு முக்கியமான சுற்றுலா தளம். இதனால், எப்போதும் கூட்டத்துக்கு குறைவு இருக்காது. அருவியில் குளிப்பது ஒரு சுகம் என்றால், அருவியை நோக்கிய பயணமே திருமூர்த்தி மலையில் படு த்ரில்லானது.

## - வழிப்போக்கன் -

இந்த அருவியில் இருந்து வழிந்தோடும் நீர் திருமூர்த்தி அணையில் தேக்கப்படுகிறது. இந்த அணையின் உயரம் 60 அடிகள். இது திருமூர்த்தி மலையை அடுத்து அமைந்துள்ளது. கடல் போல காட்சியளிக்கும் திருமூர்த்தி அணையில் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் படகு சவாரி உள்ளிட்ட பொழுதுபோக்கு அம்சங்கள் ஏராளம் உள்ளது. படகில் பயணம் செய்யும் பயணிகளின் பாதுகாப்பிற்காக 'லைப் ஜாக்கெட்' வழங்கப்படுகிறது. ஆனால், பெரும்பாலும் சுற்றுலாப் பயணிகள் ஆர்வ மிகுதியில், அதை அணியாமலேயே பயணம் மேற்கொள்கின்றனர். இதனால், விபத்துக்கள் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, ஏர் ஜாக்கெட் அணியாமல் பயணிக்க வேண்டாம். காலை மற்றும் மாலை நேரங்களில், வன எல்லையிலிருந்து தண்ணீர் குடிக்க அணைப் பகுதிக்கு வரும் வன உயிரினங்களைப் பார்ப்பது கண்கொள்ளாக் காட்சி. திருமூர்த்தி மலை பஞ்சலிங்க அருவிக்கு செல்லும் வழியில் ஏராளமான குரங்குகள் உள்ளன.

அருவியில் குளித்துவிட்டு திரும்பி வரும் வழியில், மலையடிவாரத்தில் உள்ள திருமூர்த்தி கோவில் புகழ் வாய்ந்தது. அமலிங்கேசுவரர் என்ற பெயரில் சிவன் எழுந்தருளியுள்ள இந்தக் கோயில் 1000 - 2000 வருடங்கள் பழமையானது. சிவன் கோவிலினை ஒட்டி வற்றாத ஓடை ஒன்று ஓடுகிறது. கோயில் மூலவர்: பிரம்மா, விஷ்ணு, சிவன், அம்மன்: தாயார். பிரம்மா, விஷ்ணு, சிவன் மும்மூர்த்திகளும் சுயம்புவாக இங்கு அருள்பாலிக்கின்றனர் என்பதுதான் இதன் சிறப்பு. மூம்மூர்த்தி என்பதுதான் திருமூர்த்தி ஆகியிருக்க வேண்டும். இது ஒரு குடைவரைக் கோயிலாகும். இங்கு சிவனுக்கு மும்மூர்த்தி ஆண்டவர், திருமூர்த்தி ஆண்டவர், அமணலிங் கேஸ்வரர் என்ற திருநாமங்கள் உள்ளன.

மலையின் மீது பஞ்ச லிங்கம் உள்ளது. அத்திரி மகரிஷியும் அவரது மனைவி அனுசுயாவும் தினமும் இந்த பஞ்ச லிங்கத்தை வழிபட்டு வந்துள்ளார்கள். மும்மூர்த்திகளே தமக்கு குழந்தையாக பிறக்க வேண்டும் என்பது அத்திரி மகரிஷியின் விருப்பம். இவரது விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டும், இவரது மனைவி அனுசூயையின் கற்பின் மகிமையை இந்த உலகிற்கு எடுத்துக்காட்ட விரும்பியும் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளும் இங்கு தோன்றினர். ஒரு முறை அத்திரி மகரிஷி வெளியே சென்ற போது மும்மூர்த்திகளும் அனுசூயை தேடி வந்து தங்களுக்கு நிர்வாணமாக பிச்சையிடுமாறு வேண்டினர். அனுசூயையும் தன் கணவனை மனதால் நினைத்து தீர்த்தத்தை அவர்கள் மீது தெளிக்க மூவரும் குழந்தைகளாக மாறினர். பின் அந்த குழந்தைகளுக்கு நிர்வாணமாக பாலூட்டி அவர்கள் வேண்டுதலை நிறைவேற்றினார்' என்கிறது தலபுராணம். இன்னமும் அத்திரி மகரிஷியும் அவரது மனைவி அனுசுயாவும் தினமும் இந்த பஞ்ச லிங்கத்தை வழிபடுவதாக கூறப்படுகிறது.

அத்திரி மகரிஷியின் மனைவி அம்மணமாக வந்து மும்மூர்த்திகளுக்கு உணவு அளித்த தலமாதலால் இத்தல இறைவன் அமண லிங்கேஸ்வரர் ஆனார் என்கிறது தல புராணம். சந்தன வழிபாடு என்பது இங்கு சிறப்பு. இங்குள்ள மும்மூர்த்திகளுக்கு பக்தர்கள் சந்தனத்தை வாங்கி அவர்கள் மீது எறிந்து வழிபாடு செய்கிறார்கள். அப்படி சந்தனம் எறியும் போது மும்மூர்த்திகளின் நெற்றியில் சந்தனம் விழுந்தால் நாம் நினைத்த காரியம் உடனே நடக்குமாம்.

“இங்குள்ள எட்டுக்கால் மண்டபத்தில் தான் மும்மூர்த்திகளும் வந்து தங்கியதாக கூறப்படுகிறது. இங்கு மும்மூர்த்திகளும் குழந்தையாக விளையாடிய போது அருகிலுள்ள கஞ்ச மலையிலிருந்த கல் ஒன்று உருண்டு வந்தது. அப்போது பட்டாரசி, தேவகன்னி, பத்மகன்னி, சிந்து கன்னி, அகஜாகன்னி, வனகன்னி, சுமதிகன்னி என்ற சப்த கன்னியர் ஏழு விரளி மஞ்சளை வைத்து உருண்டு வந்த கல்லை தடுத்து நிறுத்தி விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளை காப்பாற்றினர். அப்படி உருண்டு வந்த கல்லிலேயே மும்மூர்த்திகள் ஐக்கியமாகி விட்டனர். தடுத்து நிறுத்திய விரளி மஞ்சளிலேயே சப்த கன்னியர் ஐக்கியமாகி விட்டனர்” என்கிறார்கள். இதனால் இந்த சப்த கன்னியருக்கு தனி சன்னதி இருக்கிறது.

மகா சிவராத்திரியன்று நான்கு கால பூஜை நடைபெறும். இது தவிர ஆடி அமாவாசை, தை அமாவாசை நாட்களிலும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடுவார்கள். குழந்தை இல்லாதவர்கள் திருமூர்த்தி மலையில் நீராடி, சப்த கன்னிமார்களை வழிபட்டு, பின் மும்மூர்த்திகளை வழிபட்டால் குழந்தை நிச்சயம் என்பது ஐதீகம். குழந்தைப் பேறு இல்லாத பெண்கள், இங்குள்ள விநாயகர் கோயில் முன் உள்ள வரடிகல் என்ற கல்லில் அமர்ந்து அந்தக் கல்லின் மீது தேங்காய், பழம் வைத்து

தொடர்ச்சி 23ஆம் பக்கம்



# HomeLife / GTA Realty Inc.,

**Brokerage***

## இன்
## ஸ்காபரோ அலுவலகம்




தமிழ் மக்களின் ஏகோபித்த நன்மதிப்பை
பெற்ற வடஅமெரிக்காவின் முதலாவது
**South Asian Indoor Mall**
**"GTA SQUARE"**
இற்கு இடம் மாறுகின்றது என்பதனை
பெருமகிழ்ச்சியுடன்
தெரிவிக்கின்றோம்.

HOMELIFE
HIGHER STANDARDS

**5215 Finch Avenue East, #203**
**Scarborough, ON . M1S OC2**
**Tel:416.321.6969**

*Independently Owned & Operated

# சங்க இலக்கியத்தில் காதல் காட்சிகள்

பலா (பலவு) பழம் தமிழரின் வாழ்வோடு இரண்டறக்கலந்த இன்சுவைமிகு கனிகளில் ஒன்று. முத்தமிழ் என்பது போன்று முக்கனிகளும் முக்கியம் பெறுகின்றன.



எந்த ஒரு நிகழ்வுக்கும் மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளும் அந்த நிகழ்வுகளில் இடம்பிடித்துக்கொள்கின்றன. பஞ்சாமிர்தம் எனப்படும் பழக்கலவைகளுள் இந்த மூன்று கனிகளோடு மேலும் இரண்டு கனிகள் சேர்க்கப்படுகின்றன. அவற்றுள் விளாம்பழம், மாதுளம்பழம் என்பன முக்கியமானவை. அவை கிடைக்காத விடத்து வேறு பழங்கள் சேர்க்கப்படுகின்றன. மனித உணவுகளில் காய், கனி இரண்டும் முக்கியமானவை. இக்கனிகளுள் பலாவின் கனி பெரியதும், இளவேனில் காலம் தொடக்கம் கார்காலம் முடியும்வரை பலாப்பழத்தின் வாசனை காற்றில் மிதந்துவரும். வன்னியின் வழம் பற்றிச் சொல்லவந்த பண்டிதமணி அவர்கள் 'மந்தி சிந்து கனிகளுக்கு மான-னினங்கள் ஏங்கும்' என அவர் விபரித்திருப்பது கனியின் இனிமையை உணர்ந்து காட்டு விலங்குகள் கூட அவற்றை உண்டு மகிழ்த்தவங் கிடக்கின்றன என்பது புலனாகின்றது.

**- த. சிவபாலு -**

தலைமகளைக் கண்டமாத்திரத்தே மையல்கொண்டு அவள்பால் தன்னைப் பறிகொடுத்த தலைவன் அவளை மணந்துகொள்ளும் நோக்கத்தோடு வருகின்றான். அவனால் தலைவியின் வீட்டிற்கு நேரடியாகச் செல்லமுடியாது. தனது காதலியின் தோழியிடம் எடுத்துரைக்கின்றான். அவனை நம்பி உண்மையிலேயே திருமணம்செய்யச் சித்தமாகிவிட்டான் என்பதனை ஏற்றுக் கொண்டாள் செவிலித்தாய் என்பதனை நயமாக தலைவிக்கு எடுத்தியம்புகின்றாள் தோழி. தலைவனைப் பற்றி அவனது ஊரில் உயர்ந்து வளர்ந்துள்ள பலாமரங்களில் கனிகள் தூங்கும் அருங்காட்சியையும், அந்த மரங்கள் மலைச்சாரல்களில் அருவிகளின் மருங்கிலே அழகாக வளர்ந்து காட்சிதரும் இயற்கை வனப்பு மிக்க நாட்டை உடையவன். அதுமட்டுமல்ல பலாக்கனி மிகவும் சுவையானது. எனவே அவனும் உனக்கு கிடைக்கமுடியாத அருங்கனியாகக் கிடைத்துள்ளான் என எடுத்துக் கூறும் பாங்கு குறுந்தொகையிலே எடுத்தாளப்பட்டுள்ளது. கிடைக்கமுடியாத அமுதம் என அவள் எடுத்துரைப்பது பலாப்பழமா அல்லது அவனா? என்பதனைப் புலவர் மிகவும் நுட்பமாக கையாண்டுள்ளார் செய்யுளிலே.

அரும்பெற லமிழ்த மார்பத மாகப்
பெரும்பெய ருலகம் பெறீஇயரோ ன்னை
தம்மிற் றமதுண் டன்ன சினைதொறும்
தீம்பழந் தூங்கும் பலவின்
ஓங்குமலை நாடனை வருமென் றோளே.
(வெண்பூதன். குறுந்தொகை 83)

காதல் வேதனையில் நித்தம் வருந்திக்கொண்டு கனவு உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் தலைமகளுக்கு இச்செய்தி வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியதாகவா இருக்கும். இல்லவே இல்லை. இன்பத்தின் நிலை இரட்டிப்பாகி முக்கனியிலே தேனைக் கலந்தமை போலத்தான் அவளுக்கு இனித்திருக்கும். சர்க்கரைப் பந்தலில் தேன் மழை பொழிந்தால் இனிமைபற்றிக் கூறவும் வேண்டுமோ? புலவர் தான் நினைத்தவனை அடைவதில் ஏற்படும் மனத்தின்பம் சொல்லுந்தரம் அன்றோ என்பதனை கிடைத்தற்கரிய அமிழ்தம் புண்ணியம் செய்தவர்களுக்கே இந்தப் பாரிய புகழ்படைத்த உலகத்தில் கிடைக்கும் என்பதனை நயமாகக் காட்டுகின்றார். தோழியின் வாயிலிருந்து வந்த சொற்கள் அவளை காதல் கனவுலகத்திற்கு இட்டுச்செல்கின்றது. சொர்க்கத்தில் இருப்பவர்கள் அனுபவிக்கும் அந்த இன்பத்தை அவள் அக்கணத்தில் அனுபவிக்கின்றாள். தனது காதல் கைகூடும் நாள் அண்மித்துவிட்டது. பெற்றோர் பச்சைக் கொடி காட்டிவிட்டனர். இனியென்ன இல்வாழ்வின் இன்பமயம் தானே. காதல் இன்பம் காமத்திற் கழகு என்பதன் பொருளை உணர்ந்தனளோ என்னவோ தலைவியின் முகத்தில் படரும் இன்ப அலைகள் காதலனோடு கூடி இன்பம் பெறும் நிலையை நினைந்து அவள் வெட்கம் கொள்ளும் காட்சியை அவளின் முகத்தையே பார்த்திருந்த தோழி உணர்கின்றாள். சும்மாவிடுவாளா தோழி மேலும் அவளைச் சீண்டி காதல் இன்பத்தால் அவள் நாணி புல்லரிப்புக் கொள்கின்றாள். முகம் செம்மை



படர்கின்றது. கண்களில் களிவிரக்கம் படர்கின்றது. விரகதாகத்தின் ஏக்கம் அவளைக் கௌவிக்கொள்கின்றது. இவற்றை நன்கு உணர்ந்த தோழி அவளைத் தனிமையில் தலைவனைக் காண ஏற்பாடு செய்கின்றாள். தலைவியை காதலின் உச்சத்திற்கே கொண்டு செல்பவள் இந்தத் தோழிகள்தான் என்பதற்குச் சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. காதலனைப் பெற்றோர் ஏற்றுக்கொண்டார்கள் என்பதற்கே பரம்பரை பரம்பரையாகச் சேர்க்கப்பட்ட பொருட்களில் ஒரு பகுதியைத் தான் பெற்றுக்கொண்டமை போன்ற இன்பம் பலாப்பழம் கிடைப்பது. அந்தப் பழமாக அவளுக்குக்கிடைக்கின்றான் காதலன். அவ்வளவு இனிமை தருவான் அவன் என்பது காதலியின் மனப்பக்குவம். இந்த இனிமைக்கு பலாவின் நறுக்கனிக்கு மேலும் தேனை சேர்த்துவிடுகின்றாள் தோழி.

பலாமரங்கள் தீம்சுவைமிக்க கனிகளைத் தருவன மட்டுமல்ல அவை காதலர்கள் சந்திக்கும் தருவாகவும் நிழல் தருவதாகவும் அமைந்துள்ளன. பலாமரங்கள் பல சுவாரஸ்யமான காதல் கதைகளை தம்மகத்தே வைத்திருக்கின்றன.






# திரை விமர்சனம் - சிங்கம் புலி

ஜீவா முதன்முதலாக இரட்டை வேடத்தில் நடித்திருக்கும் படம்.

ஒருவர் மீனவன், இன்னொருவர் வழக்கறிஞர். இருவரில் மீனவனாக வரும் ஜீவா நல்லவன், ஆனால், கோபக்காரன், நியாயத்துக்காக எகிறுபவன். வழக்கறிஞராக வரும் ஜீவா, கெட்டவர். சந்திக்கும் பெண்களை எல்லாம், தனது வசத்தில் மாற்றி, காதல் லீலைகள் செய்து விட்டு கழண்டுகொள்ளும் ரகம். தன் சுகத்துக்காக சொந்த அண்ணனையே போட்டு தள்ள முடிவெடுப்பவன். நல்லவரான அப்பாவி ஜீவாவுக்கும், பிளேபாய் ஜீவாவுக்கும் இடையிலான போராட்டம்தான் கதை.

- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -

நேர்மையான ஜீவாவோட காதலியை வில்லன் ஜீவா ஏதாவது பண்ணிடுவாரோ? என்று ஒரு எதிர்பார்ப்பை உருவாக்கி, நாம் அதற்காகக் காத்திருக்கும்போது, கதை வேறு திசையில் கொண்டு செல்வது நல்ல திருப்பம்.

வழக்கமாக இரட்டை வேட படங்களில் கதாநாயகர்கள் அண்ணன் - தம்பியாகத்தான் வருவார்கள். சிங்கம் புலி அதற்கு விதிவிலக்கல்ல. இருவருக்கும் இடையே உருவத்திலும் சரி நடை உடை பாவனைகளிலும் சரி வித்தியாசமில்லை. இதனால், திரையில் ஜீவா வரும் போது இது எந்த ஜீவா என ஒரு குழப்பம் ஏற்படுகிறது. யாராவது ஒருவருக்கு கன்னத்தில் ஒரு பெரிய மருவையாவது ஒட்ட வைத்திருக்கலாம். வழக்கமாக தமிழ் சினிமாக்களில் செய்வார்கள். இந்தப்



படத்தில் ஏனோ செய்யவில்லை.

வழக்கறிஞர் ஜீவாவால் பிரச்சினைக்குள்ளான பெண்ணொருத்தி தற்கொலை செய்து கொள்ள, அதற்கு காரணமான தம்பியின் மீது வழக்கு தொடுக்கிறான், அண்ணன் ஜீவா. எல்லா விதமான தகிடுதத்தங்களையும் செய்து வழக்கிலிருந்து வெளிவரும் தம்பி அண்ணனை கூலிப் படையினரை வைத்து போட்டுத் தள்ள முடிவெடுக்க படம் வேகம் எடுக்கிறது.

ஜீவாவுடன், திவ்யா (குத்து ரம்யா), ஹனி ரோஸ், சவுந்தர்யா, சந்தானம், பொன்வண்ணன், குயிலி, லிவிங்ஸ்டன், பாண்டு, மீரா கிருஷ்ணன், மாணிக்கம் விநாயகம் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

முதல் முறையாக இரட்டை வேடங்களில் நடிக்கும் ஜீவாவின் நடிப்பு பரவாயில்லை. ஆனால், இரு வேடங்களுக்கிடையில் காண்பித்திருந்திருக்க வேண்டிய வித்தியாசங்களில் கொஞ்சம் கூடுதல் அக்கறை செலுத்தி இருந்திருக்கலாம். வழக்கறிஞரும் மீனவரும் பல இடங்களில் ஒரே மாதிரி சேரி பாஷையில் பேசுவது, பாத்திரத்தின் தன்மையை ஜீவா உணர வில்லை என்பதையும், அவருக்கு அர்ப்பணிப்பு உணர்வு இன்னும் தேவை என்பதையுமே காட்டுகிறது.

கதாநாயகிகள் குத்து ரம்யா, கல்யாணி. இரண்டாமவருக்கு பெரிதாய் ஏதும் 'நடிக்க' இல்லை. ரம்யா பரவாயில்லை. ஆனால், 'பொல்லாதவன்' ரம்யாவுடன் ஒப்பிடும்போது ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது.

படத்தின் சுவாரசியமான பாத்திரம் என்றால் அது சந்தானம்தான். பாத்திரத்தின் அழகாலும் நடிப்புத் திறனாலும் அலுப்பு ஏற்படும் போதெல்லாம் எழுந்து உட்கார வைக்கிறார், சந்தானம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பழைய கதாநாயகன் வேசத்தில் வந்து கலாய்ப்பது நல்ல நகைச்சுவை. சந்தானம் காமெடிதான் படத்தை

தொடர்ச்சி 23ம் பக்கம்



# திரை விமர்சனம்...

ஓரளவுக்கு காப்பாற்றுகிறது. சந்தானம், 'நிறம் மாறாத பூக்கள்' விஜயன் வேடத்தில் வரும்போது அரங்கமே கைதட்டலால் அதிர்கிறது. சந்தானத்துக்கு இப்பொழுது நல்ல காலம். திரையில் வந்தாலே மக்கள்



சிரிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். வடிவேலு மாற்று வர ரொம்ப நாளாகும் என நினைத்துக் கொண்டிருந்த தமிழ் ரசிகர்களுக்கு சந்தானம் நல்ல மாற்றாகத் தெரிகிறார். சந்தானம் வரும் காட்சிகளில் எல்லாம் ஜீவா முக்கியத்துவம் இல்லாமல் தெரிகிறார்.

மணி ஷர்மா இசை. '∵.பிகரு கிடைச்சுட்டா கூசாம பொய் சொல்லுடா' பாட்டு அசத்தல்.
பாலசுப்ரமணியனின் ஒளிப்பதிவு ஓ.கே. ரகம் தான்.
எழுதி இயக்கியிருப்பவர் சாய்ரமணி.

சிங்கம் புலி - சீறாத்!

# திருமூர்த்தி மலை...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

அந்தக் கல்லை இரு கைகளால் பிடித்து மனம் ஒன்றி வழிபடுவதை ஞாயிற்றுக் கிழமைகளில் பார்க்கலாம். அப்படி செய்யும் போது அந்த தேங்காய் பழத்தை அவர்கள் அறியாமல் தொட்டுவிட்டால் குழந்தைப் பேறு நிச்சயம் என கூறப்படுகிறது. திருமணம் ஆ க ா த வ ர் க ள ்', இளைஞர்களின் சிறந்த படிப்பு, வேலை, மன நிம்மதி வேண்டுபவர்கள் ஆகியோரும் இறைவனுக்கு தேங்காய், பழம் வைத்து வழிபட்டால் சிறந்த பலன் உண்டு என்பது நம்பிக்கை. இது தவிர முகம் மற்றும் உடலில் மரு உள்ளவர்கள் இங்குள்ள தோணி ஆற்றில் நீராடி பின் அதில் உப்பு, மிளகு வாங்கி போட்டால் மரு நீங்கி விடும் என்றும் நம்பப்படுகிறது.



திருமூர்த்தி மலை அருகாமையில் அமராவதி அணையும் முதலைப் பண்ணையும் உள்ளது.

## எப்படிச் செல்வது, எங்கு தங்குவது?

திருமூர்த்தி மலை, கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டையிலிருந்து சுமார் 21 கி.மீ தொலைவில் உள்ளது. உடுமலையிலிருந்து அடிக்கடி பேருந்துகள் இயக்கப்படுகின்றன. கோயில் காலை 6.30 மணியிலிருந்து மாலை 6.30 வரை தொடர்ச்சியாக திறந்திருக்கும். கோயில் முகவரி: அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக்கோயில், தளி - திருமூர்த்தி மலை, உடுமலைப்பேட்டை- 642 112, தொலைபேசி: 91 - 4252 - 265 440. தங்குவதற்கு கோயம்புத்தூர் சிறந்தது.




# BASEMENT RENT

**TAPSCOTT & FINCH**
3 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Single person or family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.829.7974

---

**MARKHAM & 14TH AVE.**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, YRT, mall. Rent $700.
தொடர்புகளுக்கு: 416.305.9549

---

**MARKHAM & ELLESMERE**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. தனித்தனியாகவும் அறைகள் கொடுக்கப்படும். Family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.439.6009

---

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Avail. April 01, 2011.
தொடர்புகளுக்கு: 647.993.6103

---

**STEELES & MIDLAND**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, tamil stores, school. Avail. May 01, 2011.
தொடர்புகளுக்கு: 905.470.2859

---

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Attached washroom. Meals if required. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately.
இளம் ஆண் ஒருவரைப் பராமரிப்பதற்கும் உதவிக்கு ஆள் தேவைப்படுகின்றது.
905.471.4777 / 416.321.6669

---

**MIDDLEFIELD & DENISON**
Available room and 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, internet, cable. Close to YRT, TTC.
416.648.1987 / 905.201.9901

---

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Rent negotiable.
தொடர்புகளுக்கு: 416.286.8840

---

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt for rent. Parking, cable, laundry. Close to TTC, school, store, temple. Avail April 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.291.2796

---

**14TH AVE & 9TH LINE**
Brand new 2 Bedroom bsmt for rent. Garage parking, cable, laundry. Avail. immediately. Close to mall, bank. Small family preferred.
தொடர்புகளுக்கு: 416.625.1438

---

**MORNINGSIDE & SHEPPARD**
New 2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு:
416.520.5883 / 416.669.8711

---

**DENISON & MIDDLEFIELD**
Two Bedroom bsmt apt. for rent. Close to all facilities. Avail. immediately.
905.209.9212 / 416.562.5113

---

**MORNINGSIDE & NIGHTSTAR**
2 Bedroom walkout bsmt for rent. Parking, laundry. Close to TTC. Avail. immediately.
416.299.7208 / 416.871.8627

---

**MARKHAM & ELSON**
One bedroom walk-out bsmt for rent. Sep. entrance, laundry. Close to school, TTC, etc. Avail. Anytime. 647.703.1343 / 905.472.1370 / 647.500.4564

---

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Close to all facilities. Avail. Anytime.
416.522.3314 / 905.554.2496

---

**MCCOWAN & 14TH AVE**
2 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, parking. Close to mall, school, TTC. Avail. April 15, 2011.
தொடர்புகளுக்கு: 647.302.6930

---

**NEILSON & FINCH**
2 Bedroom new bsmt for rent. Sep. entrance. Close to school, TTC, malvern mall. All bills inclusive.
தொடர்புகளுக்கு: 416.562.4937

---

**KENNEDY & LAWRENCE**
New 1 bedroom bsmt for rent. Sep. entrance with car parking with attached kitchen and sep. washroom. Avail. April 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.727.8681

---

**9TH LINE & 14TH AVE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable. Close to YRT, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.554.9353

---

**TAPSCOTT & FINCH**
1 bedroom bsmt for rent. Sep.entrance, kitchen, full washroom, living room, laundry. Close to bus stop, temple, stores. No smoking & No pets. Avail. immediately.
416.768.4271 / 416.768.4246
Weekdays 6:00pm / Weekends Anytime

---

**McCOWAN & ELSON**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, school, mall & tamil stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.471.8615

---

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC. Utilities, bills included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.887.8839

---

**14TH AVE & MCCOWAN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, Parking, cable, laundry. Close to TTC, mall. Avail. April 01, 2011. Couple preferred.
தொடர்புகளுக்கு: 416.727.7550

---

**SHEPPARD & MARKHAM**
2 Bedroom bsmt for rent. Close to all facilities. Small family or ladies preferred.
தொடர்புகளுக்கு: 416. 727.3716

---

**MEADOWVALE & LAWRENCE**
3 Bedroom bsmt apt. for rent. Sep. entrance, 3 parking, laundry. Close to 24hrs. TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.804.3520

---

## WARDEN & MCNICOLL

**2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. immediately.**

**416.494.0850 / 416.315.5648**

---

**BELLAMY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrace, parking, laundry. Close TTC, mall. Avail. immediately.
416. 464.4207 / 416.431.6349

---

**BELLAMY & BRIMORTON DR.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. Small family preferred.
தொடர்புகளுக்கு: 416.473.6155

---

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.286.8450 / 416.459.3006

---

**MORNINGSIDE & STAINS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.298.6416

---

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school. Avail. Anytime. 1 or 2 person or working people preferred. தொடர்புகளுக்கு: 416.841.2232

---

**BRIMLEY & DENISON**
2 Bedroom bsmt for rent. Parking, cable, laundry. Close to TTC, mall, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.604.0870

---

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, internet. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.832.3977

---

**DUFFERIN & RUTHERFORD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, GO station, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.303.3022

---

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.802.6067

---

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.430.0097

---

**VICTORIAPARK & ELLESMERE**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC, stores, mall & more. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.576.2655
416.444.2655/ 416.844.2655

---

**MORNINGSIDE & FINCH**
3 bedroom Bsmt for rent. Close to all facilities. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். முழுநேர அல்லது பகுதிநேர வேலை ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
647.857.8548 / 416.825.9717

---

**MIDDLEFIELD & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry, cable. Close to bus, YRT, mall, tamil stores. Girls or small family preferred. Avail. immediately.
905.910.9926 / 647.885.1429

---

**BRIMLEY & LAWRENCE**
1 Room for rent in a basement. Sep. entrance & parking, laundry. Close to TTC, stores & other facilities. Very quiet place. Avail. Immediately. Bachelor preferred.
தொடர்புகளுக்கு: 416.264.8177

---

**BELLAMY & PANDORO CIR.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. Students or small family preferred.
416.438.2559 / 416.454.3469

---

**SHEPPARD & MORNINGSIDE**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC & shopping, etc . Avail. immediately. Couple or students preferred.
தொடர்புகளுக்கு: 647.882.3804

---

**MCNICOLL & MCCOWAN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Very strictly No smoking, No drink & Clean. Rent $650 & 40% utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.342.3313

---

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.551.8379

---

## சங்கீத வகுப்பு

Ajax, Markham, Scarborough, Downtown ஆகிய இடங்களில் Swaraganam Academy ஆசிரியை வாசுகி சிகாமணி அவர்களால் சங்கீத வகுப்பு நடத்தப்படுகின்றது.
தொடர்புகளுக்கு: 905.427.1792

---

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

மேலும் பக்கங்கள் 25, 26

# ROOM RENT

**KENNEDY & EGLINTON**
1 Bedroom for rent. Close to all facilities. No smoking. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.930.1171

***MARKHAM & ELLESMERE***
10 Tuxedo Court
2 அறைகள் கொண்ட Apt. இல் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. Close to TTC, school, shopping. தமிழ்கடைகள். Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.430.0140

***WARDEN & SHEPPARD***
ஒரு அறை basement மூன்று நேரச் சாப்பாட்டுடன் வாடகைக்கு உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள் விரும்பத்தக்கது அல்லது வயோதிபர் விரும்பத்தக்கது. 24 மணி நேர பாதுகாப்பு. Avail. immediately.
416.299.4895 / 416.201.1222

***KENNEDY & ELLESMERE***
1 Room Apt. for rent. Close to all facilities. Avail. April 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.605.5475

**EGLINTON & DANFORTH**
சந்தியில் தனி நுழைவாயில், பஸ்தரிப்பு, கடைகள் உள்ள அமைதியான இடத்தில் ஒரு படுக்கை அறை சகல வதிகளுடன் வாடகைக்கு உண்டு. வேலை பார்க்கும் ஆண்கள் விரும்பத்தக்கது. பென்சன் ஊதியம், சமூகநலன் உதவி பெறுபவர் ஆலோசிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.431.5156

***MARKHAM & SHEPPARD***
3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall.
416.335.5242 / 416.820.1999

***KENNEDY & LAWRENCE***
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

***LAWRENCE & PHARMACY***
***2*** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

## CONDO. FOR SALE

2 Bedroom condo. for sale in 5225 Finch Ave. East, Scarborough, ON.
Please call for more details
416.299.9710 / 647.896.1419

## மணமகன் தேவை

யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த தற்பொழுது கொழும்பில் தனியார் நிறுவனத்தில் Accounts assistant ஆக பணிபுரியும் 1972 ஆம் ஆண்டு கார்த்திகை நட்சத்திரம், 5'4" உயரமுடைய அழகிய பெண்ணுக்கு நற்பண்புள்ள வரனை எதிர்பார்க்கின்றோம். திருமண சேவை செய்பவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 647.618.9316

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# HOUSE FOR RENT

***HIGHGLEN & MIDDLEFIELD***
3 Bedroom + 1 bedroom bsmt for rent. 2½ Washroom, sep. entrance, parking. Close to YRT, TTC.
416.648.1987 / 416.797.8355

***MCCOWAN & ELLESMERE***
3 Bedroom house for rent. Close to all facilities. Avail. Anytime.
416.522.3314 / 905.554.2496

***MORNINGSIDE & SHEPPARD***
Brand new 3 bedroom Upper Level house for rent. 2½ Washroom, parking. Close to TTC, Scarborough Campus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.708.7202

**MARKHAM & MCLEVIN**
3 + 1 Bedroom house for rent. Parking, laundry. Close to TTC, school, mall. Low rent.
**9TH LINE & 14TH AVE**
2 bedroom bsmt for rent.
தொடர்புகளுக்கு: 905.471.1986

***MORNINGSIDE & SHEPPARED***
2 Bedroom house for rent. Close to TTC, mall, school. Very big balcony. Avail. immediately.
416.847.9802 / 647.302.8597

***KENNEDY & FINCH***
3 விசலாமான அறைகளைக் கொண்ட Bunglow வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. TTC, மற்றும் சகல வசதிகளையும் கொண்டது. Avail. April 01, 2011
தொடர்புகளுக்கு: 647.779.3411

***NEILSON & SHEPPARD***
3 Bedroom + 1 bedroom bsmt walk-out for rent. Close to all facilities. Avail. April01, 2011. Rent $1250 + utilities.
416.284.9438 / 416.931.7279

***BIRCHMOUNT & MCNICOLL***
மேல்தளத்தில் 3 அறைகளும், கீழ்தளத்தில் 3 அறைகளும் வாடகைக்கு உண்டு. Close to all facilities. அத்துடன் 1 தனி அறையும் வாடகைக்கு உண்டு. Avail immediately.
தொடர்புகளுக்கு: 416.293.6211

## CONDO. FOR RENT

***EGLINTON & VICTORIAPARK***
2 Bedroom condo. for rent. Close to bus stop, mall, Eglinton Square, Victoria park subway station. Avail. immediately.
416.724.4953 / 416.451.8992

***SCARBOROUGH CENTER*** பகுதியில்
Brand new 2 Bedroom + den condo. for rent. Parking. Close to Scarborough town center, subway. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.258.8253

***MCLEVIN & TAPSCOTT***
2 Bedroom condo. for rent. Close to all facilities. Avail. April 01, 2011.
416.291.9964 / 416.520.2754

***KENNEDY & ELLESMERE***
Newly renovated 2 bedroom condo. for rent. Bsmt parking & locker included. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.727.8681

***MARKHAM & SHEPPARD***
2 Bedroom Condo. for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.495.9775

# TUITION

***FINCH & MIDDLEFIELD***
***GTA Squre Unit #230***

***Chemistry, Physics, Math, English and Science.***
*Homework Help Grade 8 - 12.*

***Grade 8-10 -*** 1 subject - $60
2 subjects - $100
***Grade 11 & 12*** - 1 Subject - $80
2 subjects - $150

***416.497.7660 / 647.771.6237***

# TUTORING

**BRIMLEY & LAWRENCE**
For SCHOOL, COLLEGE, UNIVERSITY, CGA, APIX, CPIM, CSCP & SAP STUDENTS. ***Grade 5 - 12***. Math, Science, Chemistry, Biology, Business & Accounting subjects by professionally qualified staff.
தொடர்புகளுக்கு: ***416.669.3101***

# TUITION

***MCLEVIN & TAPSCOTT***
Behind Malvern mall.
Math & English (JK - Grade 3).
Homework help. Preparing kids for JK.
3 Classes a week $50 per month.
தொடர்புகளுக்கு: 416.332.1254

## மணமகள் தேவை

5" 2" உட்பட்டு இருத்தல் வேண்டும். University or Collage முடித்து வேலை செய்பவராக இருந்தால் விரும்பத்தக்கது! இந்து வேளாளர் குலம், வயது எல்லை 30 க்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தொடர்புகளுக்கு: ***905-472-4194***

## பராமரிப்பாளர் தேவை

Scarborough பகுதியில் யூன் மாதத்தில் தாயையும் குழந்தையையும் பராமரிக்க அனுபவம் வாய்ந்த ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு: 416.836.3091

## CAREGIVER

Position available for live - in caregiver to reside in a family home in London, Ontario and look after two kids aged 11 & 6. Must be experienced and fluent in Tamil & Sinhala language. Who can encourage the kids to learn and communicate in tamil. Contact: 226.448.3205

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்திக்கு அண்மையில் பலாலி றோட்டில் 3 பரப்பு காணியில் 1500 சதுர அடியில் 5 அறைகள் உள்ள மிகவும் நல்ல நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு. இந்த வீட்டிற்கு பக்கத்தில் 1 பரப்பும் 6 குளிகள் கொண்ட வெறும் காணியும் விற்பனைக்கு உண்டு.
416.289.4996 / 416.827.1959

## SPACE FOR RENT

KKM Auto Maintance Inc. கார் Wash பண்ணுவதற்கு ஓர் இடம் வாடகைக்கு உண்டு.
416.755.8354 / 647.836.9255

**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு**
***www.vlambaram.com***

# JOB JOB JOB

## CASHIER தேவை

***FINCH & MIDDLEFIELD***
GTA Square mall இல் அமைந்துள்ள Restaurant ஒன்றுக்கு இளம்பெண் cashier தேவை.
தொடர்புகளுக்கு: 416.318.9866

***ICE CREAM TRUCK DRIVER WANTED***
G Licence - Ten vacant - $1000 or more per week, Calgary, Alberta. Male or female accommodation will be arranged. + Two A - Z Drivers needed. $18.00 per hour.
Contact: 403.818.2222

***KENNEDY & ELLESMERE***
சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ் சுப்பர் மார்கட் ஒன்றின் மீன் பகுதிக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. மேலதிக தொடர்புகளுக்கு: 647.430.8238

## SPRINGBOARD DIVING

Learn to dive Pearson pool.
Wednesday 7:00pm - 8:00pm.
$175.00 (10 Weeks)
For more Information
Re spring registration
Contact: 416.208.0606

## SAREE BLOUSE



**அனைத்து தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:905.492.0259

## COMPUTER REPAIR

- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்



**Pro-Win Computers**
**919 Ellesmere Road, Unit - 302**
**416-879 7489 / 647-340 5568**
**(Kennedy & Ellesmere)**

## WANTED

Used Toyota Corolla cars wanted. 1990 - 1997 Only. Any condition.
Steeve - 416.832.1359

## CAR FOR SALE

Toyota Camry 1999 for sale. Four door. Model - LE. 280,000km.
Contact: 647.346.0539

## CARS FOR BUY & SELL

2005 Corolla, 2001 Toyota Sienna, 1997 Honda Civic, 1995 Honda Accord கார்கள் விற்பனைக்கு உண்டு. கார்கள் வாங்குவதற்கும் விற்பனைக்கும் உண்டு. அத்துடன் ***Van*** வாடகைக்கு ஓட்டப்படும். அழையுங்கள் : ***416.625.4146***

மேலும் பக்கங்கள் 24, 26



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070

## Answers TUTORIAL 276

(1) AL's share is 1/10 x 100 = $10 and Bob's share is 1/5 x 100 = $20.
Therefore Carl's average of $10 and $20 namely $15.
Hence Dave collects 100 - 10 - 20 - 15 = $55

(2) $F(x) = ax^2 + bx + c, a \neq 0$   $f(0) = 0$   $C = 0$

$\lim_{x \to 1} f(x) = 5, a + b = 5$   $\lim_{x \to -2} f(x) = 8$   $4a - 2b = 8$

$6a = 18$   $a = 3,$   $b = 2,$   $c = 0$

(3) $h = 25t^2 - 100t + 100$   $h^1 t = 50t - 100$

when $h = 0,$   $25t^2 - 100t + 100 = 0$   $t^2 - 4t + 4 = 0$

$(t - 2)^2 = 0$   $t = 2$

$h^1(2) = 0$   It hit the ground in 2 sec. at a speed of 0 m/s.

(4) Let $a = i + j + k = (1, 1, 1)$   $b = y^2 i - 2y j + k = (y^2 - 2y + 1)$

Since a perpendicular, $a . b = 0$   $y^2 - 2y + 1 = 0$

$(y - 1)^2 = 0$   $y = 1$

(5) $|x + y|^2 = (x + y), (x + y)$   $= x, x + 2xy + y, y$

$|x|^2 + 2x . y + |y|^2$   $2x.y = |x + y|^2 - |x|^2 - |y|^2$

$x. y = 1/2 [|x + y|^2 - |x|^2 - |y|^2]$

## Tutorial 277 Questions

(1) A bus had 3/4 of tank full of gas. After a trip it used 1/5 of it. What fracrian of tank gas is remaining? (For Gr. 8)

(2) If (3u + 4v) and (6u - 2v) are linearly independent vectors show that u and v must be linearly independent also? (For Gr. 12)

(3) Find a vector equation of the line that passes through the point (4, 5) and is perpendicular to the line r = (1, 8) + t (3. 7) (For Gr. 12)

(4) A manufacture's total weekly cost in producing x items can be written as C(x) = F + V(x) where F, a constant represents fixed cost such as rent and utilities and V (x) represents variable cost which depend on production level x. show that the rate of change of cost is independent of fixed cost. (For Gr. 12)

(5) A circulas oil slick on the ocean spreads outward. Find the approximate rate of change of the area of the oil slick with respect its radius when the radius in 100m. (For Gr. 12)

MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8. Classes available at Scarborough & Stouffville

Contact: 647.340.9490 / 647.831.0363

Tutoring

Gr.1-12; College & University

* English * French * Math * Physics * Chemistry * Biology *

- Systematic and individualized Plan to Build Strong Base in Core Subject Areas
- Strict Adherence to Ontario Curriculum
- Regular School Teachers and Canadian University Graduate and Post Graduate Students Taking Classes

GTA Tutors

Ph: (647) 705 0725

Our Aim is to Make Students Competent Internationally while Committed to Affordable Rates

Tutoring

Tutoring for students from grade 3 to 12.

Courses include: Math, Science, Algebra and Geometry, Advance Function, Physics, Chemistry and English. Also tutoring available for University student. Home visit also available.



You will have a better chance of achieving your goals. Courses taught by experience University graduates. Cost for the courses areas the following:

Grade 3 to 5 from $30.00/month   Grade 6 to 8 from $40.00/month
Grade 9 to 12 from $50.00/month   Location: Near Birchmount & Sheppard.

For more information contact Kula (B.Engineer McMaster University Canada, B.Sc Jaffna University SriLanka) at

Home: (416) 850-9397 Cell: (416) 317-9413

# கனடாவில் இப்படி ஒரு விபத்து ஏற்படுமா?

கனடாவில் ஏழு அணுமின் உற்பத்தி நிலையங்கள் உள்ளன. அவற்றில் ஐந்து ஒன்ராறியோ மாகாணத்திலும் ஒன்று குவிபெக் மாகாணத்திலும் ஒன்று நியூ பிறண்ஸ்வீக் மாகாணத்திலும் இருக்கின்றன. ஒன்ராறியோ மாகாணத்தில்



இரண்டு Tiverton இலும் இரண்டு Pickering இலும் ஒன்று Clarington இரும் இருக்கின்றன.

கனடாவில் பாவிக்கப்படும் Candy எனப்படும் அணு உலைகள் தொழில்நுட்பத்தில் உலகிலேயே முதல் தரமானவை. இவை ஜப்பானிய அணுமின் நிலையம் போல் பூகம்பத்திற்கு தாக்கு பிடிக்கக்கூடியனவும் ஒரு பூகம்பம் ஏற்படும் போது தானாக மூடப்படக் கூடியனவாகும்.

ஜப்பானிலுள்ளவையும் திட்டமிட்டபடியே நடந்தன. ஆனால் இப்பூகம்பத்தை அடுத்து வந்த ஆழிப்பேரலையே அணுமின் நிலையத்தின் குளிரவைக்கும் சாதனங்களை இயங்க விடாமல் தடை செய்தது. கனடாவின் அணுமின் நிலையங்கள் ஒன்றும் பூகம்பம் ஏற்பட கூடிய இடத்திலும் (fault lines) இல்லை. அதற்கும் மேலாக இவை ஒன்றும் ஆழிப்பேரலையால் தாக்கப்படக்கூடிய அளவு கடற்கரைக்கு அருகாமையிலும் இல்லை. இவை இரண்டையும் விட சிறப்பு அம்சமாக கனடாவின் அணு உலைகள் அங்கு பாவிக்கப்படும் உயர் அழுக்கத்தில் இருக்கும் பாரமான நீராலேயே குளிரவைக்கக் கூடியவை. இதனால் ஜப்பானில் ஏற்பட்ட அணுமின் நிலைய விபத்து போன்று ஒன்று ஏற்படாது.

# இளையோர் ஆக்கம்

விளம்பரம் தனது எழுத்தாளர்களை வருடம் தோறும் தை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கௌரவிக்கின்றது. கடந்த வைபவத்தில் பல எழுத்தாளர்கள் விளம்பரத்தில் அடுத்த தலைமுறையை எழுதத் தூண்டவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதற்கு இணங்க விளம்பரத்தின் பொங்கல் இதழ் உடன் **இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்கப்படுகின்றது.**

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

## தந்தை தாய் பேண்

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' (ஔவையார்)

இதன் கருத்து, அம்மாவும், அப்பாவும் தான் எமது கண்களால் காணக்கூடிய தெய்வங்கள். அவர்கள் எங்களை குழந்தையில் இருந்து, வளர்த்து, வாழ




வைப்பவர்கள். இதனால், நம் பெற்றோரின் முதிய காலத்தில் நாம் அவர்களை பேண வேண்டும்.

'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல் என்னும் சொல்'
- திருவள்ளுவர்

மக்கள், தங்கள் பெற்றோர்களுக்கு எவ்வாறு உதவி செய்யலாம்? நன்றாக படித்து, நல்ல பெயர் எடுத்து, பெற்றோர்களை பெருமைப்படுத்தலாம் என்று திருவள்ளுவர் கூறினார்.

'தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது'.
- திருவள்ளுவர்

பெற்றோர் உட்பட, உலக மக்கள் எல்லோருக்கும் நன்மை தருவது என்னவென்றால், பிள்ளைகள் பெற்றோரை விட அறிவு மிக்கவராக இருத்தல் ஆகும்.

'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை,
தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை'.
- ஔவையார்

என்று ஔவையார் கூறிய தாய் தந்தையாரை பிள்ளைகளாகிய நாங்கள் அவர்களுடைய வயோதிப காலத்தில், அவர்களை பேணி காக்க வேண்டும்.



**ஞா. ஆரணி**
அகவை 12

## ROOM FOR RENT
### WARDEN & FINCH
சந்திப்புக்கு அருகாமையில் உள்ள Condo. வில் சகல வசதிகளுடனும் கூடிய இரு அறைகள் தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு. மாணவர்கள் அல்லது இளம் தம்பதியினர் விரும்பத்தக்கது. மாலை 4.00 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும்: 647.929.7172

## HOUSE FOR RENT
### NEILSON & SHEPPARD
*3 Bedrooms in main floor+ 1 bedroom bsmt for rent. 2 Washrooms, 4 car parking. Close to all facilities.* தொடர்புகளுக்கு: ***647.830.4644***

## SPACE FOR RENT / LEASE
### BRIMLEY & LAWRENCE
*Offices, classes, insurance office, office meeting, computer repair service* போன்ற வர்த்தகங்கள் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 647.857.1179

## DILAN PAINTING RENOVATION



**உங்கள் அனைத்து வகை *Painting* தேவைகளுக்கும் அழையுங்கள்.**

**உங்கள் வீடுகளை அலுவலகங்களை மிகக் குறைந்த விலையில், குறுகிய நேரத்தில் மிகச் சிறந்த முறையில் 15 வருட அனுபவம் வாய்ந்தவர்களால் வர்ணமயமாக்கித் தரப்படும். அழையுங்கள்.**

*Sub Contractor From Home Depot*
தொடர்புகள்: **416.828.1740**

## யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# கணக்கு விடுவோமா?

## மின்வலையில் வந்தவை - 11

**கீழ் உள்ளவற்றை நன்கு கவனியுங்கள் ஆச்சரியமாய் இருக்கும்**

1 x 8 + 1 = 9
12 x 8 + 2 = 98
123 x 8 + 3 = 987
1234 x 8 + 4 = 9876
12345 x 8 + 5 = 98765
123456 x 8 + 6 = 987654
1234567 x 8 + 7 = 9876543
12345678 x 8 + 8 = 98765432
123456789 x 8 + 9 = 987654321

1 x 9 + 2 = 11
12 x 9 + 3 = 111
123 x 9 + 4 = 1111
1234 x 9 + 5 = 11111
12345 x 9 + 6 = 111111
123456 x 9 + 7 = 1111111
1234567 x 9 + 8 = 11111111
12345678 x 9 + 9 = 111111111
123456789 x 9 + 10 = 1111111111

9 x 9 + 7 = 88
98 x 9 + 6 = 888
987 x 9 + 5 = 8888
9876 x 9 + 4 = 88888
98765 x 9 + 3 = 888888
987654 x 9 + 2 = 8888888
9876543 x 9 + 1 = 88888888
98765432 x 9 + 0 = 888888888



**கீழே உள்ளவற்றைக் கவனியுங்கள் ஆச்சரியமாய் இல்லையா? அனுபவியுங்கள்**

1 x 1 = 1
11 x 11 = 121
111 x 111 = 12321
1111 x 1111 = 1234321
11111 x 11111 = 123454321
111111 x 111111 = 12345654321
1111111 x 1111111 = 1234567654321
11111111 x 11111111 = 123456787654321
111111111 x 111111111 = 12345678987654321

- துறையூரான் -

இனி இந்த 101% என்பதைக் கவனியுங்கள். மிகவும் கண்டிப்பான கணிதவியலின் படி 100% என்றால் எவ்வளவு? 100% வீதத்துக்கும் அதிகமாகக் கொடுப்பதென்றால் என்ன? சிலர் தங்கள் 100% மேலாகக் கொடுக்கிறோம் என்றால் அதன்
அர்த்தம்? 101% பெறுவது எவ்வாறு? வாழ்க்கையில் 100% என்பது எதற்குச் சமம். இக்கேள்விகளுக்கு விடை காண்பதற்குப் பின்வரும் கணிதச் சமன்பாடுகள் உதவலாம்.

***A B C D E F G H I J K L M N O P Q R S T U V W*** ஆகியன
1 2 3 4 5 6 7 8 9 10 11 12 13 14 15 16 17 18 19 20 21 22 23 24 25 26 என்ற எண்களுக்குச் சமமென்றால்

***H A R D W O R K***
8 + 1 + 18 + 4 + 23 + 15 + 18 + 11 = 98%
***KNOWLEDGE***
11 + 14 + 15 + 23 + 12 + 5 + 4 + 7 + 5 = 96%
***ATTITUDE***
1 + 20 + 20 + 9 + 20 + 21 + 4 + 5 = 100%

கடவுளை நேசித்தால் அது எவ்வளவுக்குச் சமமாக இருக்கும் எனப் பாருங்கள்
***LOVE OF GOD***
12 + 15 + 22 + 5 + 15 + 6 + 7 + 15 + 4 = 101%

எனவே ஒரு கணிதவியல் ரீதியாக பின்வரும் முடிவுக்கு வரலாம். கடின உழைப்பும், அறிவும் மிகவும் அண்மையில் வருமெனினும் ஒருவருடைய மனப்பாங்கு 100% வீதத்தை அடையும் எனினும் கடவுளை நேசித்தால் மட்டுமே 101% அடைய முடியும். எனவே கடவுள் ஆசிகளைப் பெற்று 101% மன நிறைவைப் பெறுவீர்களாக.

இவ்வளவு கணிதக் கண்டு பிடிப்புக்களுக்கும் காரணமாயிருந்தவர் கடவுள் அருள் பெற்றவராக இருந்திருக்க வேண்டும். இக்கணித கண்டு பிடிப்புக்கள் சரியானவையா? எனச் சரி பார்க்க விரும்புவோர் செய்து பாருங்கள் நேரமிருந்தால் கணக்கோடு விளையாடிப்பாருங்கள் கணக்கு விடாமல்.

# அயர்லாந்தின் அதிரடி...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

உலகக் கோப்பையில்தான் முதல் முறையாக களம் கண்ட தென் ஆப்பிரிக்க வீரர் இம்ரான் தாஹிர் (3 ஆட்டம், 11 விக்கெட்) ஆகியோர் பட்டியலில் முதலிரண்டு இடத்தைப் பிடித்துள்ளனர்.

ஒரு காலத்தில் சுழற் பந்துவீச்சு என்றாலே இந்தியாதான் என்ற நிலை இருந்தது. உலகப் புகழ்பெற்ற சுழற் பந்துவீச்சாளர்கள் இந்திய அணியில் இடம்பெற்றிருந்தனர்.

சுபாஷ் குப்தே (36 டெஸ்ட், 149 விக்கெட்), பிஷன் சிங் பேடி (67-266), சந்திரசேகர் (58-242), பிரசன்னா (49-189), வெங்கட்ராகவன் (57-156), அனில் கும்ப்ளே (132-619, 271 ஒரு தின ஆட்டம், 337 விக்கெட்), திலிப் தோஷி (33-114) போன்ற சுழற் பந்துவீச்சாளர்கள் எதிரணிகளுக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தனர். இந்திய அணிக்கு புகழ் பெற்ற பல வெற்றிகளை அவர்கள் பெற்றுத் தந்துள்ளனர். அப்படிப் பட்ட பாரம்பரியத்தில் வந்த இந்திய அணி, சுழற் பந்துவீச்சாளர்கள் பற்றாக்குறையால் இப்போது திணறி வருகிறது.

ஹர்பஜன் அளவுக்கு புகழ் பெறாத மேற்கிந்தியத் தீவுகளின் சுலைமான் பென் (3 ஆட்டம், 8 விக்.), இங்கிலாந்தின் ஸ்வான் (4 ஆட்டம், 7 விக்.), கனடாவின் பாலாஜி ராவ் (4 ஆட்டம், 7 விக்.), தென் ஆப்பிரிக்காவின் ராபின் பீட்டர்சன் (3 ஆட்டம், 5 விக்.), அயர்லாந்தின் டாக்ரெல் (3 ஆட்டம், 5 விக்.), ஜிம்பாப்வேயின் ரேமண்ட் பிரைஸ் (3 ஆட்டம், 4 விக்.) ஆகியோர் கூட இந்த உலகக் கோப்பை போட்டியில் ஓரளவு முத்திரை பதித்துள்ளனர் என்றே சொல்லலாம்.

ஆனால், 2001-ல் ஆஸ்திரேலிய அணியை கதிகலங்க வைத்தவரும், 93 டெஸ்டுகளில் 393 விக்கெட்டுகளையும், 220 ஒரு தின ஆட்டங்களில் 248 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளவருமான ஹர்பஜன் சிங், இந்த உலகக் கோப்பையில் இதுவரை 3 ஆட்டங்களில் 2 விக்கெட் மட்டுமே வீழ்த்தியுள்ளார். அதுவும் அயர்லாந்துக்கு எதிராக அவரால் 9 ஓவர் வீசியும் விக்கெட் எதையும் வீழ்த்த முடியவில்லை. வங்கதேசத்துக்கு எதிராக ஒரே ஒரு விக்கெட் வீழ்த்தினார்.




மற்றொரு சுழற் பந்துவீச்சாளரான பியூஷ் சாவ்லா அயர்லாந்து (0-56), இங்கிலாந்துக்கு (2-71) எதிராக மிகவும் மோசமாகப் பந்துவீசினார் என்றே கூறலாம். 2008 ஜூலையில் பாகிஸ்தானுடனான ஆட்டத்துக்குப் பின் சுமார் இரண்டரை ஆண்டுகளில் கடந்த ஜனவரியில் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக ஒரே ஒரு ஆட்டத்தில் சாவ்லா பங்கேற்றுள்ளார். அவர் உலகக் கோப்பை போட்டிக்குத் தேர்வானபோதே பலர் தங்கள் வியப்பை வெளிப்படுத்தினர்.

பகுதி நேர சுழற் பந்துவீச்சாளர்களான

தொடர்ச்சி 32ம் பக்கம்

# இன்னொரு... ஆச்சி வீடு

பாகம் - 4
பகுதி 15

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே

◊ சி.வி. நாதன் ◊

அன்று வெள்ளிக்கிழமை! 4 மணியிருக்கும். இனியன் வருவதற்கு இன்னமும் ஒரு மணித்தியாலம் உள்ளது. பொழுதுபோக்கிற்காக தொலைக்காட்சியில் ஏதோ ஒரு நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாள் ரேவதி. நிகழ்ச்சியும் விறுவிறுப்பாகப் போய்க் கொண்டிருக்க, ரேவதி முற்றாகவே தன்னை மறந்து நிகழ்ச்சியைப் பார்த்தக் கொண்டிருந்தாள்.

டிங் டொங்.. டிங் டொங்

வாசல் அழைப்பு மணி மெதுவாகச் சிணுங்கியது. ரேவதி கவனிக்கவில்லை.,

மீண்டும்

டிங் டொங்... டிங் டொங்

இம்முறை வாயிலின் மணியோசை ரேவதியை ஈர்த்துக் கொண்டது. யாராக இருக்கும்?

இருக்கையில் இருந்தும் மெதுவாக எழுந்தாள். வாசலை நோக்கி நடந்தவளின் மனதில் மீண்டும் வந்தது அந்த மௌனக் கேள்வி யாராக இருக்கும்?

இவராக இருந்தால் அழைப்பு மணியை அடிக்கமாட்டாரே! ஒருவரும் இந்நேரத்தில் வருவதாகவும் இல்லையே!

கேள்விக் குறிகளையும், ஆச்சரியக் குறிகளையும் தன்னுள் சுமந்தவளாக ரேவதி வாசற் கதவண்டை வந்தாள். கதவைத் திறக்க நினைத்தவள், நினைப்பினை மாற்றிக் கொண்டு, கதவில் இருந்த வில்லையின் ஊடாகப் பார்த்தாள். வெளியே, கதவண்டையில் இருவர் நிற்பது தெரிந்தது. ஆனால் யாரெனத் தெளிவாகத் தெரிய வில்லை. ஒருவரின் முகம் சற்றுப் பழக்கமானது போலவும் வில்லையின் ஊடாத் தெரிந்தது. இப்ப 4 மணிதானே! அக்கம் பக்கத்தில் வீடுகளும் இருக்கின்றன. பயப்படத் தேவையில்லை என்று எண்ணிய ரேவதி மெதுவாகக் கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள். திகைத்துவிட்டாள்!

தலையைச் சுற்றுவது போல இருந்தது ரேவதிக்கு. கதவைப் பிடித்துக் கொண்டாள் ரேவதி!

வெளியே.

அவளது கணவன் இனியன்.

கூடவே இன்னொருவர்.

ஆனாலும்,

அவளது 58 வயதுக் கணவன் இனியனில்லை! 28 வயது இனியன் நின்று கொண்டிருந்தான். 30 வருடங்களுக்கு முன் எப்படியாகக் கண்டு மயங்கிக் காதல் கொண்டாளோ, அதே இனியன், அதே இளமைத் தோற்றத்தில் நிற்பதைக் கண்ட ரேவதிக்கு மயக்கம் வராமல் என்னதான் செய்யும்? கதவைப் பிடித்தபடியே, இருவரையும் மலங்க, மலங்கப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இனியன்தான் ஏதாவது சில்மிசம் செய்கிறாரோ!

அப்படியிராது! மிகவும் எளிமையானவராச்சுதே. தலையில் அங்கங்கு தெரியும் வெள்ளைக் கம்பிகளுக்குக் கூட நிறமடிக்க விரும்பாத மனிசனா இப்படி இளமையாக. பக்கத்தில் நிற்பவரை தெரிய வில்லை. ஒருநாளும் இதற்கு முன் கண்டதில்லை.

வாசலில் நின்றவர்களுடன் ஏதும் பேசவில்லை, பேசமுடியவில்லை, ரேவதிக்கு. யார் நீங்கள்? என்று கேட்கவும் முடியவில்லை, உள்ளை வாங்கோ என்று அழைக்கவும் முடியவில்லை.

வாசலில் நின்றவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

வனக்கம்

வணக்கத்தைத்தான் வணக்கம் என்கின்றான் என்பதைப் புரிந்து கொண்டாள் ரேவதி. அது மாத்திரமல்லாது ஏதோ உலோகச் சத்தத்தில் வந்தது அந்த வணக்கம். ஆனாலும் இனியனின் பாணியில் வந்நது, அந்த வந்தனைச் சொல் வணக்கம் சொன்னவன் சிநேகிதமாகச் சிரித்தான். 30 வருடங்களுக்கு முன் இனியன் சிரித்தது போலவே இருந்தது, ரேவதிக்கு. கொஞ்சம் வித்தியாசமும் இருந்தது போல இருந்தது. என்னவென்று தெரியவில்லை.

ஒருவேளை மகன் இன்பவேல்தான் தகப்பனின் பழைய படத்தைப் பார்த்து விட்டு அதுபோலவே ஒப்பனை செய்து கொண்டு வந்து நிற்கின்றானோ? இன்பவேலும் அசப்பில் தகப்பனைப் பொலவே இருப்பான். தூரத்தில் நிற்கும்போது இனியனின் நண்பர்கள் இன்பவேலைப் பார்த்து இனியன்தான் என்று ஏமாறிய சம்பவங்களும் பல உண்டு. ஆனாலும் இன்பவேல் இப்ப நியூயோர்க்கில் அல்லவா நிற்கின்றான்!

ரேவதிக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை.

நெஞ்சு இலேசாக வலிப்பது போல் இருக்க, வலது கையால் மெதுவாக நெஞ்சைப் பிடித்துக் கொண்டாள்.

நீங்கள் ரேவதிதானே? என்றான் மற்றவன்.

இதுவும் வெண்கலச் சத்தம் போலத்தான் கேட்டது ரேவதிக்கு. அதிகம் பாவிக்கப்படாத தமிழ்ச் சொற்கள் வெளியே வந்து விழுவது போல, அந்நியத் தன்மை கொண்ட கடின-மான வார்த்தைகள் போலத்தான் இருந்தது. மற்றவன் கிட்டத்தட்ட ஐம்பது வயதுக்காரன் போல் தோன்றினான். நிச்சயமாக இவனுக்கு ஐம்பது வயதுக்கு மேல் இராது என ரேவதியின் மனம் அவனைப் பார்த்தவுடன் கூறிக் கொண்டது. இளவதுக்காரன் ஒருவன் தன்னை நீங்கள் ரேவதிதானே எனக் குறிப்பிட்டுச் சொன்னது அவளுக்கு என்னவோ போலிருந்தது, அந்நிலையிலும். கொஞ்சம் மரியாதையாகக் கேட்டிருக்கலாம் போலத் தோன்றியது. உண்மையில் அவளுக்கு அந்த வகையான எண்ணத்தைத் தோற்றுவித்தது அவர்களது குரல்கள்தான்.

இந்தக் கேள்விகளுக்குக் கூடப் பதில் சொல்லாமல், திகைத்தபடியே நின்றாள் ரேவதி. ஆரணை பிள்ளை என்ற குரல் ரேவதிக்குப் பின்னால் கேட்டது. திலகம்தான் ஆட்களின் அசுமாத்தம் அறிந்து கேட்டாள். இதற்கும் கூட ரேவதி பதில் சொல்லாமல், ஒருகையால் கதவையும், மறு கையால் நெஞ்சையும் பிடித்தபடியே நின்றாள்.

திலகத்தின் குரலைக் கேட்டதும் ஒருவன் ஏதோ கூற முற்பட, மற்றவன் கண்களால் சாடை காட்டி மறித்து விட்டான்.

இந்தப் பெட்டை இப்பிடித்தான். சிலவேளையளிலை பதிலே சொல்லாது திலகத்தின் முணுமுணுப்புக் கேட்டது. ரேவதிக்கு 55 வயதான போதிலும் இப்பவும் அவள் திலகத்திற்குப் பெட்டைதான்.

நாங்கள் இனியனைப் பார்க்க வந்தனாங்கள். அவர் நாலு மணிக்கே வீட்டுக்கு வந்து விடுவார் என்று எங்களுக்குத் தெரியும். இல்லை எண்டு சொல்லாதையுங்கோ. அவருடன் கதைக்க வேணும் சின்னவன்தான் சொன்னான். அவனது கண்கள் உள்ளே எட்டிப் பார்த்தன. உள்ளே எதையோ ஆவலாகத் தேடுவது போலவும் இருந்தது. ரேவதிக்கு உடனே தெரிந்தது, இவன் இனியனும் இல்லை, இன்பவேலுமில்லை என்பது. ஆனாலும் தனது கணவனைச் சர்ச சாதாரணமாகப் பெயர் சொல்லிக் கூப்பிட்டது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது யார் இவன்? இவரைப் பேர் சொல்லிக் கதைக்கிறானே! ஏதாவது உயர் உத்தியோகத்தில் இருப்பவனோ? ஆளைப் பாத்தால் அப்படி ஒன்றும் தெரியவில்லையே! இன்னமும் ரேவதியால் கதைக்க முடியவில்லை. இருவருமே நீல நிறத்தில் சட்டை போட்டிருந்தார்கள். கறுப்புப் போன்ற நிறத்தில் அமைந்த ஜீன்சினுள் சட்டையை விட்டிருந்தார்கள். ஜீன்கள் பட்டிகளினால் இறுக்கப்பட்டிருந்தன. சட்டைகளின் பொத்தான்கள் ஏதோ உலோகத்தினால் ஆனவை போலும். உலோகப் பளபளப்பைக் காட்டின.

அந்த நேரத்தில் அவர்களது வீட்டின் முன்னால் இனியனின் கார் வந்து நிற்க, காரின் கதவைத் திறந்து கொண்டு மெதுவாக இறங்கினான் இனியன், இல்லை இறங்கினார் இனியன்.
(ரேவதிக்கு கோபம் வரக் கூடாதல்லவா!)

(இன்னமும் வரும்)


## சுயாதீன கலை திரைப்பட மையம்
## ரொரண்ரோ

# 9th IF Tamil -2011

ஒன்பதாவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா - படைப்புகளுக்கான கோரல்

சுயாதீன கலை திரைப்பட மையத்தால், கனடாவின் ரொரன்ரோ நகரில் நடத்தப்படும் வருடாந்த சர்வதேச குறுந்திரைப்பட விழாவில் பங்குபற்றுவதற்கான குறுந்திரைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. படைப்புக்கள் ஆங்கில துணைத் தலைப்புக்களை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

விழாவில் சிறந்த திரைப்படைப்புக்களுக்கான 3 பரிசுகள் வழங்கப்படும்.
அவையாவன:: $500- $300- $200

படைப்புக்கள் பின்வரும் விதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்படவேண்டும்:

- படைப்புக்கள் மே 15, 2011க்கு (May. 15, 2011) முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புகளுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்பக்கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படல் வேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.
- தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது..
- படைப்புக்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

Tam Sivathasan
Exceutive Director - IAFS
1345 Morningside Ave., Unit # 8, Toronto, ON. Canada, M1B 5K3

மேலதிக தொடர்புகளுக்கு: 1-416-450-6833; 1-416-804-3443;
rathan@rogers.com, iafs@rogers.com, www.iafstamil.com
- Independent Art Film Society of Toronto

# கணியன் பூங்குன்றனார்

ஊரினால் மதிப்பும் பெருமையும் பெற்றவர் பலர் உள்ளனர். சினிமாத்துறையில் சீர்காழி கோவிந்தராஜன், சிதம்பரம் ஜெயராமன், திருச்சி லோகநாதன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பாபநாசம் சிவன் மறக்கமுடியாதவர்கள். இதேபோன்று சங்க காலப் புலவரான கணியன் பூங்குன்றனார் தொழிலாலும் ஊரினாலும் பெருமை பெற்றவர். பூங்குன்றம் அவர் வாழ்ந்த ஊர். கணியம் அவரது தொழில். கணியம் என்றால் சோதிடம். சோதிடம் என்பதற்கு பண்டைய பெயர் கணியம். கணியம் தெரிந்தவன் கணியன். எதிர்காலத்தில் நிகழும் நிகழ்வுகளை நாளும் கோளும் கணித்து உணர்ந்து சொல்லும் கேள்விச் செல்வம் பெற்றோன் கணியன் ஆவான். அரச சுற்றமாகிய எண்பேராயத்தில் கணியன் என்பவன் ஒருவன். "துணிவு உணரும் தொல் கேள்விக் கணியன்" என்பது புறப்பொருள் வெண்பா மாலை.

கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்றுப் பாடல் சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் தருவது. படிக்க, படிக்கப் பரந்த மனப்பான்மையினை ஏற்படுத்துவது. நமது முன்னோரின் பண்பாட்டை அறிதற்கு இப்பாடல் பெரிதும் துணை செய்கின்றன. அவரது பாடலில் ஒரு வரி மிகவும் பிரசித்தமானது 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதே அவ்வரியாகும். பிரச்சினைகள் ஏதுமின்றி உலகமக்கள் அனைவரும் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு தம்மை சுற்றத்தினராகக் கருத வேண்டும் என்பதேயாகும். இவ்வரி ஐக்கிய நாடுகள் மன்றிலும் ஒலித்தமை அதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. இன, மத, மொழி, நாட்டு எல்லைகளைக் கடந்து உலக குடிமகனாக வாழும் நிலை ஏற்படும் போதுதான் போரற்ற உலகினைக் காணமுடியும்.

நமக்கு வரும் நன்மை தீமைக்கு நாமே காரணம். அதற்கு பிறரை நோவது அறியாமை. "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்பது மிகவும் உயர்ந்த கருத்து. இதனை உணராத காரணத்தினால் தான் நாம் ஏக்கம் அடைகின்றோம். துன்பத்திற்குரிய ஆதி காரணம் உணரப்படுமானால் ஏக்கத்திற்கு இடமே இல்லாமல் போகும்.

சாதல் என்பது உலக இயற்கை. அது திடுமென வந்துவிடும் ஒன்று என்று கருதவேண்டாம். தொன்று தொட்டு உலக இயற்கையில் ஒன்று என்பதை 'சாதலும் புகுவது அன்று' என்று கூறும் கருத்து போற்றுதலுக்குரியது. நாம் சாவதன் பொருட்டு தளர்தல் கூடாது என்ற கருத்தும் இவரது பாடலில் காணப்படுகின்றது.

தமக்கு நல்வாழ்வு வந்தபோது பெருமகிழ்ச்சி அடைந்தோ வறுமை வந்துற்ற போது கவலை யடைந்தோ இப்புலவர் வாழவில்லை என்பதை அறிகின்றோம். இன்ப துன்பங்களை ஒரேவிதமாக கருதி வாழ்ந்தவர் என்பதை 'இனி தென மகிழ்ந்தன்றும் இலமே. முனிவின் இன்னாதென்றலும் இலமே' என்ற வரி உணர்த்துகின்றது.

வாழ்வு அதன் வினைப்படி நடக்கும் என்பது இவரது ஆழ்ந்த பட்டறிவாகும். ஊழின் வன்மைக்கேற்ப வாழ்வு அமைப்பு என்பதே இவர் கருத்து. ஆற்று நீர் செல்லும் வழியே தெப்பமும் செல்வது போல உயிர் வாழ்க்கையே ஊழின் போக்கில் நடக்கும் என்பதேயாகும். மேலும் முன்னோர் வழிமொழியைப் போற்றுவதும் இவர்தம் சிறப்பு 'நன்மையின் கூறுபாட்டை அறிந்தோர் கூறியுள்ள நூலால் அறிந்தோம்' என்பது இவர் தம் அடக்கத்தை அறிவுறுத்துகின்றது.

இதுமட்டுமன்றி நூலறிவுமிக்க மதிநுட்பம் மிகுந்தவராய், உலக இயல்பை உணர்ந்தவராய், உயரிய மனப்பான்மை வாய்க்கப்பெற்றவராய், கள்ளம் கபடம் இல்லாதவராய், எல்லோரும் இன்புற்று இருக்க மென்பவராய் இருந்தாலேயே பாடலின் ஈற்றில் "பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" என்று கூறியுள்ளார். பெரியோரை தமராகக் கொளல் வேண்டும் என்ற கருத்திற்கு முரண்பட்டதாக இது இருந்தாலும், புகழ்வதும் இகழ்வதும் தேவையில்லாதது என்று தெளிவாகக் கூறியுள்ளார். இதுதான் பாடல் முழுவதுமாகும்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன
சாதலும் புகுவது அன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே மின்னொடு
வானம் தண்துளி தலை இயானது
கல் பொருது மிரங்குமல்லல் பேரியாற்று
நீர் வழிப்படும் புனைபோல் ஆருயிர்
முறைவழிபாடும் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

நா. க. சிவராமலிங்கம்



# அங்கும் இங்கும்!



அடர்ந்த உயர்மரங்களும்
செறிந்து வளர்ந்த செடிகளும்
நிறைந்த திக்குத்தெரியாத காட்டில்
வலிய மிருகங்களும்
சாதுவான மிருகங்களும்
வாழும் வாழ்வில்
வல்லினம் மெல்லினத்துடன்
முட்டி மோதி ஒன்றை ஒன்று
தாக்கியும் அழித்தும்
வாழும் வாழ்வு இயல்பானாலும்
அப்பாவி மிருகங்கள் பலியாவது
முறையா? நியாயமா?
என்று மனம் துடித்த வேளை
உணவுச்சங்கிலியின் இயல்பை
அறிவு உணர்த்த மனம்
ஓரளவு அமைதி கண்டது

நாம் வாழும் அழகிய பூமியிலும்
பாவிகள், அப்பாவிகள்
வல்லவர்கள் நல்லவர்கள் என
மனிதர்கள் வாழ்கையில்
வல்லினம் மெல்லினத்துடன்
முட்டியும் மோதியும்
பகைத்தும் வாழும் நிலைகள்
ஆறறிவு படைத்த மனிதரிடமும்
இன்றுவரை தொடர்வது
முறையா? நியாயமா? என்று
மீண்டும் மனம் துடித்தவேளை
பண்புடையோர் சிலர் இன்னும்
வாழ்வதால் உலகம் வாழ்கிறது
என்ற தெய்வப்புலவன் வாக்கை
அறிவு உணர்த்த மனம்
ஓரளவு அமைதி கண்டது.

---ரஞ்சி கதிர்---

ranji24.kathir@gmail.com

# மரணம் விதிகளை உடைக்கும்

விதிப்படிதான் மரணங்கள் வரும் என்று பலர் கூறுவார்கள். ஆனால் அதே மரணங்களே விதிகளை உடைக்கும் என்பதை அவர்கள் தொடர்ந்து விளக்குவதில்லை.

இராமாயணத்தில் இராமனின் அம்பு பட்டு வீழ்கிறான் வாலி. தன் மார்பில் தைத்த அம்பை உருவிப் படிக்கிறான். பாய்ந்திருப்பது இராமபாணம் என்பதை அறிந்து ஆச்சரியப்படுகிறான். தன் மரணம் விதிப்படி நடக்கவில்லை என்பதையும், அங்கு விதி உடைக்கப்பட்டுவிட்டதையும் கண்டு கொள்கிறான். அந்த நிகழ்வை கவிச்சக்கரவர்த்தி கம்பர் பாடும்போது. வீரமன்று, விதியன்று மொய்மையின் வாரமன்று, நின் மண்ணினுக்கு என்னுடல் பாரமன்று, பழியன்று, பண்பொழிந்து இது என் செய்தவாறு நீ... என்று அந்தப் பாடல் போகும். , விதியன்று..! , என்ற சொல்லை வாலி யின் மரணத்தின் போது கம்பர் சரியாகப் பாவிப்பார். மரணமும், வெற்றியின் வெறியும் விதியை உடைத்த இடத்தை விளக்க வாலியின் மரணத்தைவிட வேறு நல்ல உதாரணம் வேண்டியதில்லை.

இதுபோல போரின் விதிக்கு மாறாக நடத்தப்பட்டதுதான் புதுமாத்தளன் போர். அது விதிப்படி நடைபெறவில்லை. மரணங்களால் விதிகள் உடைக்கப்படும் என்ற உண்மையை இன்னொரு தடவை உலகிற்கு உணர்த்திய கொடும் போராகும். இறைவனின் கட்டுப்பாடு குலைந்துபோன இந்த அவலமான நேரத்தில் என்ன செய்யலாம்... ?

இதற்கு ஓர் உபகதை இருக்கிறது. தாய்மாடு சிங்கத்தால் அடித்துக் கொல்லப்பட்டு மார்பு பிளந்த நிலையில் உயிரற்று இரத்த வெள்ளத்தில் கிடக்கிறது. அதற்கு அருகில் இருந்த மரத்தில் அந்தத் தாய் பெற்ற காளை மாடு தனது கொம்புகளைப் பலமாகத் தீட்டிக் கொண்டிருக்கிறது. அந்த வழியால் வருகிறது தாயைக் காட்டிக் கொடுத்த குள்ள நரி. உன்தாய் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடக்கிறாள். அவளுக்காக கண்ணீர்விட்டு அழாமல் உன் கொம்புகளை ஏன் தீட்டுகிறாய் என்று கேட்டது.

பதில் கூறாது... பாய்ந்து வந்து காட்டிக் கொடுத்த குள்ள நரியைக் குத்திக்கிழித்த காளை மாடு, எனது கொம்புகள் மொட்டையாக இருந்திருந்தால் உனக்கு இந்தப் பரிசைத் தந்திருக்க முடியாது என்று கூறுகிறது. காளை மாடு கண்ணீர் விட்டு அழுதிருந்தால் அக்கணமே தாயைப் போல இரத்த வெள்ளத்தில் கிடந்திருக்கும்.

மரணம் சகல நீதிகளையும் உடைக்கும் என்பதை காளைமாடு கண்டு கொண்டது, விழிப்படைந்தது உயிர் தப்பியது. இக்கதையை புதுமாத்தளன் மரணங்களைப் பார்த்த ஒவ்வொரு ஈழத் தமிழனும் மனதில் வைத்திருக்க வேண்டும்.

மரணங்கள் எப்படிப்பட்ட குரோதங்களை வளர்க்கும், அதனால் எப்படியெல்லாம் சமூக நீதி குலையும் என்பதை அறிய பாரதக்கதையில் மேலும் சில உதாரணங்களைப் பார்ப்போம். பதினெட்டாம் நாள் போரின் முடிவில் துரியோதனன் கொல்லப்படுகிறான். அவனைக் கொன்ற வீமனை ஒரு தடவை பார்க்க வேண்டுமென துரியோதனின் தந்தையான திருதராட்டிரன் விரும்புகிறான். , கண்தெரியாத அவன் வீமனைக் கண்டு மகனே..! வீமா வந்துவிட்டாயா..?, என்று கேட்கிறான். வீமனும் வந்துவிட்டேன் பெரியப்பா என்கிறான். , என் மகனை கொன்று நீதியைக் காத்த உன்னைக் கட்டித்தழுவி ஆனந்தமடைய விரும்புகிறேன் அருகில் வா..! , என்று அழைக்கிறான்.

அவன் நோக்கம் அறியாது அருகில் போகிறான் வீமன், கண்ணன் அவனைத் தடுத்துவிட்டு திருதராட்டிரனிடம் ஓர் இரும்புத் தூணைக் காட்டுகிறான். அவ்வளவுதான் இரும்புத்தூணைக் கட்டிப்பிடித்த திருதராட்டிரன் தன் பலம் கொண்ட மட்டும் அதை அழுத்துகிறான்.., என் மகனைக் கொன்ற பாவி.., என்றபடி வேக வேகமாக அழுத்துகிறான். அந்த இரும்புத் தூண் உடைந்து துண்டு துண்டாகப் பறக்கிறது. வீமன் மட்டும் அகப்பட்டிருந்தால் அவன் அக்கணமே பஸ்பமாகியிருப்பான். கண்ணற்ற கபோதியான திருதராட்டிரன் நிலை தடுமாறி போரின் விதியை மீறிய இடம் இதுவாகும்.

தொடர்ச்சி 32ஆம் பக்கம்

HomeLife/Future Realty Inc. Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

Jeeva Pearl Ratnarajah , Dep-in-Acc
Sales Representative

Cell: - 416.722.5338 Bus: 905.201.9977
Fax: 905.201.9229

•Independently owned and operated

**Brimley / Eglinton**
Condo. Apartment
2 bedroom with family room, Many upgrades
Close to bank, mall
many parking

**Keele / Finch**
Business for sale
நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் வியாபார தாபனம் விற்பனைக்குண்டு
Asking price $42,000 + Stock

**Brimley / Ellesmere**
Condo. Town House
3 story , 3 bedrooms
3 washrooms
Close to Scarborough Town Center
All amenities

**Brimley / Eglinton**
Lease for Business
2000 Sq. feet



**Jane / Finch**
Business For sale
Asking $55,000 + stock

# அயர்லாந்தின் அதிரடி...

28ஆம் பக்கத்தொடர்ச்சி

யுவராஜ் சிங் (அயர்லாந்து ஆட்டம் நீங்கலாக), யூசுப் பதான் ஆகியோரும் எதிர்பார்த்தபடி விக்கெட்டுகளை வீழ்த்த முடியவில்லை.



ஜாகீர் கான் தவிர மற்ற வேகப் பந்துவீச்சாளர்களும் எதிர்பார்த்த அளவு பிரகாசிக்காத நிலையில், இந்திய அணி கோப்பையை வெல்ல வேண்டுமானால், சுழற் பந்துவீச்சாளர்களையே நம்பி உள்ளது.

அற்புதமான சுழற் பந்துவீச்சு பாரம்பரியத்துக்கு சொந்தமான இந்திய அணியின் இப்போதைய சுழற் பந்துவீச்சாளர்கள் இனிவரும் ஆட்டங்களிலாவது தங்கள் திறமையை நிரூபிக்க வேண்டும் என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பு.

புதிய சாதனையுடன் 139 ஓட்டங்களால் ஸிம்பாப்வேயை வென்றது இலங்கை ஸிம்பாப்வே அணியுடனான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 139 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது. திலகரட்ன தில்ஷான் துடுப்பாட்டத்திலும் பந்துவீச்சிலும் பிரகாசித்து இலங்கை அணியின் வெற்றியை இலகுவாக்கினார். கண்டி பள்ளேகல அரங்கில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 327 ஓட்டங்களைக் குவித்தது. இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான திலகரட்ன தில்ஷான் உபுல் தரங்க ஆகியோர் முதல் விக்கெட்டுக்காக 282 ஓட்டங்களைக் குவித்து உலகக் கிண்ணப் போட்டிகளில் முதல் விக்கெட்டுக்கான புதிய சாதனையை படைத்தனர். தில்ஷான் 131 பந்துவீச்சுகளில் ஒரு சிக்ஸர், 16 பௌண்டரிகள் உட்பட 144 ஓட்டங்களைப் பெற்றார். உபுல் தரங்க 141 பந்துகளில் 17 பௌண்டரிகள் உட்பட 133 ஓட்டங்களைப் பெற்றார். இவ்விருவரும் 45 ஆவது ஓவர்வரை துடுப்பெடுத்தாடியமை குறிப்பிடத்தக்கது. ஸிம்பாப்வே பந்துவீச்சாளர்களில் கிறிஸ் எம்போபு 62 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸிம்பாப்வே அணியிலும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான பிரெண்டன் டெய்லரும் ரெஜிஸ் சகப்வாவும் சிறப்பாக துடுப்பெடுத்தாடினர். இவர்கள் முதல் விக்கெட்டுக்காக 20 ஆவது ஓவரில் 116 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சகப்வாவின் விக்கெட்டை முரளிதரன் தகர்த்தார். டெய்லர் 80 ஓட்டங்களைப் பெற்றார். அதன்பின் ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். 39 ஓவர்களில் 188 ஓட்டங்களுடன் ஸிம்பாப்வே அணி சகல விக்கெட்டுகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் போலவே பந்துவீச்சிலும் திலகரட்ன ஆச்சரியமளிக்கும் வகையில் பிரகாசித்தார். அவர் 3 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

முத்தையா முரளிதரன் 34 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் ஏஞ்சலோ மத்திவ்ஸ் 29 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இலங்கை மண்ணில் நடைபெற்ற ஒருநாள் சர்வதேச போட்டிகளில் முத்தையா முரளிதரன் தனது 150 ஆவது விக்கெட்டையும் இப்போட்டியில் வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. ஒருநாள் போட்டிகளில் மொத்தமாக அவர் 526 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

பங்களாதேஷ் அதிரடி ஆட்டம் : இங்கிலாந்து அதிர்ச்சி தோல்வி இங்கிலாந்து அணியுடனான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணி 2 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. பங்களாதேஷ் சிட்டகொங் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 49.4 ஓவர்களில் 225 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. ஜொனதன் ட்ரொட் 67 ஓட்டங்களையும் இயொய்ன் மோர்கன் 63 ஓட்டங்களையும் பெற்றனர்.

பங்களாதேஷ் பந்துவீச்சாளர்களில் நயீம் இஸ்லாம் அப்துர் ரஸாக், 'கீப் அல் ஹசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 49 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

பங்களாதேஷ் அணி 40 ஆவது ஓவரில் 8 ஆவது விக்கெட்டை 169 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இழந்தது. எனினும் முஹ்மதுல்லாவும் 10 ஆவது வரிசை வீரர் சபியுல் இஸ்லாமும் சிறப்பாக துடுப்பெடுத்தாடி பங்களாதேஷ் அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றனர். சபியுல் இஸ்லாம் 24 பந்துகளில் ஒரு சிக்ஸர் 4 பௌண்டரிகள் உட்பட ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களைப் பெற்றார்.

# மரணம் விதி...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

அடுத்த உதாரணம். தன்னுடைய தந்தையான துரோணரை கொன்ற பாண்டவரை பழிவாங்க சாகாவரம் பெற்ற அசுவத்தாமன் இறைவன் கொடுத்த வாளுடன் வருகிறான். அந்த உருத்திரவாள் கையில் இருந்தால் அவனை யாருமே வெல்ல முடியாது. அவன் ஆவேசமாக வருது தெரிந்த கண்ணன் பாண்டவர்களை ஒரு மீன்பிடிப்போர் குப்பத்தில் மறைத்து விடுவான். ஆனால் அசுவத்தாமனோ, பாண்டவர்களின் வம்சத்தையே வாழ விடமாட்டேன் என்று சபதமெடுத்து, அவர்கள் குடும்பத்தில் எஞ்சியிருந்த அனைவரையுமே கொல்கிறான். கருவிலிருந்த குழந்தைகளையும் கொன்றொழித்தான். போரின் வெற்றி பாண்டவருக்கு எதையும் கொடுக்கவில்லை. அவர்களுடைய வம்சத்தையே பரிநாசமாக்கியது. கருவில் இருந்த குழந்தைகளையும் அழித்து போரின் விதிகள் அனைத்தையும் மீறினான் அசுவத்தாமன்.

மூன்றாவது சம்பவம், இறுதியாக தர்மன் சுவர்க்கம் செல்லும் வழியில் நரகக் குழி ஒன்றில் இருந்து பெரும் அழு குரல் கேட்கிறது. யாரென்று எட்டிப் பார்க்கிறான். அங்கே துரியோதனன் பாம்புகளாலும் பூச்சிகளாலும் கடிக்கப்பட்டு துடிதுடித்தபடி அலறுவது தெரிகிறது.

அண்ணா காப்பாற்று.., என்று கதறுகிறான். அவன் மீது இரக்கம் கொண்டு தன் தோளில் இருந்த அங்கவஸ்திரத்தை எடுத்து குழிக்குள் விடுகிறான் தர்மன். இதைப்பற்றி ஏறி மேலே வா தம்பி ..! என்கிறான். சால்வையைப் பற்றிய துரியோதனன் ஒரு கணம் யோசிக்கிறான். தான் தப்புவதைவிட அதே குழிக்குள் தர்மனையும் இழுத்து விழுத்திவிட அவன் வஞ்சக மனம் உந்துகிறது. சடக்கென சால்வையை உன்னி இழுக்கிறான். தர்மன் பாதாளம் நோக்கி சரிகிறான். ஒரே நொடி கண்ணன் தர்மனைக் கட்டிப்பிடித்து அந்த ஆபத்திலிருந்து காப்பாற்றுவான். போரின் குரூரமானது திருந்துவோம் என்ற எண்ணத்தை ஒருவனுக்குக் கொடுக்காது என்பது இச்சம்பவத்தால் உணர்த்தப்படும்.

மேலே சொல்லப்பட்ட ஐந்து சம்பவங்களையும் மனதில் போட்டு படித்துப் பாருங்கள். புதுமாத்தளன் போர் எவ்வளவு பெரிய எதிர்கால ஆபத்துக்களை ஏற்படுத்தக் கூடிய போர் என்பதை உணர்ந்து கொள்வீர்கள். இப்படியான நேரத்தில் அரசனும் அடிதலை மாறுவான். அண்ணனும் தம்பியும் ஆளையாள் குழிபறிப்பர். யார் நல்லவன், யார் கெட்டவன் என்பதே தெரியாமல் தடுமாற நேரும். இதை பாரதப்போர் முடிந்த பிறகு நடைபெற்ற மேற்கண்ட மூன்று நிகழ்வுகளும் அற்புதமாக உணர்த்தும்.

புதுமாத்தளன் விதிகளை மீறிய போர். அதன் எதிர் காலத்தை இத்தகைய கதைகள் மூலம் உணர்ந்து விழிப்படைய வேண்டும். அதைவிடுத்து அதற்காக அழுவோர் அதைவிட பெரும் அவலத்தில் சிக்க நேரிடும்.

கண்ணனைப் போல எச்சரிக்கை எல்லோருக்கும் அவசியம்.

- நன்றி: அலைகள்




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

www.vlambaram.com

# அடையாளங்களை கடந்துசெல்லும் மனிதர்கள்

## Jaffa (Palestine-Israel), Lost Paradise (Palestine-Israel), Berlin Wall (Germany) ஆகிய படங்களை

**தூறல்**

**வானரன்**

## Jaffa

அழகான காலைப் பொழுது. ரெல்அவிவ் நகரின் அங்கமாக மாறிவிட்ட ஜபா நகரின் உள்ளார்ந்த பகுதி. அங்கும் இங்குமாக சில மனிதர்கள் நடமாடிக் கொண்டிருக் கின்றார்கள். ஹசன் தனது மகனுடன் ஒரு இஸ்ரேலிய யூதரால் நடத்தப்படும் மோட்டார் கார் திருத்தும் வேலையகத்துக்கு வேலைக்குச் செல்கின்றார். முதலாளி Reuven Wolf . இவருக்கு மதிநுட்பத்துடன் திருத்தகத்தை நடத்தும் திறமை உண்டு. இவரது மனைவி Ossi. இவர் சற்று குழப்பமானவர். இவர்களுக்கு ஒரு மகனும் மகளும் உண்டு. இவர்களது வீடு திருத்தகத்திற்கு மேலே உண்டு. மகனும் (Meir) மகளும் (மாலி) அங்கே வேலை செய்கின்றனர். Meir ஒரு முரட்டுத் தன்மை கொண்டவர். மாலிக்கும் இவர்களது திருத்தகத்தில் வேலை பார்க்கும் ஹசனின் மகனுக்கும் காதல். இவர்களது காதல் நீண்ட காலமாகத் தொடர்கின்றது.

முதலாளி Reuven Wolf குடும்பம் இரவு உணவு உண்ணும் பொழுது ஒவ்வொரு தடவையும் ஏதாவது பிரச்சினைகள் ஏற்படும். இதற்கு இருவர் காரணமாக இருப்பார்கள். ஒருவர் வோல்பின் மனைவி, மற்றவர் மகன். மற்றொரு மாலை உணவுப் பரிமாற்றத்தில் தாயுக்கும் மகனுக்கும் சண்டை. இறுதியில் மகன் வீட்டை விட்டு வெளியேற்றப்படு கின்றார். மகன் வேறெங்கும் செல்லவில்லை. திருத்தகத்தில் தங்குகின்றார். இதற்கிடையில் ஹசனின் மகன் மாலியை பதிவுத் திருமணம் செய்ய ஏற்பாடுகள் செய்கின்றார். மாலி கர்ப்பமாவும் இருக்கின்றார். காலையில் வேலைக்கு வந்த ஹசனுக்கும் மகனுக்கும் Meir ஆல் தலைவலி. ஒரு கட்டத்தில் ஹசனின் மகனுக்கும் Meir ம் இடையில் ஏற்பட்ட சண்டையில் Meir தலையில் அடிபட்டு இறந்துவிடுகின்றார். இது ஒரு விபத்து எனினும் ஹசனின் மகன் ஒன்பது வருடங்கள் சிறையில் செலவிடுகின்றார். மாலி தனது கர்ப்பத்தை கரைக்க விரும்பியும் அவரால் முடியவில்லை. Wolf குடும்பம் Meir ஐ ஒரு முக்கிய செயின்ட் போல் கருதுகின்றார்கள். வருடாவருடம் அவரது நினைவு தினத்தை சிறப்பாக கொண்டாடுகின்றார்கள். மாலியும் அவளது மகளும் மற்றொரு உலகத்தில் சிறப்பாக வலம் வருகின்றார்கள். சிறையில் இருந்து திரும்பும் ஹசனை மாலி சந்திக்கின்றார். இச்சந்திப்பு சில நிமிடங்களே நீடிக்கின்றது. தங்களுக்கு ஒரு மகள் உள்ளாள் என்பதை மட்டும் செய்தியாக குறிப்பிட்டு, தந்தை இறந்து விட்டதாக மகளுக்கு தெரிவித்ததாகவும் குறிப்பிடுகின்றார்.

இச் சந்திப்பில் மாலி சில முக்கியமான முடிவுகளை எடுக்கின்றார். தனது பெற்றோருக்கு மாலியின் தந்தை யார் என்ற உண்மையை தெரிவித்து கடிதம் எழுதிவிட்டு வீட்டை விட்டு மகளுடன் வெளியேறி உறவி னர் வீட்டில்



தங்குகின்றார். பெற்றோர் மீள வருமாறு கேட்டும் மறுத்துவிடுகின்றார். ஒரு இருண்ட மாலைப் பொழுது மகளை அழைத்துச் சென்று தந்தையிடம் (ஹசனின் மகன்) காட்டுகின்றாள். ஒவ்வொரும் வீதி விளக்கொளியில் ஒருவரையொருவர் பார்த்த வண்ணமுள்ளனர்.

இப்படம் இரு வேறு மதத்தை சேர்ந்தவர்கள் காதலிப்பதை கருவாகக் கொண்டிருந்தாலும் இதன் பின்னணியில் சில முக்கியமான விடயங்கள் உள்ளன.

இவ் விரு மதங்களும் நீண்ட கால யுத்த வரலாறைக் கொண்டுள்ளன. பாலஸ்தீனியர் இன்னமும் அடிமைத்தனமாக நடத்தப்படு கின்றார்கள் என்பதையும் படம் சுட்டிக் காட்டுகின்றது. முதலாளி யூதர். தொழிலாளி பாலஸ்தீனியர். Meir தொழிலாளிகளை அடிமைகள் போல் நடத்துகின்றார். ஜபா ஆரம்ப காலத்தில் ஒரு பாலஸ்தீனிய நகரமாக இருந்தது. பின்னாட்களில் இது ரெல் அவிவ்வுடன் இணைக்கப்பட்டு இஸ்ரேலிய நகரமாக்கப்பட்டது. மாலியின் மகளையும் ஒரு யூத பெண்ணாகவே வளர்க்க மாலியின் பெற்றோருக்கு விருப்பம். அதனை மாலி உடைத் தெறிகின்றார். இக்குழந்தை ஒரு பாலஸ்தீனியருமல்ல யூதருமல்ல. அக்குழந்தை தனது அடையாள ங்களுடன் சுதந்திரமாக வாழ இடம் கிடைக்குமா?

எமது சமூகத்தில் கூட சிங்கள, தமிழ் கலப்பில் பிள்ளைகள் ஒன்றை சார்ந்து வாழவேண்டி நேர்கின்றது. இப் படம் எம்மிடம் பல வலிகளை வேதனைகளுடன் விட்டுச் சென்றுள்ளது. தொடரும் யுத்தத்தில் அடிமையாக்கப்படும் பாலஸ்தீனியர்கள், அவர்களது பொருளாதார வீழ்ச்சி, அடையாள இழப்பு போன்ற பல விடயங்கள் எம் கண்முண்ணே அந்நியமாக்கப்பட்டுள்ளன. நாமும் ஒரு வகையில் அந்நியமாக்கப் பட்டவர்களே. படத்தின் இயக்குனர் ஒரு பேட்டியில் இப் படத்தின் வெளிப்பாடாக மேற்குறிப்பிட்ட கேள்விகளை எழுப்பியுள்ளார். Keren Yedaya என்ற பெண் இயக்குனரின் இப் படம் பல விருதுகளைப் பெற்றுள்ளது.

இதன் தொடர்ச்சியாக பல படங்கள் இது போன்ற கருத்துக்களை வெவ்வேறு தளத்தில் முன்வைத்துள்ளன. Lost Paradise என்ற குறும் படம் மற்றொரு தளத்தில் எமது பார்வைகளை விரிவடை-

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

APARTMENTS FOR RENT



$250 Move In Bonus

Best Building in Scarborough!
Clean, family building, FREE parking.
Close to schools, bus stop, Tamil store in building.

Pl. Call: 416.264.2818

# அடையாளங்களை...

33ஆம் பக்கத்தொடர்ச்சி

டயச் செய்கின்றது. இப்படத்தின் இயக்குனர்கள் Mihal Brezis & Oded Binnun. இவர்களது பல குறும்படங்கள் சர்வதேச விழாக்களில் திரையிடப்பட்டுள்ளன. நகரின் ஒரு சாதாரண ஹொட்டலில் ஒரு ஆணும் பெண்ணும் உறவு கொள்கின்றனர். குளோசப்பில் இவர்களது முகங்கள் மாத்திரம் காட்டப்படுகின்றன. சிறிது நேரத்தில் உடைகளை அணிந்து கொள்கின்றனர். பெண் அதன் பின்னர் பர்தாவை அணிந்து கொள்கின்றார். ஆண் பெண் விடுதியை விட்டுச் சென்றவுடன் தாங்கள் உறவு கொண்டபின் அவர்களுடன் உடை அணிந்த தான் கட்டிலில் இருப்பதாக நினைக்கின்றார். அத்துடன் படம் முடிவடைகின்றது. சில வருடங்களுக்கு முன்னால் பொன் சுதாவின் இயக்கத்தில் மறைபொருள் என்ற குறும்படம் கனடிய தமிழ்த் திரைப்படவிழாவில் திரையிடப்பட்டது. இப் படத்தில் ஒரு பெண் தனது உடைகள் ஒவ்வொன்றையும் அழகுணர்வுடன் அணி கின்றார். பின்னர் இவர் தனது உடைகளை மறைக்கும் கறுப்பு நிற நீள அங்கியை அணிகின்றார். முகத்தை மறைக்க பர்தா அணிகின்றார். இப் படம் இஸ்லாம் பெண்களுக்கு எதிராக செயற்படும் அநீதியை சுட்டிக்காட்டுவதாக அமைந்தது என்ற கருத்து பெரும்பால-ானவர்களால் முன் வைக்கப்பட்டது. இதனை மீறி இயக்குனர் ஓர் இந்து, எனவே இது அவரது மதவிரோதத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது என்ற கருத்தில் உள்ள நியாயமான தன்மையையும் நிராகரிக்க முடியாதுள்ளது. இஸ்லாம் மதத்துக்கு எதிராக தொடர்ந்து தொடுக்கப்படும் அழுத்தத்தின் விளைவே அவர்கள் மதரீதியான அடையாளங்களை



அணிவது என்ற கருத்து பல முற்போக்காளர்களால் முன்வைக்கப் படுகின்றது. மித்திரா சென்னின் Just a little dot என்ற குறும் படம் ரொரண்ரோ பாடசாலையில் பொட்டு அணிவதற்கு எதிராக இனவாத கருத்துக்கள் எழுப்பப்பட்டதை தொடர்ந்து அப் பாடசாலையில் படிக்கும் அனைத்து பெண்களும் பொட்டணிந்து எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். பொட்டணிவது ஒரு பெண் ஒடுக்கு முறையின் அம்சம் என்ற கருத்தக்கப்பால் ஒரு இனவாதத்துக்கு எதிரான குரலாக மிளிர்கின்றது.

Lost Paradiseல் இயக்குனர்கள் கூற முன்வருவது என்ன? பர்தா அணிந்த பெண் ஆணின் மனைவியா? அப்படியாயின் ஏன் ஹொட்டேலுக்கு வரவேண்டும்? பாலியல் தொழிலாளியா? அக் கருத்தாயிருப்பின் பல பிரச்சினைகளை இப்படம் எழுப்புகின்றது. இஸ்லாத்துக்கு எதிரான கருத்து படிமமாக உள்ளது. இவர்கள் காதலர் என்று கருதினால் ஆணின் அடையாளம் மீண்டும் கேள்வி கேட்க வைக்கின்றது. படத்தில் இவர்களது நெருக்கம் நடந்து கொள்ளும் முறை இவர்கள் காதலர்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றது. ஆண் தாடியுடன் காட்டப்படுவதால் அது ஒரு யூத ஆணாகவே இருக்க வேண்டும். முஸ்லீம் ஆணாகவும் இருக்கலாம். இங்கு ஆணின் அடையாளம் படத்தை வெவ்வேறு தளங்களுக்கு இட்டுச் செல்கின்றன.

இந்த மத-கலாச்சார-சமூக விழுமியங்களுக்கு அப்பால் ஆணும் பெண்ணும் நிர்வாணமாக இருக்கும் பொழுது அவர்கள் சமமானவர்கள். உடை-களை அணியும் பொழுது அவர்களது எல்லைகள், அடையாளங்கள் அவர்களை சுமக்கின்றன. படத்தின் ஆரம்பத்தில் காட்டப்படும் வாசகங்கள்

"And they were both naked, the Man and the Woman...." "And were not ashamed"
book of genesis 2:25

2. மரணத்தின் பின் நாம் யார்? என்பது எம்முன் உள்ள விடைதெரியாத கேள்வி. மரணமான மனைவியை எரித்த பின் அந்த வயது முதிர்ந்தவர் முகம் பல கதைகளைப் பேசுகின்றன. மனைவியின் உடைகள், பொருட்களை ஒதுக்கும் பொழுது ஒரு கல் கிடைக்கின்றது. அதை அப்படியே வைத்து விட்டு வீட்டின் முன் உள்ள உடைந்து நொருங்கிய பேர்லின் சுவரை நோக்கி செல்கின்றார். சுவரின் இரு புறத்துச் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். முதியவர் எதனையும் பொருட்படுத்தாது மதிலை மீள கட்டுகின்றார். முதல் நாள் பலர் ஏன் என முதியவரை கேள்வி கேட்க அவர் விடையெதுவும் கூறவில்லை. மௌனமாக மறுநாளும் தொடர்கின்றார். இப்பொழுது மதிலின் ஒரு புறத்தில் உள்ளவர்கள் மதில் கட்டுவதை ஆதரிக்கின்றார்கள். காரணம் மேற்கு ஜேர்மனிக் கரையில் பல நாட்டு அகதிகள் வாழ்கின்றனர். அவர்களது குழந்தைகள் தங்களது குழந்தைகளுடன் விளையாடுவதை இது தடுக்கும் என்பது அவர்களது கருத்து. இரு தரப்பினருக்கும் வாய்த் தகராறும் ஏற்படுகின்றது. ஒரு வகையில் எமது



"வேலிச் சண்டை இங்கு அரங்கேறுகின்றது". முதியவர் பைத்தியக்காரன் என்கின்றார்கள். சிறுவர்கள் முதியவருக்கு உதவுகின்றார்கள். முதியவர் தொடர்கின்றார். அவரது மௌனத்தை எவராலும் கலைக்க முடியவில்லை. பொலிஸார் வருகின்றனர். அவர்கள் முதியவருக்கு ஒரு நாள் அவகாசம் கொடுத்து விட்டுச் செல்கின்றனர். முதியவர் அசையவில்லை. மறு நாள் முதியவர் கட்டிய மதிலில் ஒரு சிறு ஓட்டை உள்ளது. தனது மனைவி விட்டுச் சென்ற கல்லை அவ் ஓட்டையில் வைக்கின்றார். சரியாக பொருந்துகின்றது. சிமென்டால் பூசி விட்டு செல்கின்றார். அவரது முகத்தில் ஒரு அபரிமிதமான புன்னகை. அக் கல் அவர்களது திருமண நாள் நினைவு பரிசு.

பொலிஸார் வருகின்றனர். மதில் உடைக்கப்படும் சத்தம் ஒலிக்கின்றது.

உடைந்த மதிலின் பின்னால் உள்ள உடையாத முகங்களை படம் பதிவு செய்துள்ளது. கிழக்கு- மேற்கு, அகதிகள்-பிரசைகள், வெள்ளை -கறுப்பு, பணம்-பாதாளம் அனைத்தையும் படம் காட்டுகின்றது. Estes Avenue முதியவராக சிறப்பாக நடித்துள்ளார். Paul Cotter பிரித்தானியாவில் கல்வி கற்றவர். இவரது இயக்கத்தில் இப்படம் வெளிவந்துள்ளது. முதியவர் தனது மனைவியின் காதலை வெளிப்படுத்த மதிலைக் கட்டுகின்றார். சுற்றியுள்ளவர்கள் மத்தியில் புரிந்துணர்வு அன்பு என்பன பல பிரிவினைகளின் பின்னர் தீர்மானிக்கப் படும் பொருளாக உள்ளது. இயக்குனர் இப்படம் பற்றி பின்வருமாறு கூறுகின்றார்.

This introduced me to the topic of xenophobia, fear of the stranger, fear of the unknown. Europe is dealing with this a lot right now; Eastern Europeans migrating west, refugees arriving from Africa. There has been a large influx of "unknowns" into our communities and the tendency has been to keep these people separate. These prejudices come to the fore when Werner builds his wall.

படம் வெறும் 12 நிமிடங்களைக் கொண்டது.

இதன் தொடர்ச்சியை பிறிதொரு இதழில் பார்ப்போம்.

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# குவாண்ரம் பிறந்த கதை நுண்ணுலகியல் 06

சென்ற தடவையில் டிமோக்கிரசிஸ் எவ்விதம் அணு என்ற பதம் பற்றிய அறிவினைப் பெற்றிருக்கலாம் என்ற ஐயப்பாட்டினைக் கேட்டிருந்தேன். அவர் தமது அணு என்பதற்குக் கொடுத்த விளக்கம் மிகத் தெளிவானதுதான். எவருமே அவ்வித சிந்தனையை தம்மியல்பிலேயே எடுத்திருக்கலாம்தான். ஆனாலும் சிலரது ஐயம் பாபிலோனியர்களிடமும், தொடர்ந்து சுமேரியர்களிடமும் சென்றது. விக்கிரமாதித்தனின் கதைக்குள் கதை போல் அமைந்தாலும், எம்மையும் சிந்திக்க வைக்கக் கூடியது என்பதால் இதனையும் சற்றுப் பார்ப்போம்.

டிமோக்கிரசிஸ் தன்காலத்தில் பல வித்தியாசமான கருத்துக்களைபேரண்டம் பற்றியும், மற்றும் சடங்கள் பற்றியும் கூறியிருந்தார். அந்நாட்களில் அதிகம்



கவனிக்கப்படவில்லையாயினும் இந்நாட்களில் அவரது கருத்துக்கள் பெரும்பாலும் சரியானவை போல இருப்பதை ஆச்சரியத்துடன் அவதானித்த ஆய்வாளர்கள் இவர் எவ்விதம் இக்கருத்துக்களை, அல்லது அறிவினைப் பெற்றிருக்கக் கூடும் எனப் பார்த்த போது

## பாபிலோனியர்களும் சுமேரியரும்

பாபிலோனியர்களும், சுமேரியர்களும் தென்பட்டார்கள். இவ்விரண்டு இனத்தவர்களும் இன்று முற்றாகவே இல்லை. ஆனாலும் இற்றைக்கு மூவாயிரம் நாலாயிரம் ஆண்டு முன்பதாக பாரசீகப் பகுதியில் சிறப்பான நாகரிகத்துடன் இவர்கள் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். கிறிஸ்தவர்களின் விவிலியத்தில், பழைய ஏற்பாட்டில் இவர்களைப் பற்றிய அதிக குறிப்புகள் உள்ளன. ஒருவகையில் யூதர்கள் கூட சுமேரியனான ஆபிரகாமில் இருந்துதான் வந்தார்கள் என நம்புவதற்கும் இடமுண்டு. கிரேக்கர்கள் பெரும்பாலும் தமது அறிவினை பாபிலோனியர்களிடம் இருந்தே பெற்றுக் கொண்டார்கள் என்கின்றார்கள். ஆனாலும் தம்மால் விளங்கிக் கொள்ள முடியாதனவற்றை, அல்லது தமது வழக்கிற்கு பொருந்தாதனவற்றைத் தவிர்த்து விட்டார்கள் என அவ்வாய்வாளர்கள் கூறுகின்றார்கள். எடுத்துக் காட்டாக, பாபிலேனியர்கள் தமது கணிதத்தில் பூச்சியத்தை (சுழியத்தை) பாவித்திருந்தார்கள். இதனைக் கிரேக்கர்கள் அறிந்து கொண்ட போதிலும் சுழியம் அவர்களது எண் தட்டத்தில் இல்லாது இருந்ததினால் அதனைக் கருதாது விட்டுவிட்டார்கள் என்கின்றார்கள், நவீன ஆய்வாளர்கள். அதேபோல பைதகரசின் தேற்றத்தினை பாபிலோனியர்கள் தங்களது அன்றாட வாழ்க்கையில் சர்வ சாதாரணமாகப் பாவித்திருக்கின்றார்கள். ஆனால் செங்கோண முக்கோணத்தின் பக்கங்களுக்கான தொடர்பைத் தரும் பைதகரசின் தேற்றத்தின் பெரும் கிரேக்கரான பைதகரசையே போய்ச் சேர்ந்தது. பைதகரசின் தேற்றத்திற்கான விளக்கத்தைக் கூறிடும் சூத்திரம் தமிழில் இருந்திருக்கின்றது எனக் கூறுகின்றார்கள். அதாவது செங்கோண முக்கோணியின் பக்கங்களுக்கான தொடர்பைத் தரும் தேற்றத்தின் சமன்பாட்டிற்கு ஒத்ததான சூத்திரத்தையும் தமிழில் காணலாம் என்கின்றார்கள். 'ஓடிய நீளம் தன்னை, ஓரொட்டுக் கூற தாக்கி, கூறதில் ஒன்றைத் தள்ளி குன்றதில் பாதி சேர்த்தால், நீடிய கர்ணம் தானே' என்ற பாடல் பைதகரசின் தேற்றத்தினைத்தான் கூறுகின்றது என்பர் நம்மறிஞர்கள். இதன் விளக்கம்தான் ஒருவேளை பைதகரசன் ஆனாலும்




- கனி -
416.261.1348
leptons@hotmail.ca


தொடர்ச்சி 39ம் பக்கம்

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பேரண்டம் - 85**




# தமிழர் மத்தியில் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது




நிரு Niru நிரு பிராண்ட்

## நிரு பிராண்ட் தயாரிப்புக்களே

# உனது வாக்குறுதிகளை நிறைவேற்று

என்னை எதிர்கொள்ளப்போகும் மிகப்பெரிய சவால் என்னை இன்னும் பலமுள்ளவராக்கும் என்பது எனக்கு நன்கு புரிந்தபடியால் நான் இப்போ ஒருவித அச்சமுமின்றி விச்ராந்தியாயிருக்கிறேன்.

ஒரு வாக்குறுதி என்றால் அது வாக்குறுதிதான் என்பது உனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் நீ இதுவரை கொடுத்த எத்தனை வாக்குறுதிகளை நிறைவேற்றாது உடைத்தெறிந்திருக்கிறாய் என்று சற்று பார்ப்போமா? எமக்களிக்கும் வாக்குறுதிகளை இறைவன் நிச்சயம் நிறைவேற்றுவார் எனும் சந்தேகம் எமக்கு வருவது ஏன் என்பது இவ்வாறு நாம் சுயபரிசீலனை செய்யும் போது எமக்குப் புலப்படும்.

இனிமேல் அதைச் செய்யமாட்டேன் என வாக்குறுதி கொடுத்துவிட்டு, எத்தனைமுறை அதை மீறிச் செயற்பட்டிருக்கிறாய்? இதைச்செய்வேன் என வாக்குறுதி அளித்துவிட்டு எத்தனை தடவை அதைச் செய்யாமல் இருந்திருக்கிறாய்? உனது வாக்குறுதியை நம்பி, நீ கட்டாயம் உதவப்போகிறாய் எனக் காத்திருந்த எத்தனை நபர்களுக்கு ஒன்றுமே செய்யாது அவர்களை ஏமாற்றியிருக்கிறாய்? பிறர் உன்னை மதித்துப் பாராட்ட வேண்டும் என்பதற்காக எத்தனை வாக்குறுதிகளை வாய்ப்பேச்சில் மட்டும் செய்திருக்கிறாய்? அல்லது உனக்குப் பிரச்சனை




தருபவரிடமிருந்து தப்பித்துக்கொள்ள எத்தனை வாக்குறுதிகளை உதட்டளவில் அள்ளி வீசியிருக்கிறாய்? நீ கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு அத்தியாவசியமான உடல் வளம், மன உறுதி, தைரியம், சக்தி போன்றவை உன்னிடம் போதிய அளவு இல்லை என்பது உனக்கு நன்கு தெரிந்திருந்தும் கட்டாயம் அந்த வேலையை முடித்துத் தருகிறேன் எனப் போலியாக நடித்திருக்கிறாய்? கடவுள் உனக்குத் தந்த வாக்குறுதியை நிச்சயம் நிறைவேற்றுவார் என நீ எதிர்பார்த்திருக்கும் போது உறவுகளுக்கு நீ நிறைவேற்றாத உனது வாக்குறுதிகளைப் பற்றி நினைப்பதுண்டா?

நல்லவேளை! பரந்தாமன் உன்னைப் போன்றவர் இல்லை! நல்லவேளை! ஆண்டவன் தனது வார்த்தைகளை மறக்கமாட்டார். 'நிச்சயம் நிறை வேற்றுவேன்' என்று உத்தரவாதமளித்த தனது வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட மாட்டார். பிறரின் நன்மதிப்பையோ பாராட்டுதல்களையோ பெறுவதற்காக என்றே இறைவன் ஒருபோதும் செயல்படுவதில்லை. ஒன்றே ஒன்றிற்காக மட்டுமே இறைவன் உனக்குமேல் தனது ஆசீர்வாதங்களை வர்ஷிக்கிறார். உனது வாக்குறுதிகளை நீ நிறைவேற்றுவதற்கு அவசியமான சகலதையும் நான் உனக்குத் தருவேன். எங்கும், எப்போதும் உன்கூடத் துணையிருந்து உனது வாக்குறுதிகளை நீ நிறைவேற்ற உனக்கு உதவிசெய்வேன் எனும் தனது வாக்கை உனக்கு ஞாபகப்படுத்துவது தான் அவரது ஒரே நோக்கம். நல்லவேளை! உனது வாக்குறுதிகளை நிறைவேற்ற பரந்தாமனின் துணை உனக்கிருப்பது, நல்லவேளை உனது வாக்குறுதிகளை நீ நிறைவேற்றாத போது, அப்பரம் பொருள் சினந்து உன்னைக் கடிந்து கொள்வதில்லை. ஒரு வாக்குறுதி எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பது உனக்கு இன்றுவரை புரியாமல் இருந்திருக்கலாம். நீ செய்யும் வாக்குறுதிகள் அனைத்தையும் பூரணமாக நிறைவேற்ற உனக்கு ஆண்டவனின் உதவியும் ஒத்தாசையும் எப்போதும் தவறாது கிடைக்கும் எனும் உண்மையை விழிப்புணர்வுடன் இன்று புரிந்து கொள்.

**என் வாழ்வில் நான் செய்யும் வாக்குறுதிகள் அனைத்தையும் முழுமையாக நிறைவேற்றிட இறைவனின் உதவியும் ஒத்துழைப்பும் எனக்கு எப்போதும் கிடைக்கும் என்பதை இப்போ உளம் நிறைந்த நன்றியுடன் புரிந்து கொள்கிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 186

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி



ஓம் முத்துமாரி அம்மன் ஜோதிடம்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்





இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பிரபல ஜோதிட வல்லுனர்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்
மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சுவிஸ், நியுசிலாந்து, இலங்கை, அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார்.

இவர் கைரேகை, சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசிகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்திருஸ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.



Tel: 647-707-8671 / 416-829-4004
5215 Finch Ave., East, Unit # 152 Scarborough, Ontario M1S 0C2 (GTA Square Mall)
Open 7 Days Time: 10:00 Am To 8:00 Pm He can tell you Tamil, Hindi, English, Telugu & Other indian languages

# புரட்சி... சில குறிப்புகள்...

ஊர் உலகம் எல்லாம் புரட்சி பற்றித்தான் பேச்சு அடிபடுகிறது! அண்மையில் ஒரு பத்திரிகையில் வந்திருந்த ஒரு கேலிச் சித்திரத்தில் Stephen Harper பக்கத்தில் ஒருவர் நடந்து கொண்டு "உலகெங்கும் மக்கள் புரட்சி ஆரம்பிக்கின்றது" என்று சொல்ல, Stephen Harper பதிலாக "இங்கும் அப்படி ஏதாவது ஆரம்பித்து விடுமா என்ன?" என்று கேட்கிறார்!

புரட்சியில் ஒரு கவிதை இருக்கிறது! அதை விட என்னென்ன இருக்கிறது என்று எழுத்தாளர் பாலகுமாரன் சொல்கிறார்: "புரட்சி என்பது ஓர் ஓவியம் போலவோ மெல்லிய இசைக் கச்சேரி போலவோ அமைவதன்று. புரட்சி என்பது அவமானம், வலி, துக்கம், வேதனை நிரம்பியது. இவைகள் அற்று புரட்சி புரட்சி உருவானதாய்ச் சொல்வது கேலிக்கூத்து. - பதினாறு வருடங்களாய் மனப்பாடம் செய்த வரிகள், கண்ணில் கரை கட்டின. ஜலத்துக்கு நடுவே ஓடின."

பூமிப்பந்தில் புரட்சி என்றதும் உடனே நினைவுக்கு வருபவர் "சே குவேரா". அவர் புரட்சியின் அடையாளம்!

## - கிறிஸ்ரி-

"மீண்டும் ஒரு விடுதலை" ஒரு சிறப்பான மொழிபெயர்ப்பு நாடக நூல். (அசல்-Les Mains Sales-எழுதியவர் Jean Paul Sartre) சந்தர்ப்பம் கிடைக்கும் போது கட்டாயம் படியுங்கள். அந்த நூலில் வரும் இரு முக்கிய பாத்திரங்கள் உய்கோ மற்றும் எதரர். உய்கோ ஒரு போராளி. இவனுக்கு, அவனது இயக்கத்திலேயே இருந்து கொஞ்சம் மாறுபட்ட கருத்துகளோடு தலைமைப் பதவிக்கு போட்டியாக இருக்கும் எதரரை கொல்லும் பணி கொடுக்கப்படுகிறது. அவன் எதரரை கொல்ல அவருடனேயே வாழ ஆரம்பிக்கிறான். எதரருக்கு, உய்கோ தன்னை கொல்லப் போகிறான் என்று தெரியும்! அப்படியான ஒரு உச்சக்கட்டக் காட்சியில் இருவருக்கும் நடக்கும் ஒரு உரையாடலில், பொறி (புரட்சி!) பறக்கிறது!

எதரர்: சிறு பையன் நீ! ஒரு விடயத்தைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறாய். நம் கட்சியில் உள்ளவர்களிலேயே என்னுடைய அணுகுமுறையை ஒத்துக் கொள்ளாதவர்கள் யார் யார் என்று எனக்குத் தெரியும். இன்னொன்றும் நான் உனக்குச் சொல்லி வைக்கிறேன் அவர்கள் எல்லாம் கூட என்னுடைய இனத்தைச் சேர்ந்தவர்களே அன்றி உன் இனத்தைச் சேர்ந்தவர்களில்லை. இதை நீயே விரைவில் புரிந்து கொள்வாய், என் பேச்சுவார்த்தைத் திட்டத்தை அவர்கள் ஆதரிக்கவில்லை என்றால் அதற்குக் காரணம், இது சரியான தருணம் இல்லை என்று அவர்கள் நினைப்பது தான். சூழ்நிலைகள் வேறுவிதமாக இருந்தால் அவர்களே முன்னின்று இதையேதான் செய்வார்கள். ஆனால் நீயோ இதை ஒரு இலட்சியப் பிரச்சினை ஆக்குகிறாய்.



உய்கோ: இலட்சியத்தைப் பற்றி யார் பேசியது?

எதரர்: நீ இதை ஒரு பிரச்சினையாகப் பார்க்கவில்லையா? அப்படியானால் சரி. நான் இப்போது சொல்லப் போவது உனக்குத் தகுந்த சமாதானமாக இருக்கும் பார்: இடைகால அரசருடன் நாம் ஒரு உடன்பாட்டிற்கு வந்தால், அவர் போரை நிறுத்துவார். இல்லிரியா ராணுவம் போரிடாது. ரஷியர்கள் வந்து தங்கள் ஆயுதங்களைக் கிழே போடும்படி செய்யும்வரை சும்மா காத்திருக்கும். ஆனால் நம்மிடையே பேச்சு வார்த்தை முறிந்துபோய் விட்டால், தன் தோல்வி நிச்சயம் என்று அவருக்குத் தெரிந்துவிடும். படைகளை வெறி நாய்களைப் போல் ஏவி இறுதி வரை போரைத் தொடரச் செய்வார். பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் இதில் பலியாக நேரும். இப்போது என்ன சொல்கிறாய்?

(சிறு மௌனத்துக்குப் பின்...) உம்...இப்போது என்ன சொல்கிறாய்? ஒரு லட்சம் மனித உயிர்களை உன் கைப்பேனாவின் ஓர் அசைவுக் கோட்டினால் கொன்றுவிடலாம் என்று சொல்லப் போகிறாயா?

உய்கோ: (வேதனையுடன்) புரட்சியைப் பூக்களைக்கொண்டு செய்ய முடியாது. அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டது என்றால்.....

எதரர்: ஏற்பட்டதென்றால்...

உய்கோ: எக்கேடோ கெட்டுப் போகட்டும் என்று விட்டுவிட வேண்டியது தான்!

எதரர்: பார்த்தாயா! பார்த்தாயா! உனக்கு மனிதர்கள் பற்றி அக்கறை கிடையாது. உன் கவலையெல்லாம் உன் இலட்சியங்கள் பற்றிதான்.

உய்கோ: மனிதர்கள்? நான் ஏன் அவர்களிடம் அன்பு காட்ட வேண்டும்? அவர்களுக்கு என்னிடம் அன்பு இருக்கிறதா?

எதரர்: அப்படி என்றால், நீ ஏன் எங்களுடன் வந்து சேர்ந்தாய்? மனிதர்கள் மேல் அன்பில்லை என்றால், அவர்களுக்காகப் போராட முடியாது.

உய்கோ: நான் கட்சியில் சேர்ந்ததற்குக் காரணம் இதன் பக்கம் நியாயம் இருக்கிறது என்பதால் தான். எப்போது இது நேர்மையின் பாதையில் இருந்து விலகுகிறதோ, அப்போது நான் இதிலிருந்து வெளியேறி விடுவேன். மனிதர்கள் இப்போது எப்படி இருக்கிறார்கள் என்பதைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. அவர்களை எப்படி ஆக்க முடியும் என்பதில் தான் என் கவனம்.



எதரர்: எனக்கு மனிதர்களைப் பிடிக்கும். அவர்கள் இப்போது எப்படி இருக்கிறார்களோ, அதே நிலையில் - அவர்களுடைய வக்கிரமான பலவீனங்கள், மனதின் மலங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கிய நிலையிலேயே. அவர்கள் குரல், கைகளின் கதகதப்பு, அவர்கள் உடலை மூடியிருக்கும் தோல், ஆடைகளால் மூடப்படாத முழு நிர்வாணமான உடல், கவலை தோய்ந்த அவர்கள் பார்வை, அமுக்கி நசுக்கும் சோகத்தையும் சாவையும் எதிர்த்து ஒவ்வொரு நாளும் அவர்கள் நடத்தும் நம்பிக்கையற்ற போராட்டம் - இவை எல்லாமே என்னக்குப் பிடிக்கும். உலக மனித இனத்தில் ஒருவர் அதிகமானாலும் அல்லது ஒருவர் குறைந்தாலும் அதை ஒரு பொருட்டாக நினைக்கிறேன்.

ஆனால் தம்பி, உன்னை எனக்கு நன்றாகத் தெரியும். நீ ஒரு பயங்கரவாதி. உனக்கு மனிதர்களைப் பிடிக்காது. காரணம், உனக்கு உன்னையே பிடிக்காது. தூய்மை என்று நீ பேசுவது சாவைக் குறிப்பது. புரட்சி என்று நினைத்து, நீ கனவு காண்பது வேறு, எங்கள் புரட்சி வேறு. நீ உலகத்தை மாற்ற விரும்பவில்லை. அதை அழித்துவிட விரும்புகிறாய்.

உய்கோ: (எழுந்து கொண்டு.. கடுமையான குரலில்) எதரர்!!!

எதரர்: இது உன் குற்றமில்லை. உன்னைப் போன்றவர் எல்லோரும் இப்படிதான். எந்த அறிவுஜீவியும் ஒரு நிஜப் புரட்சிக்காரன் இல்லை. அவனிலிருந்து அதிகபட்சம் ஒரு கொலைகாரன் தான் உருவாக முடியும்.

நான் இந்த உரையாடலைப் படித்த போது அசந்து போனேன்! 1948 ஆம் ஆண்டு அரங்கேறிய இந்த நாடகம், எப்படி இந்தக் காலத்திலும் பொருந்தி வருகிறது? எத்தனை நாட்டின் விடுதலைப் போராட்டங்களில் இதே உரையாடல் நடந்திருக்கும்?

Pastor Martin Niemöller கூறிய புகழ் பெற்ற வரிகள் இவை:

In Germany they first came for the Communists, and I didn't speak up because I wasn't a Communist.

Then they came for the Jews, and I didn't speak up because I wasn't a Jew.

Then they came for the trade unionists, and I didn't speak up because I wasn't a trade unionist.

Then they came for the Catholics, and I didn't speak up because I was a Protestant.

Then they came for me — and by that time no one was left to speak up.

நமக்காக ஏன் யாருமே வரவில்லை?

# குவான்ரம்...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

பைதகரஸ் சிறந்த கணிதவியலாளர் என்பதை நாம் மறுக்கமுடியாது.

சுழியம் உண்மையில் இந்து அரேபிய எண் தட்டத்தின் மூலமாகத்தான் அறிவியல் உலகிற்கு வந்தது என்கின்றார்கள். அதிலும் சிறப்பாக இந்தியாவின் தமிழர்களாகிய எம்முன்னவர்களின் சொத்துத்தான் பூச்சியம் எனும் சுழியம் என்பது நம்மவர்களினது, பல மேலை நாட்டு ஆய்வாளாகளினதும் கருத்து. பைதகரஸ் கூட தமிழர்களிடம் இருந்துதான் பைதகரசின் தேற்றத்தைப் பெற்றார் என்பதும் பரவலாக அடிபடுகின்ற கருத்து. அதற்கு ஏற்ப, பைதகரசின் தேற்றமானது தமிழர்களின் சூத்திர வடிவில் உள்ளதைக் காட்டுகின்றார்கள். அது உண்மையாக இருக்குமா என்பதனை விட்டுவிட்டு டிமோக்கிரசின் விடயத்தைப் பார்ப்போம்.

கிரேக்கரான டிமோக்கிரசிசும் அறிவைத் தேடி ஓடியலைந்தவர்களில் ஒருவர். ஏத்தியோப்பியா, எகிப்து, எபிரேயம், பாபிலோன் போன்ற இடங்களுக்குச் சென்று அங்கே ஐந்து, ஆறு வருடங்களுக்கு மேலாக தங்கியிருந்து, அவர்களது மொழிகளில் புலமை பெற்று கல்வியை கற்றுக் கொண்டார் எனக் கூறப்படுகின்றது. அவ்வளவுக்குப் பண வசதி படைத்தவராக இருந்திருக்கின்றார். இந்தியப் பகுதிகளுக்கு வந்தாரோ தெரியவில்லை. ஆனாலும் வந்திருக்காலம் என நம்புவதற்கும் இடமுண்டு. இவ்விடயங்களில் இருந்துதான் அணுக்களைப் பற்றியும் பேரண்டம் பற்றியும் அபரிமிதமான அறிவினைப் பெற்றிருக்க வேண்டும் என நம்பப்படுகின்றது. ஏனெனில் பாபிலோனியர்களில் இருந்து அறிவியல் தொடர்ச்சியானதாக அமையவில்லை என்றே கருத வேண்டியுள்ளது. ஒருவேளை டிமோக்கிரசின் கருத்துக்கள் ஏற்கப்பட்டிருந்தால் பாபிலோனியர்கள் இவர்களுக்கு முன்னராக அப்பகுதியில் வந்து குடியேறிய சுமேரியர்களிடமிருந்து தமது அறிவியல் விடயங்களைப் பெற்றுக் கொண்டார்கள் என நம்பலாம். சுமேரியர்களும் வித்தியாசமான அறிவியல் நிலையில் இருந்திருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 5000 ஆண்டு முன்னதாக சிறப்பாக வாழ்ந்தவர்கள் சுமேரியர்கள். பாபிலோனியர்களுடனும் சுமேரியர்கள் கலந்திருக்கின்றார்கள். இந்நாட்களில் பெரிதும் பயமுறுத்தும் செய்தியான டிசெம்பர் 21, 2012 இல் உலகம் அழிந்துவிடும் என்ற செய்திக்கு வலுப்படுத்தும் ஒரு தடயத்தினையும் இந்தச் சுமேரியர்களிடம் இருந்து பார்க்கின்றார்கள். அக்காலத்திலேயே பூமி உருண்டை என்றும் கதிரவனைச் சுற்றி வருகின்றது என்றும் கூறியிருந்தவர்கள். அதையும் விட கதிரவனுக்கு ஒரு பத்தாவது பெரிய கோள் உள்ளதெனவும் இவர்கள் காட்டியிருப்பது இவர்களது குறிப்புகளில் இருந்து தெரிகி ன்றது. இப்போது அந்தப் பெரிய பத்தாவது கோள் கதிரவனின் மற்றய ஒன்பது கோள்களுக்கும் அருகில் வந்து கொண்டிருக்கின்றதாம். மேற்குறிப்பிட்ட அந்த நாளில் அது கதிரவத் தொகுதியில் அருகில் வர புவியிற்கு ஆபத்து வரும் என்பது சிலரது கணிப்பு. விடயம் எப்படியிருப்பினும் சுமேரியர்களினது அறிவி யல் நிலையை இந்தப் பத்துக் கோள்கள வடிவம் காட்டுகின்றது.

எல்லாம் சரி, நீ எங்கேயோ போகின்றாயே என்கின்றீர்களா? குவான்ரம் பிறந்த கதையல்லவா இது. எனவே இயலுமான அளவுக்கு அடி வேரினைத் தேடும் வேலையில் இவையெல்லாம் சிக்கி என்னை ஆச்சரியப்பட வைக்க, உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன், வழி விலகவில்லலை.

அடுத்த தடவையில் மிகுதியைத் தொடருவோம்.





# கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா பெருமையுடன் வழங்கும்

# மகுடம் 2011

பிரபல நடன ஆசிரியர்களின் மாணவர்கள் வழங்கும் நடனங்கள், பாரம்பரிய சங்கீத தாளவாத்திய கச்சேரிகள், நாடகங்கள், திரையிசை நடனங்கள், TVI Supper Star வெற்றியாளர்களுடன் கூடிய Agni இசைக்குழுவின் இன்னிசை மழை.

மார்ச் 26ம் திகதி 2239 லோறன்ஸ் அவுனியு, *East* இல் அமைந்துள்ள *Winston Churchill* கலையரங்கில் காணத்தவறாதீர்கள். எமது இளையோர் அமைப்பில் அங்கத்தவராக இணையும் 100 பேருக்கு மகுடம் 2011 அனுமதிச் சீட்டு இலவசமாக வழங்கப்படும்.

இணைபவர்கள் கொ.இ.க. பழைய மாணவர்கள் அல்லது ஆசிரியர்கள், ஊழியர்களின் வாரிசுகளாகவும், 15 வயதிற்கு 20 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். *khcosacanada@hotmail.com* என்ற மின்அஞ்சலுக்கு உங்கள் விபரங்களை அனுப்பி வைக்கலாம்.

மேலதிக தொடர்புகளுக்கு: 416.296.7037 / 416.788.7102 / 905.554.3306

# கனேடிய மத்திய அரசின் இரு அமைச்சர்கள் அடுத்த தேர்தலில் போட்டியிட மாட்டார்கள்








கனேடிய மத்திய அரசின் அமைச்சரும் Treasury Board இன் தலைவராக பதவி வகிப்பவருமான StockWell Day யும் போக்குவரத்து அமைச்சராக பதவி வகிப்பவருமான Chuck Strahl யும் அடுத்த தேர்தலில் தாங்கள் போட்டியிட மாட்டோம் என்று கூறியுள்ளார்கள். இவர்கள் இருவரும் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆவர்.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தை சேர்ந்த இன்னொரு ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான John Cummins உம் அடுத்த தேர்தலில் தான் போட்டியிட மாட்டார் என தெரிவித்துள்ளார். கனேடிய பிரதமர் Stephen Harper இவர்கள் மூவரும் இதுவரை அரசசேவையில் பணியாற்றிய தற்கு நன்றி தெரிவித்தார்.

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666


Anton Jeeva Arulappu
Broker
(416) 575-5055
Direct
The Proud Sponsor of Children's Miracle Network
RE/MAX Vision Realty Inc. Brokerage.
Each Office Is Independently Owned and Operated
Office: (416) 321-2228
Fax: (416) 321-0002
Email: anton@realtyagent.com
Web: www.antonjeeva.com
2210 Markham Rd., Suite 1, Toronto, ON M1B 5V6

339,900

Markham/Sheppard
Bedrooms: 3+1
Washrooms: 2
Basement: Finished

639,900

Rossland/Salem
Bedrooms: 4
Washrooms: 4
3700 Sqft

335,000

Rathburn/Renforth
Bedrooms: 3+1
Washrooms: 2
Basement: Finished
Sep Enterance

369,900

Old Finch/Harvest Mo
Bedrooms: 3+1
Washrooms: 4
Basement: Finished
Sep Enterance

649,900

Highglen/Middlefield
Bedrooms: 4+4
Washrooms: 7
3300 Sqft

619,900

Markham Rd/Steeles Ave
Bedrooms: 3+1
Washrooms: 2
close to 3500Sqft
Walkout Basement


Traffic Tickets
Criminal Matters
Summary
வாகன விபத்து
Motor Vehicle Accidents
SKT PARALEGAL SERVICE
Kalakalappu Theesan
Member of Law Society of Upper Canada
S.K. Theesan
எஸ்.கே.தீசன்
416-803-5296
sktheesan@gmail.com

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
Virus Removal
Internet Sharing
Computer Tune Up
Computer Repair
அனைத்து கணனி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES

ON THE SPOT
HOME INSPECTIONS INC.
Danny Sripath, B.Sc.
Qualified Home Inspector
Mold Specialist
416.823.3552 / 416.289.0033
onthespothome@yahoo.ca
880 Ellesmere Road, Unit# 203B
Toronto, ON, M1P 2W6